ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

# 2013

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# வருடாந்த அறிக்கை

# 2013

இவ்வறிக்கையானது 1996ஆம் ஆண்டின் 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 30இன் தேவையை பூ ர்த்தி செய்வதற்கு சமா்பிக்கப்படுகின்றது.

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**
தலைமை அலுவலகம்
இல.165, கின்சி வீதி, கொழும்பு-08.

(94) 011 2694925, 2685980, 2685981, 2685339
மின்னஞ்சல் : sechrc@sltnet.lk
இணையத்தளம் : www.hrcsl.lk

பொருளடக்கம்


**தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் இலச்சினை** iv
**ஆணைக்குழுவின் அமைப்பு** v
**தவிசாளரின் செய்தி** vi
**அறிமுகம்** vii

**அத்தியாயம் 01 - மனித உரிமைகளைப் பாதுகாத்தல்**

1.1 முறைப்பாடுகளைக் கையாளுதல் 1
1.2 ஆலோசனை வழங்குதல் 2
1.3 அவசர அழைப்புச்சேவை 2
1.4 முறைப்பாடுகளை வகைப்படுத்துதல் 3
1.5 முறைப்பாடுகளை முடிவுறுத்தல் 4
1.6 பரிந்துரைகள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் சிலவற்றை விபரித்தல் 6
1.7 பங்களாதேஷ் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்துடனான ஒருங்கிணைப்பு 12
1.8 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான பின்தொடர் நடவடிக்கைகள் 12

**அத்தியாயம் 02 - மனித உரிமைகளைப் மேம்படுத்தல்**

2.1 மனித உரிமைகள் தொடர்பிலான கல்வி நிகழ்ச்சித்திட்டம் 14
2.2 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்திற்கான திருத்தங்கள் பற்றி ஆலோசனை வழங்குதல். 15
2.3 விசேட சர்வதேச தின கொண்டாட்டங்கள் 15
சர்வதேச மனித உரிமைகள் தினக் கொண்டாட்டம்
சர்வதேச மகளிர் தினம்
பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம்
சித்திரவதைக்குட்பட்டோருக்கு ஆதரவு அளிப்பதற்கான சர்வதேச தினம்
2.4 சிறுவர் உரிமைகளை மேம்படுத்துதல் 16
2.5 மனித உரிமைகள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ளுதல் 16
2.6 மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நூலகம் 16
2.7 உள்ளகப் பயிற்சி 17

**அத்தியாயம் 03 - மனித உரிமைகளைக் கண்காணித்தல்**

3.1 பொலிஸ் நிலையங்களை பரிசோதித்தல் 18
3.2 வெலிக்கடை மறியற்சாலையில் உள்ள நிலைமைகளை பரிசோதித்தல் 18
3.3 சிறுவர் இல்லங்களை பரிசோதித்தல் 19
3.4 இல்லங்களிலுள்ள சிறுவர்களுடைய தகவல்களைச் சேகரித்தல் தொடர்பிலான புதிய விண்ணப்பம் 20
3.5 தடுப்புக் கட்டளைகளைப் பதிவு செய்தல் 20
3.6 சட்ட வரைபுகளை மேற்பார்வை செய்தல் 21
3.7 தேசிய மொழிக் கொள்கையை கண்காணித்தல் 21
3.8 வெளிநாட்டுக்கு புலம்பெயர்ந்த வேலையாட்களின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் 21
3.9 சட்டவிரோதமாக நாட்டுக்குள் பிரவேசித்த வெளிநாட்டு பிரசைகளைத் தடுத்து வைத்திருக்கும் தடுப்பு நிலையம் - மிரிஹான, இலங்கை 22
3.10 ஆணைக்குழுவின் சொந்தப்பிரேரணைகள் 23
3.10.1 பயணிகள் மற்றும் பாதசாரிகளின் உரிமைகள் தொடர்பிலான தலையீடு 23
3.10..2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடைமைகளை நிறவேற்றும் போது பல்வேறுபட்ட குழுக்களினால் தாக்குதலுக்கு உட்படுதல் 23
3.10.3 வெலிவேரிய ரதுபஸ்வெல கிராமத்தில் நிகழ்ந்த சம்பவம் 23
3.10. 4 ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் நிகழ்ந்த கலந்துரையாடல் 23
3.11 மாகாண சபைத் தேர்தல் -2013 23

**அத்தியாயம் 04 - தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான உறவுகள்**

4.1 சிவில் அமைப்புக்களுடன் செயற்படுதல் 25
4.2 அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு 26
4.3 விசேட கலந்துரையாடல் 27
சனாதிபதியுடனான சந்திப்பு
தேர்தல் ஆணையாளருடனான சந்திப்பு
பொலிஸ்மா அதிபருடனான சந்திப்பு
4.4 சர்வதேச நிறுவனங்களுடனான தொடர்பு 28
பொது நலவாய செயலகத்துடன் செயற்பாடுகளை ஆரம்பித்தல்
ஐக்கிய நாடுகள் ஆணையாளர் தலைமையதியின் இலங்கை விஜயம் மற்றும் ஆணைக்குழுவுடனான சந்திப்பு
4..5 சர்வதேச நிறுவனங்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் 29

சர்வதேச பாராளுமன்ற குழுக்களுடனான கலந்துரையாடல்
பொது நலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கங்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்
தெற்காசிய ஆணையாளர் தலைமையதியினுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்
அமெரிக்க தூர்துவராலய அலுவலகத்தின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்

4.6 வெளிநாட்டு சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுதல் 31

**அத்தியாயம் 05 - பிராந்திய அலுவலகங்களின் செயற்பாடு**

5.0 அறிமுகம் 33
5.1 அம்பாறை பிராந்திய அலுவலகம் 33
5.2 அநுராதபுரம் பிராந்திய அலுவலகம் 35
5.3 பதுளை பிராந்திய அலுவலகம் 39
5.4 மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் 42
5.5 யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம 46
5.6 கல்முனை பிராந்திய அலுவலகம் 49
5.7 கண்டி பிராந்திய அலுவலகம் 53
5.8 மாத்தறை பிராந்திய அலுவலகம் 55
5.9 திருகோணமலை பிராந்திய அலுவலகம் 57
5.10 வவுனியா பிராந்திய அலுவலகம் 58
5.11 புத்தளம் நடமாடும் அலுவலகம் 60

**அத்தியாயம் 06 - மனித வளம் மற்றும் நிதி முகாமைத்துவம்**

6.1 ஆளணி 61
6.2 நிதி ஒதுக்கீடு 63
2013 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு கணக்கு
6.3 ஆணைக்குழு ஊழியர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் 65
6.3.1 விசேட விரிவுரை நடாத்துதல் 65
6..3.2 பயிற்சிக்காக வேறு நிறுவனங்களுக்கு அனுப்புதல் 65
6.3.3. ஆணைக்குழுவில் நடாத்தப்பட்ட பயிற்சிகள் 65
தேசிய நடவடிக்கைகள் தொடர்பிலான பயிற்சி
விசாரணை தொடர்பிலான பயிற்சி
தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல்கள் தொடர்பிலான பயிற்சி
தேசிய மீள் இணக்கம் தொடர்பிலான பயிற்சி
6.3.4 மொழி திறன்களை விருத்தி செய்தல் 66
6.3.5 பல்வேறுபட்ட சமய நம்பிக்கைகள் மற்றும் கலாச்சாரங்களை அறிந்துகொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் 66
சிங்கள தமிழ் புது வருடக் கொண்டாட்ட நிகழ்ச்சி
வெசாக் கொண்டாட்டம்
இந்து நவராத்திரி விழா கொண்டாட்டம்
முஸ்லிம் சமயகொண்டாட்டம்
நத்தார் தினக் கொண்டாட்டம்
6.3.6 சிறு சஞ்சிகை 68
6.4 ஆணைக்குழுவின் ஊழியர் மற்றும் நலன்புரி சங்க செயற்பாடுகள் 68

**ஆத்தியாயம் 07**

2013 இல் மனித உரிமைகள் நிலை 69

**இணைப்புகள்**

01 2013 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் தினக் கொண்டாட்டம் - பிரதான விரிவுரை 72

02. அரச சிறுவர் இல்லங்கள் மற்றும் வேறு நிறுவனங்களிலுள்ள சிறுவர்களின் நிலைமை தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்தலுக்கான விண்ணப்பம் 76

03. வெலிவேரியா, றத்துபஸ்வெல நீர் பிரச்சினை தொடர்பில் ஆணைக்குழுவின் இடைக்கால விசாரணை அறிக்கை 79

04. மாகாண சபைத் தேர்தல்-2013 தேர்தல் உத்தியோகத்தர்கள் / பாதுகாப்பு பிரிவு / பொலிசு உத்தியோகத்தர்கள் தொடர்பிலான வழிகாட்டல்கள் 82

05. சிறைச்சாலைகள் ஆணையாளரினால் 26.07.2013 அன்று அனைத்து சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் 84

## தொலைநோக்கு

சட்டத் ஆட்சியை பாதுகாத்தலும்.மேம்படுத்துதலும் மற்றும் அனைத்து பிரசைகளினதும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தலும் ஆகும்.

## பணிக்கூற்று

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மனித உரிமைக் கொள்கைகளுக்கு அமைவான வகையில் மனித உரிமை பாதுகாப்பு என்ற முறையை விட சிறந்த மனித உரிமைக் கலாச்சாரம் ஒன்றினை உருவாக்குவதன் பொருட்டு அனைவரதும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றினை அபிவிருத்திசெய்யும் பொருட்டு செயற்படுகின்ற அனைத்துப் பிரிவினரதும் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்புடன் இலங்கைப் பிரசைகளுக்காக இலங்கை அரசியலமைப்பின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய சட்டங்கள் மற்றும் பொருத்திணைகளுக்கு அமைவாக சட்டங்களை ஆக்குவதற்கு அரசாங்கத்துக்கு வழிகாட்டுதலும் மனித உரிமைகள் பற்றிய அறிவை அனைத்து வாழ் மக்களுகிடையில் பரப்புதலும் ஆகும்.

## இலச்சினை

சர்வதேச மற்றும் தேசிய மட்டங்களில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் பொறுப்புடைமையானது ஆணைக்குழுவின் இலச்சினையின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. நீல நிறத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுவதாவது மனிதநேயத்தின் உயிரோட்டம் மற்றும் ஆக்கத்திறன் என்பதாகும். இரு கைகள் மூலம் சுட்டிக்காட்டப்படுவதாவது பாதுகாத்தல் மற்றும் அது தொடர்பில் செயற்படுதல் ஆகும். உலகப் பந்தின் மூலம் மனித உரிமைகள் சர்வதேசத்தன்மை மற்றும் சர்வதேச மட்டத்தில் பாகாத்தலுக்குட்படுதல் போன்றவற்றைச் சுட்டிக்காட்டுகின்றது. இலங்கையின் அடையாளத்தின் மூலம் மனித உரிமைகள் தொடர்பில் தேசிய மட்டத்தில் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பில் செயற்படுதலின் அவசியத்தைப்பற்றி வெளிப்படுத்துகின்றது. ஆண் மற்றும் பெண் பிள்ளையொன்றைக் காட்டுவதனுாடாக வெளிப்படுத்தப்படுவதாவது மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு சமத்துவ அடிப்படையில் காணப்படுதல் வேண்டும் எனவும் அந்நோக்கத்துக்காக ஆக்கபுர்மான சுழல் உருவாக்கப்படுதல் வேண்டும் என்பதாகும். அவ்வாறே அதனுள் குறிப்பிடப்படும் குடும்பத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுவதாவது முக்கியமான பிரிவொன்றாக குடும்பமானது கருதப்படுகின்றது என்பதாகும். இறுதியாக சர்வதேச அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளைப் பாதுகாத்தலுக்காக தேசிய மட்டத்திலான செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அர்ப்பணிப்பானது இதனுாடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

## ஆணைக்குழுவின் அமைப்பு



தவிசாளர்

ஒய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த ஆர் பி பெரேரா

### ஆணையாளர்கள்

திருமதி ஜெசிமா இஸ்மயில்

திரு ரி.ஆர்.ஆனந்தராசா

டாக்டர் பேர்ணாட் டி சொய்ஜா

கலாநிதி எஸ்.டபிள்யு.பிரதிபா மகாநாமஹேவா









## தவிசாளரின் செய்தி

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும தாபிக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் நிறுவனமான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளராக 2013 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் செய்தியை வெளியிடுவதனையிட்டு மகிழ்சியடைகின்றேன் என்பதுடன் தவிசாளர் என்ற அடிப்படையில் அது எனது கடைமையுமாகும்.

1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டதும் பாராளுமன்ற பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் நியமிக்கப்பட்டதுமான முதலாவது ஆணைக்குழுவாக இவ்வாணைக்குழு 2011 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. அதன் தவிசாளராக நான் ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து எமது நீண்ட சேவைக்காலத்தில் இலங்கையின் மனித உரிமைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் பாரியளவிலான சேவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை ஓர் முக்கியமான பொறுப்பாகும்.


அச்செயற்பாடுகளிற் சில பின்வருமாறு :-

- ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் இடவசதியினைக் கருத்திற்கொண்டு அது பிறிதொரு இடத்திற்கு மாற்றப்பட்டமை.
- ஊழியர்களின் மொழித் திறன்களை விருத்தி செய்வதற்காக தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கல்விச் செயற்பா டுகளைத் திட்டமிடுதல்
- தேசிய மனித உரிமைகள் திட்டத்தை (2011-2016) செயற்படுத்துவதற்கு ஆணைக்குழுவின் பொறுப்பை நிறைவேற்றுதல்
- பொறுப்புடைய திறத்தவர்களுடன் அவசர சூழ்நிலைகளின் போது தலையிடுவதற்கு கலந்துரையாடுதலை மேற்பெ காள்ளுதல்
- மக்களுக்கு அவசர அழைப்பு இலக்கமான 1996இனை இலகுவான இலக்கமாக ஏற்பாடு செய்தமை.
- பிரதேச மட்டத்தில் இடம்பெறுகின்ற வேலைத்திட்டம் தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் எனது பங்களிப்பை வழங்கியமை
- நடமாடும் அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டமை
- தற்போது செயற்படும் 10 பிராந்திய அலுவலகங்களை விட புதிதாக 6 பிராந்திய நிலையங்களைத் தாபிப்பதன்பொருட்டு ஆரம்ப அடித்தளம் இட்டமை.
- 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய திருத்தங்களை குறிப்பிட்டு அந்த அறிக்கையினை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கை மேற்கொண்டமை.

அதேபோன்று, 2013ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மற்றும் பொது நலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா ஆகியோரின் இலங்கைக்கான விஜயத்தின் போது ஆணைக்குழுவிற்கு விஜயம் செய்ததுடன் ஆணைக்குழுவானது அவர்களின் பாராட்டுதலுக்கும் உட்பட்டது. அவர்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்காக ஒத்துழைப்பை வழங்குவதற்கு உடன்பட்டமையையும் மகிழ்ச் -சியுடன் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ்வாறான அனைத்து பணிகளையும் நிறைவேற்றும் பொருட்டு ஆணைக்குழுவிற்கு 2013 ஆம் ஆண்டு பூராகவும் ஒத்துழைப்பை வழங்கிய அலுவலர் குழாத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல் தொடர்ந்து ஊக்கமளித்த மற்றும் விமர்சனங்களை முன்வைத்த சிவில் அமைப்புக்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் தொழிநுட்பம் மற்றும் நிதி அனுசரணையை வழங்கிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நிகழ்சித்திட்டம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் பொதுச்செயலாளர் அலுவலகத்தின் மனித உரிமைகள் பிரிவிற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யுத்தத்தின் பின்னர் சமாதானமாக வாழ்கின்ற இலங்கை மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சமாதானமான சகவாழ்வொன்றை ஏற்படுத்தும் பொருட்டும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கைகோர்த்து செயற்படுமாறு அனைவரையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.



தவிசாளர்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## அறிமுகம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 1996ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீனமான ஆணைக்குழுவாகும். இவ்வாணைக்குழுவானது இலங்கை தேசிய மனித உரிமைகளுக்கான ஓர் நிறுவனமொன்றாகும். இவ்வாணைக்குழுவானது ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உறுப்புரிமை நாடாக ஐக்கிய நாடுகள் பரிஸ் கோட்பாடுகளுக்கிணங்க தாபிக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் பிரதான பணியாக இலங்கை மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பனவாகும். இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆணைக்குழுவின் விசேடமான தத்துவங்களானவை 1996ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தில் 10ஆம் பிரிவின் கீழ் தரப்பட்டுள்ளவாறு ஆணைக்குழுவின் பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- அடிப்படை உரிமைகள் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுகின்றமையை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், நிறைவேற்று மற்றும் நிர்வாக நடவடிக்கைமுறைகளை மேற்பார்வை செய்தல்.
- அடிப்படை உரிமைகள் தொடர்பில் முறைப்பாடுகளை விசாரணை செய்தல், புலனாய்வு செய்தல் மற்றும் அதன் பின்னர் தீர்வு காணுதல் மற்றும் வேறு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குதல்.
- அரசாங்கத்திற்குச் சட்டவாக்கத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் நிர்வாக வழிகாட்டல்கள் மற்றும் நடபடிமுறைகள் அத்துடன் அடிப்படை உரிமைகளை முன்னேற்றுதலும் பாதுகாத்தலுக்குமான மதியுரை மற்றும் உதவிகளைச் செய்தல்.
- அரசாங்கத்திற்கு சர்வதேச மனித உரிமைகள் நியமங்கள் மற்றும் தராதரங்களுக்கு ஏற்ப தேசியச் சட்டங்கள் மற்றும் நிர்வாக பிரயோகங்கள் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள் தொடர்பில் பரிந்துரைகளைச் செய்தல்.
- அரசாங்கத்திற்கு சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய சர்வதேச ஆவணங்கள் தொடர்பில் ஒப்பமிடுதல் அல்லது இணங்குதல் என்பவற்றின் தேவைப்பாட்டினைப் பற்றி பரிந்துரைகளைச் செய்தல்.
- மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதலுக்காக மனித உரிமைகளுக்கான கல்வியை வழங்குதல்.

ஆணைக்குழுவானது மேலே சொல்லப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு மனித உரிமைகள் தொடர்பிலான இயைபான விடயங்களைப் பற்றிய அறிவு மற்றும் நடைமுறை அனுபவங்களை உடைய 5 பேர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென 3(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகிறது. இந்நியமனமானது 18ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்துக்கிணங்க பாராளுமன்றத்தின் பரிந்துரைக்கமைய சனாதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆணைக்குழுச் சட்டத்தில் குறிப்பிடப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்காக செயலாளர் மற்றும் அலுவலர் குழாமினை நியமிப்பது தொடர்பில் சட்டத்தின் 22ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகிறது. 2010ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதிக்கமைவாக ஆணைக்குழுவின் ஊழியர்களின் எண்ணிக்கை 195 எனவும் அதேபோல் 2013ஆம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 273 ஆகும். 2013ஆம் ஆண்டில் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை 178 ஆகும்.

இலங்கை மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதலுக்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துக்கு மேலதிகமாக 10 பிராந்திய அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதற்கான நிதி ஒதுக்கீடானது அரச பொதுத்திறைசேரியினால் வழங்கப்படுகின்றது. 2012ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியானது 139 மில்லியன் ருபாவாகவிருந்ததுடன் 2013ஆம் ஆண்டில் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற 150 மில்லியன் ருபாவை விட விஞ்சிய தொகையை நிதி ஒதுக்கீடாக பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிட்டியது.

இதனை விட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு நிதி உதவியானது கிடைக்கப்பெற்றது. மேலும் பொதுநலவாய நாடுகளின் செயலாளர் அலுவலகத்தின் மனித உரிமைகள் பிரிவின் ஊடாக இரண்டு வேலைத்திட்டங்கள் நடத்துவதற்காகவும் மற்றும்˙ ஐக்கிய நாடுகள் இராச்சியத்தின் விசேட மாநாட்டில் பங்குபற்றுவதற்கும் நிதி உதவி மற்றும் தொழிநுட்ப ரீதியிலானதுமான அனுசரணையானது கிடைத்தது. அதே போன்று ஆசிய பசுபிக் சம்மேளனத்தின் நிதி உதவியானது வெளிநாட்டு பயிற்சி மற்றும் மாநாடு தொடர்பில் பங்குபற்றுவதற்காகக் கிடைக்கப்பெற்றது.

2011 பெப்ருவரி மாதத்தில் இருந்து 3 ஆண்டுகளுக்காக நியமிக்கப்படும் ஆணைக்குழுவின் காலப்பகுதி 2014ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் முடிவடைந்தது. 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது தாபிக்கப்பட்டதுடன் தாபிக்கப்பட்ட 5வது ஆணைக்குழுவின் இறுதியாண்டில் ஆணைக்குழுவின் வழிகாட்டலின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் இவ்வறிக்கையில் உள்ளடங்குகின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரிவுகளான புலனாய்வு மற்றும் விசாரணை, கண்காணிப்பு மற்றும் மீளாய்வு, கல்வி மற்றும் விசேட நிகழ்சிகள், நிதி மற்றும் நிர்வாகம் போன்ற பிரிவுகளின் தலைவர்களான பணிப்பாளர்கள், பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஏனைய சிரேஷ்ட மற்றும் வினைத்திறனுடைய அலுவலக குழாமின் அனைத்து ஊழியர்களினதும் பூரண ஒத்துழைப்புடன் அதன் பணிகளை நிறைவேற்றியது.

# அத்தியாயம் 01

# மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

## 1.1 முறைப்பாடுகளைக் கையாளுதல்

1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள பணிகளுடன் 10(அ) மற்றும் 10 (ஆ) என்னும் பிரிவுகளுடாக உரிமைகளைப் பாதுபாப்பதற்கான இரண்டு விசேட பணிகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

10(அ) என்னும் பிரிவில் அடிப்படை உரிமைகளானவை அரசியலமைப்பிற்கிணங்க செயற்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் மதிப்பளிப்பதற்காகவும் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல், பின்பற்றுதல் மேம்படுத்துதல் தொடா்பில் நிறைவேற்று நிா்வாக ஒழுங்கு மற்றும் சேவைப்பிரமாணம் போன்றவற்றை மேற்பார்வை செய்தல் வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது.

அத்துடன் 10(ஆ) என்னும் பிரிவில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை தொடா்பிலான முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்தல் மற்றும் விசாரணை செய்தல் அல்லது தீர்வு காணுதல் மற்றும் இணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற வழிகளினூடாக அவற்றைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு அவசியமான தத்துவங்களானவை 11ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டில் மேற்படி பணிகளில் பிரதானமாவை ஆணைக்குழுவின் புலனாய்வு மற்றும் விசாரணை பிரிவின் ஊடாக செயற்படுத்தப்பட்டது. எவரேனும் நபருக்கு அவரது முறைப்பாட்டை கடிதம் அல்லது தொலைநகல்மூலம் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கோ அல்லது பிராந்திய அலுவலகத்திற்கோ மேற்கொள்ளமுடியும். இவ்வாறு முறைப்பாட்டினை மேற்கொள்ளும் நபரின் முறைப்பாடு தொடா்பில் ஆணைக்குழு விசேட கவனம்செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அவற்றுள் முதலில் முறைப்பாடானது ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு அம்முறைப்பாட்டிற்குரிய இலக்கம் மற்றும் பற்றுச்சீட்டு என்பன முறைப்பாட்டாளருக்கு வழங்கப்படும். அதன்பின்னர் இம்முறைப்பாடானது ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்குள் உள்ளடங்குகின்றமை தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்படும்.

அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்பட இருக்கின்றமை தொடர்பாக அறிந்துகொள்ளும்பொருட்டு முறைப்பாடு புலனாய்வு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு அது தொடா்ந்து முன்னெடுக்கப்படமுடியும் எனத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் இயைபான பிரதிவாதிகளின் அறிக்கை அல்லது அவதானிப்புகளை கோரி ஆரம்ப கட்ட விசாரணை நடாத்தப்படும். அதன்பின்னா் முறைப்பாட்டின் எஞ்சிய புலனாய்வு மற்றும் விசரணைகள் தொடர்பில் அதனுடன் தொடா்புடைய பிரதிவாதிகள் மற்றும் முறைப்பாட்டாளருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர்கள் அழைக்கப்படுவாா்கள்.

தலைமை அலுவலகத்தில் அழைப்பாணை ஊடாக மேற்கொள்ளப்படும் அழைப்பானது முறையாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுக்கப்படுவதனால் புலனாய்வு மற்றும் விசாரணைப் பிரிவின் ஊடாக வடிவமைக்கப்பட்ட நடவடிக்கை முறைமைக்கமைய வருடத்தின் ஒவ்வொரு மாதமும் அழைப்பாணை அனுப்புதல் இடம்பெறுகின்றது. துரிதமாக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டியிருப்பின் அதற்கு முன்னுரிமை வழங்கி செயற்படுவதற்கான சந்தா்ப்பங்களும் உண்டு. முதலாம் தரத்துக்கு பிள்ளைகளை சோ்த்தல், சித்திரவதைகள் தொடா்பான முறைப்பாடுகள் மற்றும் முறைப்பாட்டாளரின் விசேட வேண்டுகோள் போன்றன துரித விசாரணைகள் தேவைப்படும் சந்தர்பங்களாகக் கருதமுடியும்.

2013ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் ஆறு சட்ட உத்தியோகத்தர்களும் 11 விசாரணை உத்தியோகத்தர்களும் இருந்ததுடன் சட்ட உத்தியோகத்தர்கள் ஆகக்குறைந்தது 24 முறைப்பாடுகளையும் விசாரணை உத்தியோகத்தர்கள் 20 முறைப்பாடுகளையும் விசாரணை செய்துள்ளனர். அம்முறைப்பாடுகளை விசாரணை செய்யும்போது உத்தியோகத்தர்களினால் ஆற்றப்படவேண்டிய பொதுவான கடைமைகளான தடுப்பு நிலையங்களைப் பரிசோதனை செய்தல், பொதுமக்களுக்கான தினம் ஒன்றை நடாத்துதல், அவசர அழைப்பு பிரயோகம் போன்றவற்றுடன் விசேட கடைமை தினம் தவிர்ந்த ஏனைய வேலைநாட்களில் உரிய விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனினும் ஏதேனும் விசேட விடுமுறைகள் மற்றும் அவசரமான விசேட கடைமைகளின் போது சில உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட கடைமையினால் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை விசாரணைசெய்யும் ஆகக்குறைந்த எண்ணிக்கையானது வேறுபடும். ஆயினும் 2013ஆம் ஆண்டினுள் சராசரியாக மாதமொன்றுக்குக் 250-300 வரையிலான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுள்ளது.

2013ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 4979 ஆகும். இவற்றுள் விடயப்பரப்பிற்குள் வருகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3440 ஆகும். விடயப்பரப்பிற்குள் வராததும் முன்னெடுத்து செல்வதற்கு முடியாமலும் உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1539 ஆகும். 2013 ஆம் ஆண்டு பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 4236 ஆகும். இத்தரவுகள் ஆணைக்குழுவினால் பேணப்படுகின்ற தகவல் களஞ்சியத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இத் தரவேற்றும் நிகழ்வானது அன்றாடம் ஆணைக்குழுவில் இடம்பெறுகின்றது. அவசியமேற்படின் ஆணைக்குழு அத்தகவல்களை பரிசீலிக்கும்.

## 1.2 ஆலோசனை வழங்குதல்

ஆணைக்குழுவிற்கு பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு பொது மக்கள் சமுகமளிக்கின்றனா். மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பிரச்சினைகள் தொர்பில் நிவாரணங்களைத் தேடி வருபவா்களுக்கு அன்றாடம் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காக உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல் மற்றும் அவர்களை அந்நிறுவனங்களுக்கு ஆற்றுபடுத்துதல் போன்றனவும் இடம்பெறுகின்றன. ஆலோசனை பெறுவதற்காக நாளொன்றுக்கு 20-30 பயனாளிகள் வருகை தருவதனால் அன்றைய தினம் கடமையில் உள்ள உத்தியோகத்தா் அது தொடா்பான பணியை மேற்கொள்கின்றாா்.

பிராந்திய அலுவலகங்களிலும் இச்சேவையானது இடம்பெறுகின்றது. உதாரணமாக 2013ஆம் ஆண்டினுள் அம்பாறை பிராந்திய அலுவலகத்துக்கு 885 பேரும் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்துக்கு 458 பேரும் பதுளை அலுவலகத்துக்கு 1167 பேரும் ஆலோசனை பெறுவதற்காக வருகை தந்துள்ளனர்.

## 1.3 அவசர அழைப்பு சேவை

2013 ஆம் ஆண்டில் பொதுமக்களுக்கு 24 மணித்தியால அவசர அழைப்புச் சேவை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 1996 என்னும் இலக்கமானது பொது மக்களுக்கான அவசர அழைப்பு இலக்கமாக அறிமுகப்படுத்தப்பட்டதனால் ஆணைக்குழுவின் பயனாளிகளின் எண்ணிக்கையானது அதிகரித்திருந்தது. அவசரஅழைப்பு சேவையின் ஊடாக கைது செய்தல் மற்றும் தடுத்து வைக்கப்படுதல் போன்றவை தொடர்பில் விரைவான நடவடிக்கை- மேற்கொள்ளப்பட்டுள்ளன.

-

## 1.4 முறைப்பாடுகளை- வகைப்படுத்துதல்

2013 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தின் முறைப்பாடுகளை வகைப்படுத்துதல்

| முறைப்பாடுகளின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆளை விடுதலை செய்தல் | சித்திரவதை | 377 |
| | உடல் மற்றும் உள ரீதியிலான சித்திரவதை | 444 |
| | சட்டவிரோதமாக கைது செய்தல் அல்லது தடுத்து வைத்தல் | 326 |
| | தடுத்து வைத்தல் | 15 |
| | கைது செய்யப்படும்போது இறத்தல் | 03 |
| | காணாமல் போதல் | 27 |
| | கடத்துதல் | 05 |
| | துப்பாக்கியால் சுடுதல் | 04 |
| | படுகொலை | 01 |
| | செயற்பாடு அற்றவை | 519 |
| | தேர்தல்கள் | 03 |
| | | |
| தொழில் | ஆட்சேர்த்தல் | 59 |
| | ஓய்வு பெறுதல் | 09 |
| | ஊழியர் நன்மைகள் | 43 |
| | புதவி உயர்வு | 119 |
| | சேவை நீடிப்பு | 09 |
| | சேவை நிலைமை | 116 |
| | இடமாற்றம் | 148 |
| | சேவையை முடிவுறுத்தல் | 66 |
| | சேவையை இடைநிறுத்துதல் | 48 |
| | ஊழியர் சேம இலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை நிதியம் | 30 |
| | சம்பளம் | 39 |
| | ஓய்வூதியம் | 99 |
| | ஏனையவைகள் | 13 |
| | | |
| கல்வி | பாடசாலை அனுமதி | 236 |
| | பல்கலைக்கழக அனுமதி | 32 |
| | அரச பயிற்சி நிறுவனங்களுக்கான அனுமதி | 05 |
| | கல்விக்கான உரிமை | 30 |
| | உயர் கல்வி கற்கை அல்லது பட்டம் | 01 |
| | சான்றிதழ் தொடர்பான பிரச்சினைகள் | 10 |
| | பாடசாலை அல்லது பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுக்காற்றுப் பிரச்சினை | 18 |
| | பரீட்சைகள் தொடர்பான பிரச்சினைகள் | 23 |
| | அதிபர் தொடர்பான பிரச்சினைகள் | 01 |
| அரச நலன்புரி | நட்டஈடு | 15 |
| | கமத்தொழில் நலன்புரி | 07 |
| | காப்புறுதி | 04 |
| | கடன் பிரச்சினைகள் | 08 |
| சிறுவர்கள் | | 08 |
| மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் | | 01 |
| அடிப்படை வசதிகள் | | |

| | | |
|---|---|---|
| | நீர் | 22 |
| | வீதி | 44 |
| | மின்சாரம் | 43 |
| மொழி உரிமைகள் | | 12 |
| சமய உரிமைகள் | | 05 |
| புலம்பெயர்ந்த வேலையாட்களின் உரிமைகள் | | 37 |
| வாக்குரிமை | | 08 |
| சுகாதாரம் | | |
| | கவனயீனம் | 18 |
| ஆதனம் மற்றும் சொத்து | | 216 |
| சூழல் | | |
| | பொது நோய்கள் | 34 |
| | ஒலி மாசடைதல் | 01 |
| | நீர் மாசடைதல் | 01 |
| வேறு | | |
| | | |
| | பொதுப் போக்குவரத்து | 03 |
| | மோட்டார் வாகனச் சட்டத்தை மீறுதல் | 03 |
| முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகள் | | |
| | அனுமதிப்பத்திரம் | 16 |
| | வருமான வரி பிரச்சினைகள் | 01 |
| **மொத்தம்** | | **4979** |

2013 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அவ்வகைப்படுத்தலானது பிராந்திய அலுவலகங்கள் என்னும் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| | பிராந்திய அலுவலகம் | கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மட்டக்களப்பு | 452 |
| 2 | கல்முனை | 233 |
| 3 | கண்டி | 684 |
| 4 | யாழ்ப்பாணம் | 380 |
| 5 | பதுளை | 302 |
| 6 | அம்பாறை | 139 |
| 7 | மாத்தறை | 648 |
| 8 | திருகோணமலை | 128 |
| 9 | அநுராதபுரம் | 748 |
| 10 | வவுனியா | 396 |
| 11 | புத்தளம் - நடமாடும் அலுவலகம் | 126 |

## 1.5 முறைப்பாடுகளை முடிவுறுத்தல்

2013 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரான ஆண்டிலும் முறைப்பாடு செய்யப்பட்ட முறைப்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான காரணங்களானவை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அவ்வாண்டில் முறைப்பாடுகளை முடிவுறுத்தல் தொடர்பான தரவின் பிரகாரம் பரிந்துரைகளை வழங்குதல் தவிர முறைப்பாட்டாளருக்கு பல்வேறு நிறுவனங்களின் ஊடாக நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டது. அவற்றுள் இணக்கம் காணுதல், விசாரணை செய்யும் சந்தர்ப்பத்தில் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நிவாரணம் வழங்கும் அடிப்படையில் முறைப்பாட்டை வாபஸ் பெற்றுக் கொள்வதற்காக முறைப்பாட்டாளர் இணங்குதல் போன்றன ஆகும்.

அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளமை வெளிப்படையாக உறுதிப்படுத்தப்படும்போது மட்டும் பரிந்துரைகளானவை வழங்கப்படுகின்றன என்பதுடன் அவ்வுறுதிப்படுத்தலானது போதுமானதாக இல்லாதவிடத்து வேறு எவையேனும் நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன.

முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போது அடிப்படை உரிமைகள் மீறுகையானது அவதானிக்கப்படாமல் அல்லது ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்குள் வராதவை என அவதானித்தல், முறைப்பாடுகளை கோப்பிடும்போது கால எல்லை முடிவுற்றதன் காரணமாக முன்னெடுத்து செல்வதற்கு முடியாமை, ஏதேனும் காரணத்தினால் விருப்பமின்மை காரணமாக திறத்தவர்கள் முறைப்பாடுகளை தொடர்ந்து செல்வதற்கு அக்கறையின்மை போன்றவை நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு இயலாத சந்தர்ப்பங்களாக கருதப்படுகின்றன. நீதிமன்றத்தில் அக்காரணங்களின் அடிப்படையில் வழக்கை விசாரித்தல், வேறு அதிகாரத்தினாலோ அல்லது நிறுவனங்களினால் தீர்வு காணப்படுதல் போன்றவையாலும் முறைப்பாடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

வேறு நிறுவனங்களின் விடயப்பரப்பிற்குள் வருகின்ற காரணத்தினால் முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 384 என்பதுடன் இம்முறைப்பாடுகளில் 65 பொலிஸ்மா அதிபருக்கும் 38 தொழில் திணைக்களத்துக்கும் 33 சட்ட உதவி ஆணைக்குழுவுக்கும் 24 அரச சேவை ஆணைக்குழுவுக்கும் எஞ்சிய முறைப்பாடுகள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய இயைபான நிறுவனங்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தில் முறைப்பாடுகளை முடிவுறுத்துதல்

| முடிவுறுத்துவதற்கான காரணங்கள் | 2013 ஆம் ஆண்டில் கோப்பிடப்பட்டவைகளில் முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகள் | முன்னைய வருடத்தினுள் கோப்பிடப்பட்டு 2013 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் அவதானிக்கப்படாமை | 334 | 432 | 766 |
| முறைப்பாடு செய்யும் திறத்தவர்களின் அக்கறையின்மை | 197 | 244 | 441 |
| பரிந்துரைகள் வழங்கப்பட்டவை | 22 | 85 | 107 |
| இணக்கம் காணப்பட்டவை | 38 | 64 | 102 |
| நிவாரணம் வழங்கப்பட்டமை | 95 | 139 | 234 |
| மீளப்பெறப்பட்டவை | 84 | 86 | 170 |
| வேறு நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவை | 358 | 26 | 384 |
| வேறு தீர்வு பெற்றுக்கொடுத்தல் | 10 | 37 | 47 |
| நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | 104 | 62 | 166 |
| ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்குள் வராதவை யென பின்னர் அவதானிக்கப்படுதல் | 513 | 168 | 681 |
| கால எல்லை முடிவுறுதல் | 145 | 5 | 150 |
| **தொகை** | **1900** | **1348** | **3248** |

## 1.6 பரிந்துரைகள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் சிலவற்றை விபரித்தல்

2013ஆம் ஆண்டினுள் விசாரணை செய்து பரிந்துரைகள் வழங்கப்பட்ட விசேடமான முறைப்பாடுகள் சில பின்வருமாறு :-

### 1 அரசியலில் ஈடுபடும் உரிமை மற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள்

HRC / 2193/ 2011
**முறைப்பாட்டாளர் :- பி.ஜி.எம் புத்ததாச**
**பிரதிவாதி :- நவகமுவ பொலிஸ் பொறுப்பதிகாரியும் ஏனையோரும்**

2011.07.17 ஆந் திகதியன்று முறைப்பாட்டாளரான முன்னாள் நகர முதல்வர் மாகாணசபைத் தேர்தலின் வேட்பாளராக தன்னுடைய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது தமது ஆதரவாளர்களுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று இடையூறுகளை ஏற்படுத்தியது என்ற காரணத்தின் அடிப்படையில் இம் முறைப்பாட்டை செய்திருந்தார். தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தாம் சட்டரீதியாக அனுமதி பெற்ற கூட்டமொன்றை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தராமல் அக்கட்சியின் மற்றுமொரு வேட்பாளருக்கு பிரபல அரசியல் செயற்பாட்டாளரின் தலையீட்டுடன் நடாத்தப்பட்ட கூட்டமொன்றுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டமையால் தம்முடைய அடிப்படை உரிமையானது மீறப்பட்டிருப்பதாகவும் அதற்கு உரிய நிவாரணம் பெற்றுத் தருமாறும் முறைப்பாட்டாளர் கோரியுள்ளார். விசாரணை மற்றும் புலனாய்வின் மூலம் ஆணைக்குழுவானது பின்வரும் பரிந்துரைகளை முன்வைத்தது.

1. குறித்த சம்பவத்தில் சட்ட விரோதமான செற்பாடுகளை செய்த ஆளுக்கு எதிராக தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபரினூடாக நடவடிக்கை எடுப்பதற்கு பொலிசார் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. பொலிஸ் மா அதிபரினால் இச்சந்தர்ப்பத்தில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பில் தகுந்த விசாரணைகளை நடாத்தப்படுதல் வேண்டும்.

### 2 வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கான உரிம உரிமையும் உள்ளூராட்சி நிறுவனங்களின் செயலற்றதன்மையும்

**HRC** / 2859/ 2011
**முறைப்பாட்டாளர் :- கே.ரி சத்துரங்க கருணாநாயக்க**
**பிரதிவாதி :- வறக்காபொல பிரதேச சபை**

முறைப்பாட்டாளர் குடிநீர் கருத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு பூர்வாங்க அனுமதியை பெற்றுக்கொள்ளும் நோக்கில் திணைக்களத்தின் அனுமதிக்காக பிரதிவாதிக்கு சமர்ப்பித்திருந்தார். ஆனால் பிரதிவாதி கருத்திட்டத்தில் கட்டிடமொன்றைத் தாபிப்பதற்கான திட்டத்தை அனுமதிக்காமையினால் தான் மன உளைச்சலுக்குட்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாடு தொடர்பில் திறத்தவர்களை அழைத்து ஆணைக்குழுவில் விசாரணை மேற்கொண்டதன் படி அவதானிக்கப்பட்டிருப்பதாவது பிரதிவாதி குறித்த நீர் கருத்திட்டம் ஆரம்பிப்பது தொடர்பில் பிரதேசத்திலுள்ள பொதுமக்களின் எதிர்ப்பு இருந்தமையைத் தெரிவித்து திட்டத்தை அனுமதிக்கவில்லை என்பதாகும். ஆனால் பிரதேச மக்களின் எதிர்ப்பு சம்பந்தமாக உரிய முறையில் ஆராயாமல் பிரதிவாதி உரிய திட்டத்தை அனுமதிக்காது விடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக ஆணைக்குழுவினால் பிரதிவாதிக்கு பின்வருமாறு பரிந்துரையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதாவது முறைப்பாட்டாளரினால் குறித்த தேவைக்கு கட்டிடத்தை தாபிப்பதற்கான திட்டத்துக்கு அனுமதி கோரி அனுப்பிய போதிலும், பிரதிவாதி தரப்பினால் கட்டிடத் திட்டத்தை அனுமதிப்பதற்கான பிரமாணத்தை பின்பற்றாமையானது 1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 12 (1) இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் பாதுகாப்பு போன்ற அடிப்படை உரிமையை மீறுவதால் முறைப்பாட்டாளருக்கு கட்டிடத் திட்டத்தை அனுமதிக்கும் செயற்பாட்டு பிரமாணத்தை பின்பற்றிக்கொண்டு அவசியமான சட்டரீதியலான அனுமதி வழங்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

## 3. அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமை மற்றும் மக்கள் பிரதிநிதித்துவத்திற்கான உரிமை

**HRC / 1971/2011**
**முறைப்பாட்டாளர் :- டிரான் அலஸ்**
**பிரதிவாதி :- தேர்தல் ஆணையாளர் அலுவலகம்**

முறைப்பாட்டாளர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றை செய்ததுடன் தாம் உறுப்பினராகவுள்ள சனநாயக கட்சியினை பதிவு செய்வதற்காக தேர்தல் ஆணையாளருக்கு செய்யப்பட்ட விண்ணப்பமானது தேர்தல் ஆணையாளரினால் இரண்டு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். அவ்விரண்டு காரணங்களாவன சனநாயக கட்சியின் செலவினங்களுக்கான கணக்கு கூற்றைச் சமர்ப்பிக்காமை மற்றும் கட்சியின் கொள்கை விளக்கத்தை சமர்ப்பிக்காமை என்பவையாகும்.

விசாரணையின்போது முறைப்பாட்டாளர் கூறியதாவது தாம் கட்சியின் கொள்கை விளக்கத்தை சமர்ப்பித்துள்ளார் எனவும் தேர்தல் ஆணையாளர் சரியான முறையில் அதனை பரிசீலனை செய்யவில்லை எனவும் கணக்கு கூற்றொன்று நிதியாண்டின்போதே சமர்பிக்கமுடியும் எனவும் தம்முடைய கட்சியானது மிகவும் குறுகிய காலத்தில் தாபிக்கப்பட்டதால் காணக்காய்வு செய்யப்பட்ட கணக்கை சமர்ப்பிக்க முடியவில்லை என்பதனை ஆணையாளருக்கு தெளிவுபடுத்தியதாகவும் அது சம்பந்தமாக ஆணையாளர் கவனத்திற் கொள்ளாமல் கட்சியை பதிவு செய்வதனை நிராகரித்துள்ளார் எனத் தெரிவித்ததுடன் கட்சி உறுப்பினர்களின் உறுப்பாண்மை தொடர்பில் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடு தொடர்பில் ஆணைக்குழுவின் முன்னர் விசாரணை நடாத்தப்பட்டபோது கண்டறியப்பட்டுள்ளதாவது தேர்தல் ஆணையாளர் சனநாயக் கட்சியினை பதிவு செய்தலை நிராகரித்தமைக்கான காரணங்களில் ஒன்று பதிவு செய்வதன் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுடன் கட்சியின் கொள்கை விளக்கத்தை சமர்ப்பிக்காமை எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் கட்சியினுடைய யாப்புடன் இணைக்கப்பட்டு அது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதாகும்.

சனநாயக் கட்சி கடந்த வருடத்தில் கணக்கறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு அக்கட்சியைத் தாபித்த உறுப்பினர்கள் சிலர் தகமையற்றவர்கள் என்பதுடன் பொதுமக்களின் வாக்குகளின் மூலம் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற மக்கள் பிரதிநிதிகளில் சிலரும் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் பலரும் உறுப்பாண்மையைக் கொண்டுள்ள புதிய கட்சியை ஆரம்பித்து அதனைப் பதிவு செய்யும்பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டவற்றை ஆணைக்குழுவின் முன்னர் உறுதிப்படுத்துவதற்கு முறைப்பாட்டாளரான திறத்தவருக்கு இயலுமாக உள்ளது. அதற்கமைய சனநாயக் கட்சியானது பதிவு செய்யும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணபப்படிவத்தை மீண்டும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் படி பிரதிவாதியான திறத்தவருக்கு ஆணைக்குழுவானது பரிந்துரை செய்தது.

## 4. தடுத்து வைக்கப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாத்தல்

**HRC / 2650/2013**
**முறைப்பாட்டாளர் :- சட்டதரணி எம்.தானேஸ்வரன்**
**பாதிப்புற்ற திறத்தவர்:- சுந்தரலிங்கம் தினேஸ்வரன்**
**பிரதிவாதி: சிறைச்சாலை உத்தியோகத்தர்**

சட்டத்தரணி எம்.தானேஸ்வரனால் முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதில் பாதிப்புற்ற திறத்தவர் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் சாகும்வரையிலான உண்ணாவிரதமொன்றை ஆரம்பித்திருப்பதாகவும் அவர் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அதில் மனநிலை சிகிச்சைக்கு அனுப்புவதற்கு சிறைச்சாலை அத்தியட்சகர் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. இதனால் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் விரைவாக தலையிட்டு விசாரணையொன்றை ஆரம்பித்ததுடன் உரிய திறத்தவரின் வாக்குமூலத்தையும் பதிவு செய்தனர்.

இத்தடுத்துவைக்கப்பட்டவர் விடுதலை செய்யும் படி கோரி மீண்டும் மீண்டும் உண்ணாவிரதத்தினை செய்து கொண்டிருப்பதாகவும் தற்போது அவர் 2013.07.25 ஆந் தேதி வரைக்கும் 12 நாட்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாகவும் விசாரணையின் போது அவதானிக்கப்பட்டது.

இத்தடுத்து வைக்கப்பட்டவரை விடுதலை செய்யும் படி அல்லது புனர்வாழ்வு அளிக்கும் படி கேட்டு இதற்கு முன்னரும் மொனறாகலை மற்றும் அம்பாந்தோட்டை சிறைச்சாலைகளில் சாகும் வரையான உண்ணாவிரதம் நடைபெற்றது எனவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் அவர்களின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்ததுடன் சிறைச்சாலையில் அவருக்கு ஏதேனும் தாக்குதல் அல்லது ஏதேனும் அநியாயம் விளைவிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொண்டதுடன் அவ்வாறான பிரச்சினைகள் இடம்பெறவில்லை எனத் தெரிவித்ததுடன் அவரை விரைவாக

விடுதலை செய்யுமாறும் கேட்டுக்கொண்டனர். இச்சந்தர்ப்பத்தில வழக்கு நடவடிக்கையை விரைவாக்குவதற்கு சட்டமா அதிபருக்கு அறிவிப்பதற்கு ஆணைக்குழு இணங்கியது.

## 5. அவசர கால நிலைமையின் போது கைது செய்தல்

**HRC / 1685/ 2013**
**முறைப்பாட்டாளா :- ஏ.ஏ சாலி**
**பிரதிவாதி :- குற்ற புலனாய்வு திணைக்களம் பொலிஸ் திணைக்களம்**

அரசியல் செயற்பாட்டாளரும் முன்னாள் கொழும்பு மாநகர சபையினுடைய உப நகர சபைத் தலைவருமான அசாத் சாலி என்பவரின் கைது தொடர்பில் அவருடைய மகளால் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று முறையிடப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமையால் ஆணைக்குழுவின் குழுவொன்று அவருடைய நிலைமைகளை ஆராயும்பொருட்டு அங்கு சென்றது. கைது செய்யப்பட்டவர் உணவு மற்றும் அவருடைய மருந்துகளை உண்ணாமல் இருப்பதாகவும் அவருடைய உறவினர்கள் அவரின் அருகில் இருந்து கொண்டு அவரைக் கண்காணித்துக்கொண்டு இருக்கின்றனர் எனவும் ஆணைக்குழு கண்டறிந்தது.

அசாத் சாலி ஆணைக்குழுவிடம் தாம் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் தனக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும் ஆகையால் தன்னை நிபந்தனைகளின்றி விடுதலை செய்யும்படியும் கேட்டுக் கொண்டார். ஆணைக்குழுவானது உடனடியாக குற்ற புலனாய்வு திணைக்கத்திடம் அது தொடர்பில் புலனாய்வு செய்த போது அங்கு அவர் தடுப்புக்கட்டளையின் படி கைது செய்யப்பட்டுள்ளார் என` அறியக்கிடைத்தது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொள்கைக்கமைவாக அதிகாரம் உடையவர்கள் எந்தவொரு தடுப்புக் கட்டளையையும் ஆணைக்குழுவுக்கு அறியத்தருதல் தொடர்பில் பொறுப்புடையவராதல் வேண்டும் . ஆனால் அது இடம்பெறவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. எனவே ஆணைக்குழுவானது அக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்தும் தொடர்பில் கவனம் செலுத்தியது.

## 6. நிர்வாக ஒழுங்கை மறுசீரமைப்பதன் மூலம் தொழிற் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்

**HRC / 2571/12**
**முறைப்பாட்டாளா :- பி.சிவராஜ் உட்பட்ட குழுவினர், சிவில் பாதுகாப்பு பிரிவு நிலையம் வவுனியா**
**பிரதிவாதி: பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ் மா அதிபர் , பொலிஸ் தலைமையலுவலகம், பணிப்பாளர் தலைமையதிபதி, சிவில் பாதுகாப்பு படை, செயலாளர், சட்ட ஒழுங்கு அமைச்சு.**

இம்முறைப்பாட்டாளர்கள் 1989.01.18 ஆந் தேதிய 541/90 ஆம் இலக்க வர்த்தமானியின் கீழ் நியமிக்கப்பட்ட சுதந்திரமான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆவார். வர்த்தமானியின் பிரகாரம் இவ் உத்தியோகத்தர்கள் இணைந்த பொலிஸ், உப சேவை உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் நன்மைகளைப் பெறுவதற்கு உரிமையுடையவர்கள். இவ்வுரிமை கிடைக்கப்பெறாமையால் HRC/1852/00 இன் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளதுடன் 2013.12.16ஆந் தேதி அந்நன்மைகளை பெற்றுக் கொடுக்கும்படி ஆணைக்குழுவானது பரிந்துரை செய்திருந்தும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று முறைப்பாட்டாளர்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தனர். அதற்கமைவாக இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரை சந்தித்து நீண்டதொரு புலனாய்வை மேற்கொண்டதற்கமைவாக அவா் மேலதிக விடயங்களை மீண்டும் பரிசீலனை செய்து பின்வரும் பரிந்துரைகளை மீண்டும் வழங்கினார்.

1. சுதந்திர சிவில் பாதுகாப்பு பிரிவு தற்போது சேவையில் சேர்க்கப்பட்டுள்ள 68 பேரும் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்களாக சேர்க்கப்படுதல் வேண்டும்.

2. அவர்களுடைய பழைய சேவைக்காலமானது கணக்கிலெடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சேவைக் காலத்தை ஓய்வூதியத்துக்கும் கணக்கிலெடுக்கும் பொருட்டு சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

3. அவர்களுடைய கடந்த சேவைக் காலத்தினை அரச சேவைக் காலமென்பதால் அவ் ஓய்வூதியத்தை பெறுவதன் பொருட்டு கணக்கிலெடுப்பதற்கு பொலிஸ் திணைக்களத்தினூடாக வேண்டுகோள் விடுக்கப்படுதல் வேண்டும்.

4. பழைய சேவைக் காலம் தொடர்பாக முறைப்பாட்டாளர்களினால் ஓய்வூதிய நிதியானது நிதியத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் உரிய சுற்றுலா மற்றும் உதவிப் பணம் என்பனவும் வழங்கப்படுதல் வேண்டும்.

இதற்கமைவாக இது தொடர்பில் சட்ட ஒழுங்கு அமைச்சின் செயலாளரால் அமைச்சரவை பத்திரமானது சமர்பித்து மேற் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 7. வீட்டு உரிமையை உறுதிப்படுத்துதல்

HRC / 1282/13

**முறைப்பட்டாளர்** :- **ஆர்.பி.தனுக்க உட்பட்ட ஏனையோர், புகையிரத வதிவிடம், தெமட்டகொட**
**பிரதிவாதி** :- **செயலாளர் போக்குவரத்து அமைச்சு , புகையிரத பொது அத்தியட்சகர், புகையிரத திணைக்களம், அத்தியட்சகர் தலைமையதிபதி சனாதிபதி விசாரணைப்பிரிவு**

சேவை நோக்கத்தில் புகையிரத திணைக்களத்தில் கடமையாற்றும் முறைப்பாட்டாளர்களுக்கிடையே வீடு பகிர்ந்தளித்தல் ஒழுங்கான முறையில் இடம்பெறவில்லை என்று செய்யப்பட்ட முறைப்பாடு காரணமாக ஜனாதிபதி விசாரணை பிரிவினூடாக அந்த வீடுகளிலிருந்த நபர்களை வெளியேற்றி வேறு நபர்களுக்கு அவற்றை வழங்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளதனாலேயே இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக புகையிரத திணைக்களத்தினால் பல தடவைகள் குழுக்கள் அமைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக அறியமுடிகிறது. இவ்விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தவிசாளரைச் சந்தித்து ஆராய்ந்தபோது புகையிரத திணைக்களத்தினால் வீடு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நடைமுறையில் சட்டத்துக்கு முரணான செயல் எதுவும் இடம்பெற்றதாக ஆணைக்குழுவிற்குத் தென்படவில்லை. அதற்கமைவாக முறைப்பட்டாளர்களுக்கு அங்கே வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும்படி ஆணைக்குழு பரிந்துரை செய்தது.

## 8. கைது செய்யும் முன்னர் அடையாளத்தினை உறுதிப்படுத்தல்

HRC / 2489/11

**முறைப்பட்டாளர்** :- **எச்.ரி.எஸ். ரூபசிங்க**
**பிரதிவாதி** :- **உ.பொ.ப திரு நாணயக்கார,பொலிஸ் நிலையம், கேகாலை.**
**பொ.ச 58403 திரு விஜேசூரிய,பொலிஸ் நிலையம், கேகாலை.**

முறைப்பாட்டாளர் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டு கூறியதாவது நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கொன்றின் பிடியாணைக்கு தன்னை கைது செய்துகொண்டு சென்றதாகவும் தனக்கெதிராக வழக்கொன்று இல்லை என்றும் குறிப்பிட்ட வழக்கிற்குரிய நபர் தான் இல்லை என்பதுமாகும். முறைப்பாட்டாளரின் பெயரும் பிடியாணையில் குறிப்பிடப்பட்ட பெயரும் ஒரேமாதிரியாக இருந்தபடியால் இந்த கைது இடம்பெற்றுள்ளது.

பிடியாணைக்குரிய நபர்களைக் கைது செய்யும்பொழுது ஏற்படுகின்ற இவ்வாறான தவறுகள் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு அடிக்கடி முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவது கண்காணிக்கப்பட்டு ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு பின்வரும் ஆலோசனைகளை வழங்கியுள்ளது:-

1. கைது செய்யப்படும் நபர்கள் சரியாக அடையாளம் காணப்படுதல் வேண்டும்.

2. கைது செய்யப்பட்ட நபர்களுடைய அடையாளம் காணுகையானது சாட்சிகளூடாக உறுதிப்படுத்தப்படுவதுடன் வாக்கு மூலம் பெறப்படுதல் வேண்டும் என்றும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

## 9. புலம்பெயர் தொழிளார்களின் குடும்ப அங்கத்தவர்களின் சமூகப்பாதுகாப்பு

HRC / 2586/12

**முறைப்பட்டாளர் : திருமதி பி.எம்.பழனி**
**பிரதிவாதி : தவிசாளர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்**

முறைப்பாட்டாளரின் மகள் ஜோர்தானில் வீட்டுப் பணிப்பெண்ணாக சேவையாற்றிக் கொண்டிருந்தபோது 2007.03.19 ஆம் திகதி இறந்துவிட்டார். அவருக்கு 3 பிள்ளைகள் இருந்ததுடன் அவருடைய மூத்த மகளை கணவன் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி கொலை செய்ததினால் தற்பொழுது அவர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டிலே இறந்தபடியால் தனது மகள் மூன்று இலட்சம் ரூபா (ரூபா.300,000.00) நட்டஈட்டுக்கு உரித்துடையவர் என்பதுடன் அதில் ரூபா 15,0000. 00 இினை தற்பொழுது உயிர் வாழ்கின்ற பிள்ளைகள் இருவருக்கும் பிரித்து வழங்கியதுடன் மிகுதி ரூபா 15,0000.00 இனை சட்டப்படியான கணவருக்கு வேறாக்கியும் வைக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டாளர் இதுவரைக்கும் அக்கணவர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதனால் தனது மகளினுடைய உயிர் வாழ்கின்ற இரண்டு பிள்ளைகளுக்கும் ரூபா 150,000.00 இனைப் பெற்று தரும்படி கோரினார்.

இங்கு ஆணைக்குழுவினால் சிறுவர் உரிமைகள் பட்டயத்தின் படி கணவருக்கு வேறாக்கப்பட்ட ரூபா150,000. 00 இனை பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பரிந்துரை செய்தமையுடன் சிறைத்தண்டனைக்கு முன்னர் இறந்தவருடைய கணவர் தமது பிள்ளைகளை பராமரிப்பதற்கு எந்த வித ஒழுங்கையும் மேற்கொள்ளவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

## 10. கல்வி உரிமைகளைப் பாதுகாத்தல்

HRC / 3813/11

**முறைப்பட்டாளர் : சில்வெஸ்டர் பெரேரா**

**பிரதிவாதி: அதிபர், றோமன் கத்தோலிக்க பாடசாலை, கலமுல்ல, வலய கல்வி பணிப்பாளர் , களுத்துறை, திட்டமிடுதல் பணிப்பாளர், வலய கல்வி அலுவலகம் களுத்துறை, செயலாளர் மாகாண கல்வி திணைக்களம் , மேல் மாகாணம்., பிரதம செயலாளர், பிரதம அமைச்சு அலுவலகம் மேல் மாகாணம்.**

முறைப்பாட்டாளர் முறைப்பாட்டினூடாக தெரிவித்துள்ளதாவது கலமுல்ல றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 7ம் வகுப்பிலிருந்து மேலே படிப்பதற்கு கத்தோலிக்க பிள்ளைகளினுடைய கல்வி பெறும் உரிமை மீறப்பட்டுள்ள நிலைமையைப் பற்றியதாகும். இந்தப் பாடசாலையில் முதலாம் வகுப்பிலிருந்து 11 ஆம் வகுப்பு வரை வகுப்புக்கள் இடம்பெறுவதுடன் 2005 ஆம் ஆண்டு பாடசலைகளை ஒன்றிணைத்தல் சுற்றறிக்கையொன்றின் காரணமாக 6ஆம் வகுப்பிலிருந்து மேலே வகுப்புக்களை நடாத்துதல் இரத்துச்செய்யப்பட்டிருந்தது. அதற்கமைவாக பெருந்தொகையான மாணவர்கள் அருகிலுள்ள பௌத்த பாடசாலைகளுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் அங்கு செல்வதற்கு விரும்பாத கத்தோலிக்க பிள்ளைகள் 14 பேர் வரையில் வீட்டில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் பாடசலைகளை ஒன்றிணைத்தல் சுற்றறிக்கை இல்லாதொழிக்கப்பட்டதனால் 2010 ஆம் ஆண்டு பெற்றோர்களினுடைய தொடர்ச்சியான வேண்டுகோளின் அடிப்படையில் 6ஆம் வருடத்திற்கு வகுப்புக்களை நடாத்துவதற்கான அனுமதியும் கிடைத்தது. தற்பொழுது அங்கு பிள்ளைகள் 7ஆம் வருடத்தில் கல்வியை தொடர்வதாகவும் அவ்வருடத்தில் வகுப்பை நடாத்திச் செல்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை என்று பிரதிவாதி குறிப்பிடுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு பாடசாலைகளை ஒன்றிணைத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் கட்டுக்குருந்த ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் களமுல்ல ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளில் 1ஆம் ஆண்டிலிருந்து 6ஆம் ஆண்டு வரைக்குமான வகுப்புக்களை களமுல்ல ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடாத்துவதற்கும் 6இலிருந்து 11 வரைக்கும் வகுப்புக்களை கட்டுக்குருந்த ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடாத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் கட்டுக்குருந்த பாடசாலை பெற்றோர்களினுடைய எதிர்ப்பின் காரணமாக 1ஆம் ஆண்டிலிருந்து 6 ஆம் ஆண்டு வரைக்கும் மீண்டும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் களமுல்ல ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் 6ஆம் ஆண்டிலிருந்து 11 ஆம் ஆண்டு வரைக்கும் வகுப்புக்களை நடாத்துவதற்கான உரிமை வழங்கப்படவில்லை என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் கல்வி கற்கும் பெரும்பாலானோரின் பெற்றோர்கள் மிகவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட கத்தோலிக்க மதத்தைக் கொண்ட குறைந்த வருமானம் உடைய மக்கள் என அறியப்பட்டுள்ளது. அதற்கமைவாக அதிக செலவில் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கு நேர்ந்துள்ளமையால் அநேகமான பிள்ளைகளினுடைய கல்வியில் வீழ்ச்சியேற்பட்டுள்ளதென்றும் ஆணைக்குழுவினால் அறியப்பட்டுள்ளது. அதனால் சிறுவர்களின் கல்வி உரிமையானது மறுக்கப்படுகின்றதென்று ஆணைக்குழு கண்டறிந்துள்ளதால் பின்வரும் பரிந்துரைகளைச் செய்கின்றது.

கலமுல்ல றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்கின்ற பிள்கைளின் கல்வி நடவடிக்கையானது 6ஆம் வகுப்பு தொடக்கம் 9ஆம் வகுப்பு வரைக்கும் பெற்றுக் கொடுத்து ஆசிரியர்களினால் நடத்தப்படுகின்றபடியினால் இந்த முறைப்பாட்டுக்கான நிவாரணமாக ஆகக்குறைந்தது 2 ஆசிரியர்களையாவது வழங்கி இவ்வகுப்புகளை நடாத்துவதற்கு அனுமதியை வழங்கும்படி பிரதிவாதிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

## 11. ஒழுங்குபடுத்தப்பட்ட மாகாண நிர்வாக செயற்பாடுகள் மற்றும் மொழி உரிமைகளை உறுதிப்படுத்துதல்

HRC / **ஆவு** / 227/07

**முறைப்பட்டாளர் : எச்.கே.அஜித் புஸ்பகுமார**

**பிரதிவாதி: பணிப்பாளர் நாயகம் நகர அபிவிருத்தி அதிகாரசபை, செத்சிறிபாய பத்தரமுள்ள தலைவர் மற்றும்செயலாளர் போப்பே போத்தல பிரதேச சபை கலகான காலி**

முறைப்பாட்டாளர் ஆணைக்குழுவிற்கு முறையிட்டுள்ளதாவது போப்பே, போத்தல பிரதேச சபையினால் தான் சமர்ப்பித்த காணி பகிர்ந்தளித்தல் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதாகும். விசாரணையின்போது அவதானிக்கப்பட்டதாவது பிரதேச சபையினால் நீர், மின்சாரம் மற்றும் உள்ளக வீதி என்பன வழங்கப்படாமையினால் உரிய ஒழுங்குபபடுத்தற் சான்று பத்திரம்' உரிய. முறையில் வழங்கப்படவில்லை என்பதாகும். நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டதாவது அவ்விடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்துக்கு மின்சார வசதி உள்ளதுடன் குழாய் நீர் வசதி பிரதேச சபை வீதியில் உள்ளபடியால் அபிவிருத்தியாளர்களுக்கு இலகுவாக உரிய சேவை வசதிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக ஒழுங்குபடுத்தற் சான்றிதழ் வழங்குதலுக்கு இவ்வதிகார சபைக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்பதாகும். எனினும் பிரதேச சபை மேலும் தெரிவிப்பதாவது .உரிய காணிக்கு நீர் மற்றும் மின்சார வசதியை வழங்கியதன் பின்னரே காணித் திட்டத்துக்கு அனுமதி வழங்க முடியும் என்பதாகும்.

நகர அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதற்கு உரிய ஏனைய ஒழுங்குவிதிகளின் ஊடாக இடத்தை பகிர்ந்தளித்தலானது நீர், மின்சார வசதிக்காக மாற்றப்படமுடியாது என்பது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அனுப்பப்பட்ட ஆவணங்களின் ஊடாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக ½ ஏக்கர் காணி அல்லது அதற்கு குறையும் போது உரிய காணித்துண்டம் தொடர்பில் மின்சாரம் மற்றும் நீர் பெற்றுக்கொள்ளமுடியுமெனின் அவை உள்ளக வீதிகளுக்கு வழங்குதல் தவிர்ந்த அக்காணித்திட்டத்துக்கு அனுமதியை வழங்குதல் பொருத்தமானது என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவினால் ஏனைய நகர அபிவிருத்தி அதிகாரசபைகளின் அதிகார எல்லைக்குள் நீர் மற்றும் மின்சாரம் ஆகியன கட்டாய தேவைப்பாடுகள் என விசாரணையின் போது அவதானிக்கப்பட்டது. அதிலிருந்து அவதானிக்கப்பட்டதாவது நீர் மற்றும் மின்சார உள்ளக வழங்கல்களுக்கு கட்டாய தேவைப்பாடாக சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படவில்லை.

ஏதேனும் ஆதனத்துக்கு நீர், மின்சாரம் வழங்கப்படுதலானது உரிய ஒப்பந்தக்காரர்களின்மூலம் அதன் சந்தைப் பெறுமதி கூடுதலாக காட்டுதல் காணப்படுகின்றது. காணியை கொள்வனவு செய்ததன் பின்னர் மேலதிக அபிவிருத்திகளைச் செய்வதற்கு இலகு விலைக்கு குறித்த காணியை பெற்றுக்கொள்வதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் இல்லை எனவும் ஆணைக்குழு அவதானித்தது. இதனால் நியாயமான விலைக்கு காணியை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் பொது மக்களுக்கு இல்லாமல் போகின்றது.

இதற்கமைவாக பொது வானதும் நிலையானதுமான சட்டம் இல்லாதவிடத்து அது தொடர்பில். நிலையான சட்டத்தையும் ஒழுங்குகளையும் அறிமுகப்படுதாமல் முறையான செயற்பாடுகளுக்கு அமைவாக அப்போது மக்களின் அனுகூலங்களின் பொருட்டு எல்லோரையும் இணைத்துக்கொள்ளாமல் போப்பே போத்தல பிரதேச சபையானது திறனற்ற வகையில் செயற்படுவதனால் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையினை மீறியுள்ளதாக ஆணைக்குழுவானது கண்டறிந்தது. அதற்கமைவாக முறைப்பாட்டாளருக்கு ஒழுங்குபடுத்தற் சான்றிதழ் வழங்குதல் தொடர்பில் பிரதேச சபை செயலாளருடைய சேவைப் பிரமாணத்தைக் கண்டறிந்து ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் படி மாகாண நிருவாக ஆணையாளருக்கு பணிப்பு வழங்குதல் மற்றும் இலங்கைக்கு பொதுவான காணித்திட்டம் அனுமதித்தல் நடைமுறைகள் தொடர்பில் மிகவும் தெளிவான முறையில் ஆக்கப்படும் சட்ட கோட்பாடுகளை வரைந்ததன் பின்னர் எல்லாப் பிரசைகளுக்கும் அவை பற்றி அறியப்படுத்தலுக்காக மும்மொழிகளிலும் அரச இணையத்தளம் மற்றும் பிரதேச சபையில் காட்சிக்கு விடுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையானது நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும் எனவும் ஆணைக்குழுவானது பரிந்துரை செய்தது.

### 1.7 பங்களாதேஷ தேசிய மனித உரிமைகள் நிறுவனத்துடனான ஒருங்கிணைப்பு

HRC / 3125 / 2012

**முறைப்பாட்டாளர் : ஆர்.பி. மிர்சாடின்**

**பிரதிவாதி : வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

ஒரு நாள் பெண்ணொருவர் தம்முடைய கணவருடன் ஏற்பட்ட குடும்ப பிரச்சினை காரணமாக ஆணைக்குழுவுக்கு வருகை தந்து முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டார். முறைப்பாட்டில் கூறப்பட்டதாவது 14வயதுடைய தமது மகளை பங்களாதேஷ் பிரஜையான தமது கணவர் தமது பிள்ளையினுடைய விருப்பத்துக்கு மாறாக அந்நாட்டுக்கு அழைத்துசென்றுள்ளார் என்றும் மற்றைய இரண்டு பிள்ளைகளும் தமது கட்டுக்காப்பில் உள்ளனர் என்பதுடன் மூத்த பிள்ளையினுடைய பாதுகாப்பு தொடர்பில் தாம் கடும் வருத்தத்துக்குட்பட்டுள்ளார் என்பதுமாகும். முறைப்பாட்டாளர் தமது பிள்ளையை மீண்டும் தமது பொறுப்பில் எடுப்பதற்கு ஆணைக்குழுவை தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். இப்பிரச்சினையானது ஆணைக்குழுவினுடைய விடயப்பரப்பிற்குள் வராதவிடத்தும் ஆணைக்குழுவானது ஆரம்ப கட்டமாக பொலிஸ் திணைக்களத்துக்கு முறைப்பாட்டை செய்வதற்கு முறைப்பாட்டாளருக்கு ஆலோசனை வழங்கியதுடன் பொலிஸாரினால் இடம்பெற்ற விசாரணையின் பின்னர் பொலிஸார் ஊடாக சர்வதேச பொலிஸார் மூலம் (INTERPOL) இப்பிரச்சினையானது பங்களாதேஷ் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டு அதன் ஊடாக பிள்ளையினுடைய நிலைமையானது ஆராயப்பட்டது. தமது கணவர் தொலைபேசி ஊடாக தாம் மீண்டும் இலங்கைக்கு திரும்பமாட்டார் என்றும் பிள்ளையை தரமாட்டார் என்று கூறியமையானது மேலே சொல்லப்பட்ட முறைப்பாட்டாளர் மேலும் துன்புற்றமைக்கு காரணமாகவிருந்தது. மனித உரிமைகள் ஆணைக்குழுவானது இப்பிரச்சினையை பங்களாதேஸ் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்துடன் அந்நாட்டு அரசாங்கத்தின் அரச சார்பற்ற நிறுவனமான ASK யிடம் அறிவித்ததன் பின்னர் அவ் உத்தியோகத்தர்கள் இப்பிள்ளை இருந்த இடத்தை சோதனையிட்டனர். அச்சந்தர்ப்பத்தில் பிள்ளையினுடைய தகப்பன் இத்தாலிக்கு வேலைக்கு சென்றிருப்பதாகவும் தமது பிள்ளையை அவருடைய தாய் மற்றும் சிறிய தகப்பனாருடன் தங்க வைத்திருப்பதாகவும் அவதானிக்கப்பட்டது. பங்களாதேஷ் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் ஆலோசனையின் படி உரிய முறைப்பாட்டாளர் டாக்கா நீதவான் நீதிமன்றத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார். நீதிமன்றத்தின் கட்டளையைப் பெற்றதுடன் பங்களாதேஷ் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பங்களாதேஷ் பொலிசாருடன் பிள்ளை இருக்கின்ற வீட்டிற்கு சென்று தாயிடம் ஒப்படைத்தமையானது மீண்டும் தாய் நாட்டுக்கு வருவதற்கு முறைப்பாட்டாளருக்கு இயலுமாகவிருந்தது.

### 1.8 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தலை தொடர்ந்து கண்காணித்தல்

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டாளரினால் ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடு தொடர்பில் புலனாய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு முறைப்பாடு தொடர்பில் முறைப்பாட்டளரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளமையை அவதானித்து பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அவ்வாறு வழங்கப்பட்ட பரிந்துரைகள் உரிய பிரதிவாதிகள் தரப்பினரால் செயற்படுத்தப்படுகின்றதா இல்லையா என்பதனை கண்காணிக்கும் பணியினை பல வருடங்களாக முன்னெடுத்து வருகின்றது. அதற்கமைவாக 2013ஆம் ஆண்டினை பரிசீலித்துப் பார்க்கும்போது அவ்வாறான பரிந்துரைகள் வழங்கப்பட்ட 886 கோவைகள் தொடர்ச்சியான கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் பிரதிவாதியின் முன்னேற்றம் தொடர்பில் விசாரணை இடம்பெற்று அதற்கு பதில் கிடைக்கப்பெறாதுவிட்டால் நினைவூட்டல் அனுப்பப்படும். அதற்கும் பிரதிவாதிகள் பதில் அளிக்காதுவிட்டால் அல்லது மேலும் உரிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதுவிடின் மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் உரிய திறத்தவரை வரவழைத்து பரிந்துரை தொடர்பில் அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்ச்சியான கண்காணிப்பில் பிறிதொரு சந்தர்ப்பமாகும். அதற்கமைவாக 2013ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகளுடனான 74 கோவைகள் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் அவற்றுள் 47 கோவைகள் நடைமுறைப்படுத்தக்கூடியதாகவிருந்தது.

# அத்தியாயம் 02

# மனித உரிமைகளை மேம்படுத்துதல்

### 2.0அறிமுகம்

2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஊடாக நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் தொடா்பான கல்வி மற்றும் பயிற்சி தொடர்பிலான கூற்றின் 7ஆம் உறுப்புரையில் கூறப்பட்டிருப்பதாவது மனித உரிமைகள் தொடா்பான கல்வி , பயிற்சி என்பவற்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் முன்னேற்றுதல் தொடா்பிலான பிரதான பொறுப்புடைமையானது அரச மற்றும் இயைபான அரச நிறுவனங்களுக்கே உரித்துடையது என்பதாகும். மனித உரிமைகள் பற்றிய கல்வி தொடர்பிலான சா்வதேச வேலைநிகழ்சித்திட்டத்தின் முன்நிகழ்ச்சித்திட்ட இரண்டாவது பிற்சேர்க்கைகள் (2010-2014) இற்குள் மனித உரிமைகள் கல்வி மற்றும் உயா் கல்வி நிறுவனங்களுக்கும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரசின் பல்வேறு பிரிவுகளுக்கும் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு அரசினுடையதாகும்.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள கல்விச் சட்டம் உட்பட்ட ஏனைய துணைச்சட்டங்களில் மனித உரிமைகள் பற்றிய கல்வி தொடா்பில் விசேடமாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் 1996 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தில் ஆணைக்குழுவின் பணிகளுக்கிடையில் 10 ஊ என்னும் பிரிவில் குறிப்பிடப்படுவதாவது மனித உரிமைகள் தொடா்பில் அறிவூட்டுதல், மேம்படுத்துதல் மற்றும் உரிய முறைமையின்படி மனித உரிமைகள் பற்றி கல்வியைத் திட்டமிடுதல் ஆணைக்குழுவின் பணியாகும் என்பதாகும்.

2013ஆம் ஆண்டில் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடா்பில் பல்வேறுபட்ட முறைகளில் வேலைநிகழ்ச்சித்திட்டங்கள் ஆணைக்குழுவினூடாக இடம்பெற்றுள்ளது. அவற்றுள் மனித உரிமைகள் தொடா்பில் அறிவூட்டல் மற்றும் கல்வி வழங்கும் நிகழ்ச்சித்திட்டமானது பிரதான இடத்தைக் கொண்டுள்ளது. தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் ஊடாக இந்திகழ்ச்சித்திட்டமானது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டமானது இவ்வத்தியாயத்தினுள்ளும் பிராந்திய அலுவலகங்களின் நிகழ்ச்சித் திட்டங்கள் பிராந்திய அலுவலகங்கள் என்னும் அத்தியாத்தினுள்ளும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.1 மனித உரிமைகள் தொடர்பான கல்வி நிகழ்சித்திட்டம்

மனித உரிமைகள் தொடா்பான 16 கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தலைமை அலுவலகத்தின் கல்வி மற்றும் விசேட நிகழ்சித்திட்டங்களுக்கான பிரிவின் ஒத்துழைப்புடன் நடாத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டது. இப்பதினாறு நிகழ்ச்சித்திட்டங்களுள் சில மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆதரவுடன் நடத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டது என்பதுடன் சில நிகழ்ச்சித்திட்டங்கள் வேறு நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் நடைபெற்றுள்ளன.

ஆணைக்குழுவின் ஊடாக ஒவ்வொரு நிறுவனங்களிலும் நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள் தொடா்பில் மனித உரிமைகளை உள்ளடக்கும்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பெறுபேறாக அந்நிறுவனங்கள் சுயாதீன அடிப்படையில் மனித உரிமைகளை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கும் காரணத்தினாலேயே இவ்விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன

## 2.1 மனித உரிமைகள் தொடர்பான கல்வி நிகழ்சித்திட்டம்

மனித உரிமைகள் தொடர்பான 16 கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தலைமை அலுவலகத்தின் கல்வி மற்றும் விசேட நிகழ்சித்திட்டங்களுக்கான பிரிவின் ஒத்துழைப்புடன் நடாத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டது. இப்பதினாறு நிகழ்ச்சித்திட்டங்களுள் சில மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆதரவுடன் நடத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டது என்பதுடன் சில நிகழ்ச்சித்திட்டங்கள் வேறு நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் நடைபெற்றுள்ளன.

ஆணைக்குழுவின் ஊடாக ஒவ்வொரு நிறுவனங்களிலும் நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள் தொடர்பில் மனித உரிமைகளை உள்ளடக்கும்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பெறுபேறாக அந்நிறுவனங்கள் சுயாதீன அடிப்படையில் மனித உரிமைகளை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கும் காரணத்தினாலேயே இவ்விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன

| இலக்கம் | தேதி | மனித உரிமைகள் தொடர்பான அறிவூட்டலைப் பெற்றுக்கொண்ட குழுவினர் | ஒழுங்கமைப்புகள் |
|---|---|---|---|
| 1. | 2013.04.19 | தேசிய மனநல சுகாதார நிறுவனங்களின் அலுவலக குழாம் | தேசிய மனநல சுகாதார நிறுவனம், அங்கொடை |
| 2. | 2013.04.29 | அதிபர்கள் மற்றும் கல்வி நிருவாக உத்தியோகத்தர்கள் (தமிழ் மொழி) | தேசிய கல்வி நிறுவகம், மஹரகம |
| 3. | 2013.05.08 | மனநல மருத்துவமனையின் ஊழியர்கள் | மனநல மருத்துவமனை ,முல்லேரியா |
| 4. | 2013.05.18 | இலங்கை இராணுவத்தினரின் கல்விப் பீட மாணவர்கள் | இலங்கை இராணுவ கல்வி பீடம் |
| 5 | 2013.07.01 | பொலிசு உத்தியோகத்தர்கள் | தியதலாவ கட்டானை பொலிசு கல்வி பீடம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 6 | 2013.07.20 | னுகுஊஊ வங்கியின் சிரேட்ட . நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | னுகுஊஊ வங்கி மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 7 | 2013.07.24 | இராணுவ உத்தியோகத்தர்கள் | இராணுவ படைத் தலைமை அலுவலகம் |
| 8 | 2013.08.02 | இராணுவ உத்தியோகத்தர்கள் | இராணுவ படைத் தலைமை அலுவலகம் |
| 9 | 2013.08.07 | ஹிக்கடுவ மகாமாய வித்தியாலயத்தின் மாணவர்கள் | ஹிக்கடுவ மகாமாய வித்தியாலயம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 10 | 2013.08.12 -24 | பொலிசு உத்தியோகத்தர்கள் | கட்டானை பொலிசு கல்வி பீடம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 11 | 2013.09.16 -27 | சிவில் சங்கம் மற்றும் அரச சார்பற்ற அமைப்பின் உறுப்பினர்கள் | மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 12 | 2013.10.23 -27 | சிரேட்ட பொலிசு உத்தியோகத்தர்கள் | கட்டானை பொலிசு கல்வி பீடம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 13 | 2013.11.27 | செவிப்புலன் அற்றோருக்கான சம்மேளனத்தின் பெண் உறுப்பினர்கள் | இலங்கை செவிப்புலன் அற்றோர் மத்திய சம்மேளனம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 14 | 2013.12.21 | மதுவரித் திணைக்களத்தின் பரிசோதகர்கள் | சுங்கத்திணைக்களம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 15 | 2013.12.23 | சமூக மற்றும் சமய நிலையத்தின் களுத்துறை மாவட்டத்தின் உறுப்பினர்கள் | சமூக மற்றும் சமய நிலையம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 16 | 2013.12.21 | இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சம்மேளனத்தின் உறுப்பினர்கள் | இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சம்மேளனம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு |

## 2.2 1996 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, மனித உரிமைகள் சட்டத்துக்கான திருத்தங்களை முன்வைத்தல்

2013ஆம் ஆண்டு விவாதத்திற்கு உட்பட்டிருந்த இரண்டடு தேசிய அறிக்கைகளான கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான ஆறிக்கை ஆறிக தேசிய மனித உரிமைகள் திட்டத்திம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பரந்தளவிலான அதிகாரங்கள் வழங்கப்படுதல் வேண்டுமென்று அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் எனவும் 2012 ஆண்டில் விரிவான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலதிக ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக் கொள்ளும்பொருட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்கள், புத்திஜீவிகள், சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் ஒன்று சேர்த்து ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் சிரேட்ட அலுவலக குழாம் போன்றோருடன் மேலும் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. அத்துடன் இறுதி ஆலோசனையானது தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதன் பொருட்டு சனாதிபதி செயலகத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் மற்றும் உயர் நீதிமன்றத்திற்கும் சான்றிதழொன்றை வழங்குதல், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆட்களை மேற்பார்வை செய்தல் மற்றும் அதிகாரங்களை அதிகரித்தல் அத்துடன் விபரங்களைச் சேகரித்தல் மற்றும் தேசிய விசாரணை நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயப்பரப்பு அடிப்படையிலான விடயங்கள் இவ்வாலோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 விசேட சர்வதேச தினக் கொண்டாட்டங்கள்

### சர்வதேச மனித உரிமைகள் தினக் கொண்டாட்டம்

சர்வதேச மனித உரிமைகள் தினக் கொண்டாட்டத்தின் சர்வதேசக் கருப்பொருளாக அமைந்தது "உரிமைகளுக்காக செயற்படுவோம் " என்பதாகும். இக்கருப்பொருளிற்கு அமைவாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊடாக சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தில் விசேட விருந்தினராக விசேட துவரான பிராட்மன் வீரக்கோன் அவர்கள் பங்குபற்றியிருந்தார். (அவரது உரை இணைப்பு 01 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

இந்நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்திலும் மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட விவாத நிகழ்ச்சியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்விவாதத்தின் கருப்பொருளாக சமூகத்தில் குற்றங்களைத் தடுப்பது தண்டனை வழங்குவதன் மூலமே – சமூகத்தில் குற்றங்களைத் தடுப்பது புனர்வாழ்வு வழங்கப்படுதல் மூலமே என்பதாகும்.

இந்நிகழ்வானது விசேட கலாச்சாரப் சிறப்புற நடாத்தப்பட்டது. அரச சேவையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், சட்டக் கல்வி மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மற்றும் அழைப்பு விருந்தினர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

### சர்வதேச மகளிர் தினம்

சர்வதேச மகளிர் தினத்துக்கு விசேட செய்தி ஒன்று ஆணைக்குழுவின் ஊடாக இணையத்தளத்துக்கு தரவேற்றப்பட்டது. இது தவிர பெண்கள் சுயாதீனமாக தீர்மானமெடுக்கும் தலைவர்கள் என்பது பற்றிய விசேட விரிவுரையொன்று ஆணைக்குழுவின் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆணையாளரான திருமதி ஜெசிமா இஸ்மயில் அவர்களால் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு ஆற்றியமையானது பணியாளர் குழாமின் ஒழுக்கநெறிகளை விருத்தி செய்யும் நோக்கத்திலாகும்.

### பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் சர்வதேச தினம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட செய்தியானது ஆணைக்குழுவின் இணையத்தளத்துக்கு தரவேற்றப்பட்டதுடன் பெண்களுக்கெதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கு நடைமுறையிலுள்ள சட்டமானது உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும் என்று அவதானிக்கப்பட்டது. அத்துடன் தற்போதைய சமூக செயற்பாடுகளிலுள்ள அனைத்து வழிமுறைகளிலும் வன்முறைகளை ஒடுக்குதல் வேண்டும் எனவும் நெறிப்படுத்தப்பட்டது.

### சித்திரவதைக்குட்பட்டவர்களுக்கு ஆதரவுஅளிக்கும் சர்வதேச தினம்

சித்திரவதைக்குட்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான சர்வதேச தினம் தொடா்பில் செய்தி ஒன்று வெளியிடப்பட்டது. தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய நிலையங்களில் சித்திரவதை பற்றியும்' சட்ட நிலைமை பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இவ்வேலைத்திட்டமானது ஏனையவை போன்று சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தா்களான பொலிசு, இராணுவம், கடற்படை, வான்படை போன்ற படைகளுக்கு நடாத்தப்பட்டது.

## 2.4 சிறுவர் உரிமைகளை மேம்படுத்துதல்

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது யுனிசெப் இன் பிரதான அனுசரணையின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு, நுவரெலியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நடாத்தியது. நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அறிவூட்டல் செய்யப்படவேண்டிய விடயங்களானவை வளவாளர்களினால் தீர்மானிக்கப்பட்டது.

சிறுவர் உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக என அறிக்கையிடும் முறைகள் தொடர்பில் சமூகத்துக்கு அறிவூட்டலானது அவற்றினுள் பிரதானமானதாகும். அதுபோல் சாதாரண மக்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சிறுவர் உரிமைகளை மேம்படுத்தும் உத்தியோகத்தர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிசு உத்தியோகத்தர்கள் என்போர் ஒன்றிணைந்தனர். நிகழ்ச்சித்திட்டத்தின் முடிவில் கிராம மட்டத்தில் சிறுவர் உரிமைகளை மேற்பார்வை செய்யும் குழுவானது நியமிக்கப்பட்டது.

சிறுவர் உரிமைகள் தொடர்பில் செயற்படும் சகல திறத்தவர்களுடைய அறிவை விருத்தி செய்வது தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது நடாத்தப்பட்டது. அதனால் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் உரிமைகளை கண்காணிக்கும் குழு உறுப்பினர்கள் பிரதானமாக பங்குபற்றியதுடன் சிறுவர் உரிமைகள், அடிப்படை உரிமைகள் , அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள், இடம்பெயர்நதவர்களின் உரிமைகள் , அவசர நிலைமைகளின் போது நடந்து கொள்ளும் முறைகள் , நீதிமன்ற முறைமைகள்., நிவாரணங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் மற்றும் சமூக மற்றும் சட்ட சேவைகள் போன்றவை தொடர்பில் பயிற்சியானது வழங்கப்பட்டது.

சிறுவர் இல்லங்களை பரிசோதனை செய்தல் தொடர்பில் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் மூலமும் ஏனைய பிராந்திய அலுவலகங்களின் மூலமும் அரச பொறுப்பில் உள்ள இல்லங்கள் மற்றும் ஏனைய சுயாதீன இல்லங்கள் போன்றவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதற்கமைவாக அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள 06 சிறுவர் இல்லங்களும் 13சுயாதீனமான இல்லங்களும் கண்காணிப்புக்குட்பட்டது.

இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தலானது செயற்திட்ட உதவியாளர்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

## 2.5 மனித உரிமைகள் பற்றிய தகவல்களை வழங்குதலும் இலத்திரணியல் ஊடகங்களுடனான ஒலிபறுப்பு.

மனித உரிமைகள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக ஆணைக்குழுவுக்கு பல்வேறு மட்டங்களிலுள்ள வெவ்வேறுபட்ட நிறுவனங்களின் உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர். அச்சந்தர்ப்பங்களில் கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டப் பிரிவுக்கு கிட்டத்தட்ட 54 பேர் ஆற்றுப்படுத்தப்பட்டனர். அதில் 34 பேர் பல்கலைக்கழக மாணவர்கள் என்பது விசேடமானதாகும்.

உயர் கல்வி நடவடிக்கை மற்றும் ஆய்வு நடவடிக்கை தொடர்பில் ஆணைக்குழுவின் தகவல்களை வழங்குவதற்கான ஊக்குவிப்பானது வழங்கப்படுகின்றது.

இலங்கை ரூபவாஹின் கூட்டுத்தாபனம் இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் சில தனியாா் ஒளிபரப்பு சேவைகள் இலங்கை மனித உரிமைகள் வகபங்குதொடா்பாள ஒலிபரப்பு செய்தது.

## 2.6 மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நூல்நிலையம்

ஆணைக்குழுவின் நூல் நிலையமானது மனித உரிமைகள் பற்றிய புத்தகங்கள் மற்றும் ஏனைய மனித உரிமைகள் தொடர்பிலான புத்தகங்கள் போன்ற அலுவலகப்பணியாட்களுக்கு அவசியமான நூல்களைக் கொண்டுள்ளது. ஆணைக்குழுவின் நூல் நிலையத்தில் 2699 நூல்கள் மற்றும் புத்தகங்கள் காணப்படுகின்றன. இது தவிர தேசிய மற்றும்

சர்வதேச நிறுவனங்களின் ஊடாக அனுப்பப்படுகின்ற பருவவிதழ்கள் மற்றும் ஆண்டறிக்கைகள் என்பனவும் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அனைத்து அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளும் இங்குள்ளன. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிகழ்ச்சித்திட்டங்களின் இறுவட்டுக்கள், ஒளிநாடாக்கள் போன்றவை கூட இங்கு காணப்படுகின்றன.

அவ்வாறு உயர் நீதிமன்ற் அடிப்படை உரிமைகள் வழக்குத் தீர்ப்புகளானவை சேகரிக்கப்பட்டுள்ளதுடன் ஆணைக்குழுவின் ஊடாக தனியாள் ஒருவரின் முறைப்பாடு தொடர்பில் வெளியிடப்படும் பரிந்துரைகளும் நூல்நிலையத்தில் சேகரிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே வெளியிடப்படுட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் சட்டங்களும் சட்ட வரைவுகளும் கூட சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்நூல் நிலையத்தில் ஆணைக்குழுவின் பணியாட்களுக்காக தினசரி மற்றும் வாரம் தோறும் வெளிவரும் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளிலான செய்தித்தாள்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நூல்நிலையத்துக்கு புத்தகங்ளை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் ஊடாகவும் நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

ஆணைக்குழுவின் நூல் நிலையத்தை இவ்வாண்டினுள் 65 வெளியக வாசகர்கள் பயன்படுத்தியுள்ளனர். கல்வி நடவடிக்கைகளுக்காக தகவல்களைச் சேகரித்தல் மற்றும் துண்டுப்பிரசுரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் போன்றவற்றுக்காக இந்நபர்கள் சமுகமளித்தனர். வாசகர்களுக்கு அவற்றின் நிழற்பிரதிகள் வழங்குதல் உட்பட்ட சேவைகளும் இங்கு அளிக்கப்படுகின்றன.

## 2.7 உள்ளகப் பயிற்சி

ஆணைக்குழுவிற்கு சமுகமளித்திருந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் உள்ளக பயிற்சியினைப் பெற்றுக்கொள்வதற்காக ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். 2013ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் மூலம் கொள்கை தீர்மானத்தின் மூலம். பயிற்சியைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கமைவாக இவ்வருடத்தினுள் சட்ட மாணவர்கள், சட்டமாணி பட்டதாரிகள் அத்துடன் வேறு துறை சார் பட்டதாரிகளும் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டு உள்ளக பயிற்சி வழங்கப்பட்டது. அவர்களை ஆணைக்குழுவின் பல்வேறு பிரிவுகளுக்கும் இணைத்துக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கையானது எடுக்கப்பட்டது.

# அத்தியாயம் 03

# மனித உரிமைகளை கண்காணித்தல்

### 3.1 பொலிசு நிலையங்களை- பரிசோதித்தல்

ஆணைக்குழு பொலிசு நிலையங்களுக்கு விஜயம் மேற்கொள்வதன் நோக்கம் கைது செய்யும்போது சட்டவிரோதமாக கைது செய்தல் அல்லது சித்திரவதை செய்தல் மற்றும் கைது செய்யப்பட்டவர்களை சட்ட நடவடிக்கைக்காக கொண்டுசெல்வதில் தாமதம் ஏற்படுத்துதலைக் குறைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கானதாகும். பொலிசு நிலைய விசாரணைகள் தவிர்ந்த பொலிஸ் திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பயங்கரவாத புலனாய்வு பரிவு மற்றும் குற்ற புலனாய்வுப் திணைக்களத்திற்கான விஜயங்களும் ஆணைக்குழுவின் இவ்விஜயத்தினுள் உள்ளடக்கப்படுகின்றது. பொலிசு நிலையத்தைப் பரிசோதிப்பதன் ஊடாக தடுப்பு நிலைமைகள் மற்றும் வேறு பிரச்சினைகளினால் கைது செய்யப்பட்டவர்களின் பாதுகாப்பானது ஆணைக்குழுவின் ஊடாக உறுதிப்படுத்தப்படுகின்றது. அத்துடன் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் சுகாதாரப் பிரச்சினைகள், உறவினர்களைச் சந்தித்தல் தொடர்பிலான பிரச்சினைகள் மற்றும் வெளியகப் பாதுகாப்பு போன்ற செயற்பாடுகள் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கு விரைவான தீர்வினை பெற்றுக்கொடுத்தமை இவ்விஜயத்தின் மூலம் இடம்பெற்றது.

2013ஆம் ஆண்டில் பொலிசு நிலைத்துக்கான விஜயத்தின் போது ஆவணங்கள் இன்றி சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்தமை மற்றும் தாக்குதல் நடாத்தியமை போன்ற சில சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. அச்சந்தர்ப்பங்களில் விரைவான விசாரணை நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு ஆணைக்குழுவின் விசாரணை உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் ஊடாக 432 பொலிசு நிலையங்களுக்கு மாதத்திற்கு ஒரு தடைவை விஜயம் மேற்கொள்ளப்படும். சில விஜயங்கள் இரவு நேரங்களிலே இடம்பெறுகின்றது.

### 3.2 வெலிக்கடை சிறைச்சாலையின் தடுப்பு நிலைமைகளை பரிசோதனை செய்தல்.

2013.02.20 ஆந் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் தடுப்பு நிலைமைகள் தொடர்பாக ஆணைக்குழுவின் கண்காணிப்புக் குழுவினரால் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது.

அத்தினத்தன்று தடுத்து வைக்கப்பட்டிருந்தோரின் எண்ணிக்கையானது 4057 ஆக இருந்ததுடன் அவர்களில் 2463 பேர் சிறைத்தண்டனை விதிப்பதற்கு உள்ளதுடன் 1041பேர் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் எனவும் அவதானிக்கப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 253 ஆகும் என்பதுடன் அவர்களில் 250 ஆண்களும் 3 பெண்களும் உள்ளனர் எனவும் அடையாளம் காணப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 141பேர் மேன்முறையீடு செய்துள்ளதுடன் ஏனைய 159 பேரும் மேன்முறையீடு செய்யவுள்ளமையானது அவதானிக்கப்பட்டது. அன்றைய தினம் கடமையிலிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 555 ஆகும். அன்றைய தினம் சிறைச்சாலையில் எல்.ரி.ரி.ஈ சந்தேகநபர்கள் இருக்கவில்லை.

ஆணைக்குழுவின் குழுவானது அனைத்து செயற்பாடுகள் தொடர்பாகவும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடியதுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் நிலைமைகளையும் ஆராய்ந்தனர்.

முதலில் அவர்களின் உணவு சம்பந்தமாக பரிசோதிப்பது தொடர்பில் அனைத்து இடங்களும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. கடந்த காலங்களில் வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட குழப்பத்தினால் கூரைக்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன் அவற்றை மீண்டும் திருத்தம் செய்யாமையால் செயற்பாடுகளுக்கு பாதகமாக உள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது.

இரண்டாவதாக மரண தண்டனை விதிக்கப்பட்டு தடுப்புக் காவலில் உள்ளவர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. மரண தண்டனை விதிக்கப்பட்ட 3 பேர் இருக்ககூடிய கூட்டில் 5பேர் இருந்ததுடன், தொற்று நோய் பரவுகை, சூரிய ஒளி போதுமானளவில் கிடைக்கப்பெறாமையால் கண்பார்வைக் குறைபாடு ஏற்பட்டிருந்தமை மற்றும்

மரண தண்டனை விதிக்கப்படாமல் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் மனநோய் அதிகரிப்பதற்கு காரணமாகவிருக்கின்றமை அவதானிக்கப்பட்டன.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் சுகாதாரத்துக்கான உரிமையை அவதானிக்கும்போது தேவையேற்படும் போது மருந்துகள், தேசிய வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பப்படுதல் போன்றவை நடைபெறுவதில்லை என தடுத்துவைக்கப்பட்டிருபபோரினால் முன்வைக்கப்பட்டது.

மேற்படி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழுவானது பின்வரும் பரிந்துரைகளை முன்வைத்தது -

1. வெலிக்கடை சிறைச்சாலையின் கூரை மிக விரைவில் திருத்தப்படுவதற்கு அதிகாரிகள் ஒழுங்கினை மேற்கொள்ளுதல்.
2. மரண தண்டனை விதிக்கப்பட்டு நீண்ட காலத்துக்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் மனநலன் மற்றும் சுகாதார நலன்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
3. சிறைச்சாலை வைத்தியசாலையின் நிர்வாகம் தொடர்பான ஏற்பாடுகளை ஆராய்ந்து பொருத்தமான நிருவாக மாற்றங்களை ஏற்படுத்துதல்
4. தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் சட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சட்ட உதவி ஆணைக்குழுவின் மூலம் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

### 3.3 சிறுவர் இல்லங்களுக்கான விஜயம்

2012.12.18ஆந் தேதி குளியாப்பிட்டிய மீகஹகொட்டுவ சிறுவா் இல்லம் ஆணைக்குழுவின் உத்தியோகத்தா் குழுவினால் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதுடன் கீழே குறிப்பிடப்பட்ட ஆலோசனைகள் 2013.2.12 ஆந் திகதியில் குருநாகலில் உள்ள நன்னடத்தை ஆணையாளருக்கு சமா்ப்பிக்கப்பட்டது.

- சிறுவர் இல்லங்களில் தங்க வைக்கப்படக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கை 45 எனவும் ஆனால் 65 பேர் வரையில் தங்கியிருப்பதனால் அவர்கள் தொடர்பாக நன்னடத்தை திணைக்களத்தினால் உணவுக்காக வழங்கப்படும் நிதியானது அதிகரிக்கப்படுதல் வேண்டும் எனவும் சிறுவர்களின் உடைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லையென்பதால் அது தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும்,
- சிறுவா் இல்லத்திலுள்ள பிள்ளைகளின் அடிப்படை வசதிகளுடன் ஆடை மாற்றுவதற்கான இடம், கல்வி நடவடிக்கைகளுக்கான அறை, நூல் நிலையம் மற்றும் கணணி வசதிகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும் ,
- சிறுவர்களைப் பாடசாலை கல்விக்காக அனுப்புதலானது சுமுக நிலையில் உள்ளதா எனக் கண்டறிதல் மற்றும் பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளுக்கு அவசியமான ஒழுங்குகளை ஏற்படுத்துதல் மற்றும் விசேட தேவையுள்ள பிள்ளைகள் தொடர்பிலும் கவனத்தை செலுத்துதல் முக்கியமானது எனவும் ,
- இல்லத்திலுள்ள சிறுவா்கள் எதிா்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவசியமான உளநல ஆலோசனை மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் அலுவலக உறுப்பினர்களுக்கு சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவா்களைப் பாதுகாத்தல் தொடா்பில் அதிகளவிலான அறிவூட்டல் வழங்குதல் வேண்டும்,
- இல்லத்திலுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட இமைவராயத்தவா் தொடர்பில் திணைக்களமானது கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்,
- கண்காணிப்பின் போது அவதானிக்கப்பட்டதாவது வட மேல் மாகாணத்தில் தென்னந் தும்பு ஆலை மற்றும் தென்னந்தோட்டம் போன்ற இடங்களில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அறிக்கையிடப்பட்டமையானது தொடா்பில் விசேட கவனம் செலுத்துதல் பொருத்தமானது,
- அலுவலக குழாமினுடைய தொழிற்ப் பாதுகாப்பை உருவாக்குதல் தொடா்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தினை இல்லாதொழிப்பதற்கும் சிறுவா் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கீழ் மட்டத்திலிருந்து அறிவூட்டல் செயற்பாடுகளை நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம், சிறுவ்ர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பிரதேச செயலகத்துடன் இணைந்தும் செயற்படுதல் வேண்டும்.
- இக் காப்பகங்களின் பாதுகாப்பு நிலைமைகளை சிறுவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும் போன்ற ஆலோசனைகள் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டன.

2013.01.31ஆந் தேதி முறத்தொட்டுவ ஆண் பிள்ளைகளின் தங்கு நிலையங்களை பரிசோதிப்பதற்காக சென்ற ஆணைக்குழுவினால் 2013.05.10 ஆந் தேதியன்று இரத்தினபுரி நன்னடத்தை ஆணையாளருக்கு

முன்வைக்கப்படடுள்ள யோசனைகள் பின்வருமாறு -

- புள்ளி விபரங்களுக்கமைவாக பல்வேறு இனங்களைச் சேர்ந்த பிள்ளைகள் சிறுவர் இல்லங்களில் தங்கியுள்ளனர் என அவதானிக்கப்பட்டதற்கு அமைவாக சப்பிரகமுவ மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தினூடாக இவ்வில்லத்தினைால் மொழிக் கொள்கையானது மேலும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும் என்றும்,
- இல்லத்தில் போதுமானளவு அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பது தொடர்பிலும் மற்றும் சிறுவர்களின் அடிப்படை வசதிகளான உடை மாற்றுவதற்கான இடம், கல்வி நடவடிக்கைகளுக்கான அறை, நூல்நிலையம் மற்றும் கணணி வசதிகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும் எனவும்
- அலுவலக உறுப்பினர்களுக்கு சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாத்தல் தொடர்பில் கூடுதலானளவிலான அறிவூட்டல் வேண்டும் எனவும்
- பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளுக்கு அவசியமான ஒழுங்குகளை ஏற்படுத்துதல் மற்றும் விசேட தேவையுள்ள பிள்ளைகள் தொடர்பில் கவனத்தை செலுத்துதல் முக்கியமானது எனவும்
- சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழிப்பதற்கும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கீழ் மட்டத்திலிருந்து அறிவூட்டல் செயற்பாடுகளை நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தினுடாகவும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பிரதேச செயலகத்துடன் இணைந்தும் செயற்படுதல் வேண்டும் எனவும்

ஆணைக்குழுவினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## 3.4 நிறுவமையப்படுத்தப்பட்ட சிறுவர்களினுடைய தகவல்களைத் திரட்டுவதற்கான புதிய விண்ணப்பம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 2013ஆம் ஆண்டுக்கான சர்வதேச சிறுவர் தினத்தன்று நிறுவனங்களில் சேர்க்கப்பட்ட சிறுவர்களின் விபரங்களை அறிக்கையிடும் பொருட்டு புதிய விண்ணப்ப படிவம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. ( இவ்விண்ணப்ப படிவம் இணைப்பு 02 என உள்ளடக்கப்பட்டுள்ளது).

இப்புதிய விண்ணப்பபடிவத்தின் அறிமுகத்துக்கு காரணமாக அமைந்தது ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் போது நிறுவனத்திலுள்ள சிறுவர்களின் விபரங்களை சேகரிக்கும் பொருட்டு முறையாக தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவம் ஒன்றைப் பயன்படுத்தாமையே ஆகும்.

தற்போதைய விண்ணப்ப படிவத்தின் மூலம் இப்பிள்ளைகளின் தகவல்களை சேகரித்தல் மட்டுமன்றி அவர்களுக்கான கொள்கையொன்றை திட்டமிடுதல் மற்றும் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மிகவும் பரிச்சயமான முறைகள் பயன்படுத்தப்பட்டததன் மூலம் வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விண்ணப்ப படிவத்தை தயாரிக்கும்போது மத்திய அரசு மற்றும் மாகாண நன்னடத்தை ஆணையாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்று ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டது. கலந்துரையாடலின் போது அறிக்கையிடுதலில் குறைபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது. இவ்வறிக்கையின்படி விண்ணப்ப படிவமானது தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதுடன் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு, நன்னடத்தை மற்றும் சமூக சேவைகள் திணைக்களம், சிறைச்சாலைகள் அமைச்சு , சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை , மாகாண சமூக சேவைகள் திணைக்களம மற்றும் அம்பேபுஸ்ஸ இளம் குற்றவாளிகள் பயிற்சிப்பாடசாலை ஆகிய அரச நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 3.5 தடுப்புக் கட்டளைகளை பதிவு செய்தல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் பிரகாரம் 1978ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் அல்லது (10ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளின் பிரகாரம் எவரேனும் ஆள் கைது செய்யப்படும் போது அல்லது தடுத்து வைக்கப்பட்டிருக்கும்போது அத்துடன் அவ்வாள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறிவித்தலும் அவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆள் விடுதலை செய்யும் போது அல்லது வேறு தடுப்பு நிலையத்துக்கு மாற்றப்படும் போது ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதற்கும் அவ்வாறான கைது செய்தல் இடம்பெறுதலோ அல்லது தடுத்து வைத்தலோ தடுப்பு கட்டளை வழங்கும் ஆளின் பொறுப்புடைமையாகும். மேலேயுள்ள செயற்பாடுகளுக்கு அமைவாக ஆணைக்குழுவானது தடுப்பு கட்டளை தொடர்பிலான தரவுத் தளத்தைப் பேணி வருகின்றது.

இவ்வருடத்தினுள் ஆணைக்குழுவுக்கு அறியத்தரப்பட்ட தடுப்புக் கட்டளைகளின் எண்ணிக்கை 274 ஆகும்.அதில் 248

ஆண்களும் 26 பெண்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆணைக்குழுவுக்கு அத்தடுப்புக்கட்டளைகளை அனுப்பிய பிரிவுகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

| | |
|---|---|
| பயங்கரவாத புலனாய்வு பிரிவு | 140 |
| குற்றபுலனாய்வு திணைக்களம் | 160 |
| சாதாரண பொலிஸ் நிலையம் | 50 |
| கொழும்பு குற்ற புலனாய்வு திணைக்களம் | 13 |
| விசேட குற்ற புலனாய்வு பிரிவு | 02 |
| போதைப்பொருள் தடுப்பு பிரிவு | 03 |
| மேலேயுள்ள பிரிவுகளால் குறிப்பிடப்படாத எண்ணிக்கை | 06 |

## 3.6 சட்ட வரைவை மேற்பார்வை செய்தல்

2013 ஆம் ஆண்டில் விசேட தேவையுடையோரின் சர்வதேச தினத்தின் கருப்பொருள் விசேட தேவையுடைய ஆட்களுக்கான சமூக பங்களிப்பு தொடர்பான சந்தரப்பங்களை அதிகரித்தல் மற்றும் தடைகளை அகற்றுதல் ஆகும் என்பதுடன் அவ்வாட்களுக்கான சந்தர்ப்பங்களையும் வாய்ப்பு வசதிகளயைும் அதிகரித்தலுமாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது இலங்கை அரசாங்கத்தின் ஊடாக ஐக்கிய நாடுகளின் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் பற்றிய பொருத்திணையில் கையொப்பமிடுதல் தொடர்பில் கவனம் செலுத்தியதுடன் தற்பொழுது நடைமுறையிலுள்ள விசேட தேவையுடையோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசியச் சட்டத்தின் நிலைமையினை அவதானத்துக்குட்படுத்தியது. 2013 ஆண்டு திசெம்பர் மாதம் 12ஆந் திகதியன்று மனித உரிமைகள் ஆணைக்குழு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து ஒன்றிணைக்கப்பட்ட தேசிய, அரச ,அரச சார்பற்ற நிறுவனங்கள் விசேட தேவையுடையோர்களின் சமூகத் தேவைப்பாடுகள் மற்றும் அபிப்பிராயங்களை அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

அதற்கமைய அரசாங்கமாறு சட்டமாக்க முன் மாற்றுதிறனாளிகளுக்கு சமர்பிக்க தீர்மானித்து அதேவேளை ஆணைக்குழு சட்டவரைவு மீள கருத்திற்கொள்ளப்படல் வேண்டும் எை வலியுறுத்தியது.

## 3.7 தேசிய மொழிக் கொள்கையை கண்காணித்தல்

தேசிய மொழிக் கொள்கை கண்காணிக்கும் ஆணைக்குழுவானது கண்காணித்தல் மற்றும் மீளாய்வுப் பிரிவின் ஊடாக 2013ஆம் ஆண்டு இடம்பெற்றது. HRC/1131/12 என்னும் முறைப்பாடானது இலங்கை வரையறுக்கப்பட்ட காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடாகும். இம்முறைப்பாட்டின் விசாரணையின் போது பின்வரும் ஆலோசனைக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஆணைக்குழுவின் ஊடாக தெரிவிக்கப்பட்டது.
அவ்வாறே பிரசையொருவர் அரச நிறுவனமொன்றை நடாத்தும்போது நேரடியாக தாக்கம் செலுத்தும் விடயம் தொடர்பில் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்வதில் அரச மொழிக் கொள்கையினைப் பின்பற்றுவதற்கு கூடியளவிலான அக்கறை செலுத்தப்படுகின்றது. அது தொடர்பில் விசேடமாக காப்புறுதி உரிமையானது நாட்டில் அனைத்து பிரசைகளுக்கும் உரியதாக உள்ளது. விசேடமாக மோட்டார் வாகன காப்புறுதி உரிமையானது அனைத்து வாகன சொந்தக்காரர்களுக்கும் ஏற்றத் தாழ்வின்றி பெற்றுக்கொள்ளக்கூடியது எனவும் நபர்களுக்கு மிகவும் பரிச்சயமான மொழியிலேயே செயற்படுவதற்கு இயலுமானதாகவிருத்தலும் வேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் இருப்பின் மக்கள் தேவையற்ற விடயங்களுக்கு நீதிமன்றத்தினை நாடமாட்டார்கள்.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வெளியீடான “பொத் பிங்வ” சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்படுதல் வேண்டுமென பிரதிவாதிக்கு அறிவிக்கப்பட்டது.

மும்மொழிப் பாவனையை கண்காணிக்கும் போது நீர்ப் பாசனத் திணைக்களத்தின் பதவியொன்றுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது அது சிங்கள மொழியில் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தமை ஆணைக்குழுவின் அவதானத்துக்குட்பட்டது. மொழிக் கொள்கையை பின்பற்றாமையினால் மனித உரிமைகள் மீறப்படவுள்ளது என்ற சந்தர்ப்பத்தினை விலக்கிக் கொள்வதற்காக உரிய நேர்முகப்பரீட்சையை இடைநிறுத்தும்படியும் தமிழ் மொழியிலும் விண்ணப்பங்களைக் கோரும்படியும் அதன் பின்னர் நேர்முகப்பரீட்சையை நடாத்தும்படியும் ஆணைக்குழு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளது.

## 3.8 இலங்கையில் புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாத்தல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது புலம்பெயர் பணிப்பெண்கள் தொடர்பில் தகவல்களைத் திரட்டி அறிக்கையொன்றினைத் தயாரித்து கவனத்திற் கொள்ளவேண்டிய பரிந்துரைகளை பொறுப்புடைய திறத்தவர்களுக்கு

வழங்கியுள்ளது. எனினும் நடைமுறையிலுள்ள சட்டம் மற்றும் நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடுகளினால் வெளிநாட்டில் பணிபுரிந்த சிறுவர் தொழிலாளியான ரிஸ்னா கசீக் சவூதி அரேபியாவில் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேலும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தது.

இந்நிலைமைகளில் மனித வியாபாரத்துக்கு எதிராக சட்ட நிலைமையை மேலும் பலப்படுத்துவதற்கு நடைமுறையிலுள்ள சட்டத்தை அமுல்படுத்துதல் முக்கியமானதாகும்.

2013 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது சிவில் அமைப்புக்களுடனும் அரச நிறுவனங்களுடனும் ஒருப்பாட்டிற்கு வந்ததுடன் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் புலம்பெயர் தெழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் மீறல்களைத் தடுப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

புலம்பெயர் வேலையாட்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 2012ஆம் ஆண்டு கட்டார் அரச தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து உடன்படிக்கையில் கையொப்பமிட்டதுடன் அவ்வுடன்படிக்கையானது சவூதி அரேபியா ஆணைக்குழுவுடன் கையொப்பமிடுவதற்காக வெளிநாட்டிலுள்ள வேலையாட்கள் தொடர்பில் அக்கறை காட்டுகின்ற அனைத்து திறத்தவர்களுடன் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஒன்றிணைந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவானது நடவடிக்கை எடுத்தது. இலங்கை புலம்பெயர் வேலையாட்களை கொண்டு வருகின்ற நாடுகளில் இருந்து சிற்சில காரணங்களின் அடிப்படையில் தடுத்து வைக்கப்படுகின்ற நபர்களை தடுத்துவைக்கும் நிலையம் மற்றும் சிறைச்சாலைகளில் உள்ள நிலைமைகள் ஒழுங்குமுறையில் இடம்பெறவில்லை என்று அறிக்கையிடப்படுவதனால் ' அந்நிலைமையினை மேம்படுத்துவதற்காக தேசிய மட்டத்திலான வேலைத்திட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பில் மேலும் முறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்காக நிறுவனமயப்படுத்தப்பட்ட ஆளை நியமிப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்து அது தொடர்பில் கண்காணிப்பு மற்றும் மீளாய்வுக்கான பணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.

## 3.9 சட்டவிரோதமாக வெளிநாட்டிலிருந்து வந்தோரை தடுத்து வைக்கும் தடுப்பு நிலையம்- மிரிஹானை, இலங்கை

குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறியதனால் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டவர்களின் தடுப்பு நிலையமானது மிரிஹானை பொலிசு நிலையத்தினுள் அமைந்துள்ளது. இந்நிலையமானது மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தியோகத்தர்களினால் தடுப்பு நிலையங்களை சோதனை செய்யும்போது சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இத்தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் ஆணைக்குழுவின் தலையீட்டினால் சர்வதேச வெளிநாட்டு வேலையாட்கள் நிறுவனத்தின் நிதி உதவியுடன் புதிய கட்டிடமொன்றைத் தாபித்தது.

சட்டவிரோத புலம்பெயர் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்படுவதற்கு இடம்பெற்ற கூட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள இன்னுமோர் விடயம் தமது நாட்டுக்குள் மனித உரிமைகள் மீறல்களுக்குட்படுதல் போன்ற பாதுகாப்பு காரணங்களுக்காக இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறி புகலிடம் கோரியவர்களும் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலைமையினை மீளாய்வு செய்வதற்காக விசேட கூட்டமொன்று 2013 மே மாதம் 17ஆம் திகதியன்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம பாகாப்பு அமைச்சு இலங்கை கடற்படை மற்றும் பொலிசு திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்றது. அம்மீளாய்வுக் கூட்டத்தில் பின்வரும் தண்டனைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பத்து ஆணைக்குழு விற்டு அறிக்கையிடும்படி தெரிவித்துள்ளது

- தற்பொழுது தடுத்துவைக்கப்பட்டுள்ளோருக்கு ஒதுக்கப்படட் கட்டடத்திற்கு மேலதிகமாக பல்வேறு பாதுகாப்புக் காரணங்களின் அடிப்படையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரின் விசேட தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டும் ஆண். பெண் பாலாருக்கு ஏற்ப நிரந்தரக் கட்டடமொன்றினைத் தாபித்தல்.
- தடுப்பு நிலையத்தை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களமானது பொறுப்பெடுத்தல் அத்துடன் நிருவாக நடவடிக்கைகளுக்காக அலுவலக குழாம் ஒன்றை நியமிப்பதனை துரிதப்படுத்தல்.
- பாதுகாப்பு தொடர்பில் தண்டனையை மீள அறிமுகப்படுத்துதல்
- மீண்டும் வசதிகளை அதிகரித்தல்
- மீண்டும் தாய் நாட்டுக்கு அனுப்புவதற்காக வெளிநாட்டு தூதுவராலயத்துடன் கலந்துரையாடி விரைவாக நடவடிக்கை எடுத்தல்.

### 3.10 ஆணைக்குழுவின் சுயாதீனமான தலையீடு

### 3.10.1 பயணிகள் மற்றும் பாதசாரிகளின் உரிமைகள் தொடர்பிலான தலையீடு

புகையிரத குறுக்கு வீதியினூடாக பயணம் செய்யுபோது போதுமானளவு பாதுகாப்பு இன்மையால் இடம்பெறுகின்ற விபத்துக்கள் தொடா்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது புகையிரத திணைக்களத்திடமிருந்து 2013.06.27 அன்று உடனடியாக அறிக்கையொன்றைக் கோரியது. இவ்விடங்களில் விபத்து நடைபெறுவது சமிக்ஞை விளக்குகள் தொடா்பில் மற்றும் கதவுகள் பொருத்தப்படுதல், மணி பொருத்துதல், மின்சார சமிக்ஞை விளக்குகள் பொருத்துதல் போன்றவை அவசியமானவையென இத்தலையீட்டின் போது தெரிவிக்கப்பட்டது.

புகையிரத குறுக்கு வீதி தொடா்பில் பாதுகாப்புக் கருவிகளைப் பொருத்துதலுக்கு பில்லியன் ருபா தொகையானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடப்பட்டது.

பாதுகாப்பான புகையிரத சேவையானது வழங்குதல் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் முன்னிலையில் உரிய திறத்தவர்களிடமிருந்து மேலும் விசாரணைக்கு தீர்மானித்து.

### 3.10.2 பொலிசு உத்தியோகத்தர்கள் தமது கடைமைகளைச் செய்யும் போது பல்வேறுபட்ட குழுக்களினால் தாக்குதலுக்கு உள்ளாதல்

ஒழுங்கமைக்கப்பட்ட குழு மற்றும் அரசியல் செயற்பாட்டாளா்கள் பொலிசு உத்தியோகத்தா்கள் கடமை மேற்கொள்ளும்போது தடையேற்படுத்திய பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அறிக்கையிடப்பட்டதாவது சட்டவாட்சிக்கான பாரிய பிரச்சினையொன்றாகும். இந்நிலைமையை இல்லாதொழிப்பதற்கு பொலிசு திணைக்களம் மற்றும் அமைச்சரவை மட்டத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான அவசியத்தை தெளிவுபடுத்துவதற்கு சம்பவம் நடைபெற்ற இடத்தினை பரிசோதனையிடப்படுவதற்கான முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவதற்கும் 2013.06.03 அன்று ஆணைக்குழுவின் தலையீட்டினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 3.10.3 வெலிவேரியா ரத்துபஸ்வல சம்பவம்

வலிவேரியா றத்துபஸ்வல கிராமத்தில் வசிப்பவர்கள் பயன்படுத்தும் நீரானது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் இரசாயனம் உட்செல்வதால் பாதகமான நிலைமைக்கு இட்டுச் செல்வதாகவும் அது தொடா்பில் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் அதற்கெதிராக நடாத்தப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தினைக் கலைத்தமை ஊடகங்கள் மூலம் பரந்தளவிலான பிரச்சாரம் ஒன்று மேற்கொண்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றது. ஆணைக்குழுவானது இது தொடா்பில் 2013.08.05 அன்று நடைபெற்ற சம்பவத்தினை எதிர்நோக்கிய திறத்தவர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் சமய தலைவர்களை அழைத்து விசேட கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியதுடன் விசாரணை நடவடிக்கைகளையும் ஆரம்பித்தது.

( விசாரணை அறிக்கை இணைப்பு 03 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது)

### 3.10.4 ஐந்தாம் ஆண்டு மாணவர்களின் பரீட்சைகள் தொடர்பான கலந்துரையாடல்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையினை மிகவும் பரிச்சயமான பரீட்சையாக இட்டுச் செல்வதற்கு கலாநிதி சி.டபிள்யு.டபிள்யு கன்னங்கரா அவர்களின் சுதந்திர கல்விக்கொள்கையை பாதுகாப்பதற்காகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அரச உத்தியோகத்தா்களை விசாரித்து கல்வி துறை மற்றும் ஏனைய துறைகளில் விசேட குழுவுடன் இரண்டு விசேட கலந்துரையாடல்கள் 2013.10.10 மற்றும் 2013.11.21 அன்று இடம்பெற்றது.

### 3.11 மாகாண சபைத் தேர்தல்-2013

மனித உரிமைகள் குழுவினூடாக மாகாண சபைத் தேர்தலில் பொலிசுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடா்பில் பொலிசு உத்தியோகத்தா்கள் நடவடிக்கை எடுக்கும் முறை பற்றி தெரியப்படுத்தும் விசேட வழிகாட்டல்கள் .தயாரிக்கப்பட்டு பொலிஸ்மா அதிபரின் ஊடாக அனைத்து பொலிசு நிலையங்களுக்கும் வழங்கப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டன.

இவ்வழிகாட்டல்கள் நியாயமானதும் மற்றும் அமைதியானதுமான தோ்தலொன்றை நடத்துவதற்கு அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் சா்வதேச மனித உரிமைகளைப் .பாதுகாத்தலுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. பொலிஸாரினால் தேர்தல் நடைபெறும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னா் அல்லது பின்னா் நடக்கும் செயல்கள் தொடா்பில் நடவடிக்கை எடுக்காமையானது அரசியலமைப்பின் 12ஆம் உறுப்புரையின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட சட்டத்தின் முன்னா் சமம் என்பதனை மீறுவதாக இங்கு விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே சமா்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்தலில் பக்கச்சாா்பாக சாா்பில் செயற்படுதல், அரசியல்

காரணங்களுக்காக செயற்படுதல் போன்றவை அரசியலமைப்பின் 12ஆம் உறுப்புரையை மீறுகின்றது என இங்கு குறிப்பிடப்படுகிறது.

இந்த வழிகாட்டல் கோட்பாட்டினை அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மாகாண சபை தேர்தல் வழிகாட்டிகள் இணைப்பு 04 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

அவ்வாறு வாக்குரிமை பயன்படுத்துதலானது மனித உரிமையாகக் குறிப்பிடப்பட்டு மும்மொழிகளிலும் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது.

தேர்தல் நடைபெற்ற 2013.09.21 தினத்தன்று நியாயமான தேர்தலொன்றை உறுதிப்படுத்துவதனை கண்காணிப்பதற்கு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

# அத்தியாயம் 04

## தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடனான தொடர்பு

### 4.1 சிவில் அமைப்புக்களுடன் செயற்படுதல்

சர்வதேச மனித உரிமை நிறுவனமானது சிவில் அமைப்புக்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பரீஸ் கோட்பாட்டினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஓர் விடயமாகும். ஐக்கிய நாடுகளின் பரிஸ் கோட்பாடுகளுக்கு அமைவாக தேசிய மனித உரிமை நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனவா என தேசிய மனித உரிமை நிறுவனங்களிற்கான சர்வதேச ஒருங்கிணைப்புக் குழு (ICC) கண்காணித்து வருகின்றது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவானது முறைசார் மற்றும் முறைசாரா வகையில் சிவில் அமைப்புக்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. 2013 ஆம் ஆண்டு சிவில் அமைப்புக்களுடன் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முறைசார் வகையில் இடம்பெறுவதற்காக சிவில் அமைப்புக்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. 2012 ஒக்டோபர் 19 ஆம் திகதி பத்திரிகை விளம்பரம் ஒன்றினூடாக பிரசுரிக்கப்பட்ட அழைப்பின் அடிப்படையில் நாடு பூராகவுமுள்ள அனைத்து சிவில் அமைப்புக்களையும் ஒன்றிணைத்து எந்த பிரிவுகளில் ஆணைக்குழுவுடன் இணைந்து செயலாற்றக்கூடியதாக இருக்கும் என்பன தொடர்பாக கலந்துரையாடி எழுத்து மூலமான தகவல்களை பெற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே ஆணைக்குழுவினால் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. 2013 பெப்ரவரி 19 ஆம் திகதி 35 சிவில் அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன் இவ்வேலைத்திட்டம் தொடர்பிலான கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. அக்கலந்துரையாடலில் உரிய அமைப்புக்களினூடாக பெறப்பட்ட தகவல்களை பரிசீலனைக்குட்படுத்தி ஆணைக்குழவின் 2013 ஆம் ஆண்டு வேலைத்திட்டத்தினுள் அவற்றினை முன்னுரிமைப்படுத்தி தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இவ்வேலைத்திட்டத்தில் தவிசாளர், ஆணையாளர்கள், சிரேஷ்ட அலுவலர் குழாம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய இணைப்பாளர் என்போர் ஈடுபட்டிருந்தனர். சிவில் அமைப்புக்களுடன் தொடர்புறுவதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் பின்வருமாறு. அவையாவன,

- சிவில் அமைப்புக்களினூடாக அனுப்பப்படும் முறைப்பாடுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுதல்
- சித்திரவதையை ஒழிப்பதற்கான பொருத்தணைக்கு அமைவாக அமைப்பு ஒன்றை ஏற்படுத்துதலுக்கான தொடர்பாடல்
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் திருத்தங்கள் தொடர்பில் சிவில் அமைப்புகள் கருத்து தெரிவித்தல்
- வெளிநாடுகளிலுள்ள வேலையாட்கள் தொடர்பில் ஒன்றிணைந்து செயற்படுதல்
- வடக்கு கிழக்கு காணி உரிமைகள் மற்றும் இயைபான விடயங்கள் தொடர்பில் தலையிடுதல்
- சிவில் அமைப்புக்களை உள்ளடக்கிய தரவுத்தளத்தினை தயாரித்தல்
- வேண்டுகோள் விடுக்குமிடத்து மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை நடாத்துதல்
- முதியோர் உரிமைகளை மேம்படுத்தல்
- மனித உரிமைகள் பற்றிய கல்விப் பாடவிதானத்தை பரந்தளவில் வடிவமைத்தல் தொடர்பில் தலையிடுதல்

சிவில் அமைப்புக்களின் கூட்டங்களை தொடர்ச்சியாக நடாத்தும்படி ஆணைக்குழு விற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது வேலை முன்நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக சிவில் அமைப்புக்களுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டது

அவ்வாறே மாற்று கொள்கை நிலையத்தின் மூலம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையை தயாரிப்பது தொடர்பிலான உரிமையை பாதுகாப்பதற்கு மேற்பார்வை செய்தல், மேம்படுத்துதல் மற்றும் ஆலோசனை வழங்குதல் என்பவற்றின் கீழ் வெவ்வேறான அத்தியாயங்களை தயாரித்தல் உசிதமானது என முன்வைக்கப்பட்ட ஆலோசனையை ஆணைக்குழு ஆண்டறிக்கையினை தயாரிக்கும்போது கவனத்திற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டில் பிரதேச மட்டத்திலும் சிவில் அமைப்புக்களின் கூட்டத்தை நடாத்தி அவ்வமைப்புக்கள் ஒன்றிணைந்து வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

முதியோர் உரிமைகள் தொடர்பில் ஹெல்ப்பேஜ் (HELPAGE) நிறுவனத்துடன் செயற்படுதல், பாடசாலை பாடவிதான பரிந்துரைக்கமைய மனித உரிமைகளை உள்ளடக்குதல் தொடர்பில் கல்வி அபிவிருத்திக்கான இலங்கை சங்கத்துடன் (SLAAD) செயற்படுதல், வெளிநாட்டில் உள்ள வேலையாட்களின் உரிமைகள் தொடர்பில் அமெரிக்கன் சொலிடாரிட்டி சென்டர் (American Solidarity Centre) மற்றும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை பொறுப்பு (Law and Society Trust) என்பவற்றுடன் செயற்படுதல், வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்காக பவரல் (PAFERRAL) என்பவற்றுடன் இணைந்து செயற்படுதலானது சிவில் அமைப்புக்களுடன் இணைந்து தலையீடுகளைச் செய்த சில சந்தர்ப்பங்கள் ஆகும்.

## 4.2 அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு

- தேசிய மனநல சுகாதார நிறுவனத்தின் உயர் தொழிலாண்மை ஒழுக்க விதிகளின் மீளாய்வு குழுவில் உறுப்பாண்மையுள்ள ஆணைக்குழுவின் அனுசரணை கல்வி மற்றும் விசேட நிகழ்சித் திட்டங்களுக்கான பிரிவின் பணிப்பாளரினால் இவ்வாண்டினுள் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இக்குழுவினூடாக இலங்கை வைத்தியர் சங்கத்துடன் நடாத்தப்பட்ட வேலைத்திட்டத்திற்கும் ஆணைக்குழுவானது தொடர்பட்டு காணப்படுகின்றது. உயர்தொழிலாண்மை ஒழுக்க விதிகளுக்கான கொள்கை, தேசிய வழிகாட்டற் கோட்பாடுகள், விபத்து மற்றும் நன்மைகள், தனிப்பட்டதும் மற்றும் நம்பிக்கையுடையதுமான மனித உரிமைகள் தொடர்பில் புலனாய்வு செய்யும் முறைமை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

- சமூக சேவைகள் அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட சைகை மொழி தொடர்பான சட்டத்தை வரைவதற்கு ஆணைக்குழுவானது ஆதரவை வழங்கியுள்ளது.

- தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சினூடாக சமூக ஒருமைப்பாடு தொடர்பான தேசிய கொள்கை திட்டத்தினை நடைமுறைப்படுததுவதற்காக இடம்பெற்ற குழுநிலைக் கலந்துரையாடல் ஒன்றிற்கு ஆணைக்குழுவானது ஆதரவை வழங்கியுள்ளது.

- கைத்தொழில் அமைச்சின் ஊடாக தேசிய மனித உரிமைகள் திட்டத்தின் முன்னேற்றத்தினை விசாரணை செய்வதற்காக ஏற்பாடுசெய்யப்பட்ட கலந்துரையாடலுக்கு ஆணைக்குழு தொடர்ச்சியாக பங்குபற்றி வந்துள்ளது.

- ஆண் பெண் சமுதாயங்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளை ஒழிப்பதற்கு சுகாதார அமைச்சினால் செய்யப்படவேண்டிய தேசிய முந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஆதரவினை வழங்குவதற்காக சுகாதார அமைச்சின் விசேட வைத்திய நிபுணர் லக்ஷ்மன் சேனானாயக்க அவர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று ஆணைக்குழுவில் நடாத்தப்பட்டது.

- வீட்டு பணியாட்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக தேசிய தொழிலாளர் அமைப்பின் 189ஆம் உடன்படிக்கையின் கீழ் (C189) வீட்டு பணியாட்களின் சேவை தொடர்பில் குறிப்பிடப்படும் தேசிய மற்றும் சா்வதேச மட்டத்திலான சில கலந்துரையாடல்களுக்கு ஆணைக்குழு தனது ஆதரவினை வழங்கியுள்ளது. வீட்டு வேலையாட்களின் உரிமைகளை பின்பற்றுவதனூடாக அவற்றினை பாதுகாத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது. வெளிநாடுகளில் வசிப்போர் தொடர்பாக ஆசிய சங்கம் மற்றும் இலங்கை சங்கம் மற்றும் அமெரிக்கன் சொலிடாரிட்டி நிலையத்துடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான வேலை நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஆணைக்குழு ஆதரவு வழங்கியுள்ளது.

- பேட்ரிக் ஈபோ்ட் சிப்டெயின் நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட வெளிநாடுகளில் இலங்கைப் பணிப்பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான திறந்த கலந்துரையாடலொன்றுக்கு ஆணைக்குழு ஆதரவு வழங்கியுள்ளது.

- மாா்கா நிறுவனத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் உள்ள விடயங்கள் தொடர்பில் இடம்பெற்ற புத்திஜீவிகளுடனான கலந்துரையாடலுக்கு ஆணைக்குழு ஆதரவு வழங்கியுள்ளது.

- சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருப்போரின் பிள்ளைகளுடனான நட்புறவு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன உளைச்சலுக்குட்பட்ட பிள்ளைகளுடன் செயற்படுதல் தொடர்பிலான வேலைத்திட்டத்துக்கு ஆணைக்குழு ஆதரவளித்துள்ளது.

- ஹேல்பேஜ் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து வீட்டிலுள்ள முதியோா்களின் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் ஆணைக்குழுவில் இடம்பெற்றுள்ளது.

- வாக்களிப்பதற்கான உரிமை தொடர்பிலான சூழல் ஒன்றை உருவாக்குவதன் பொருட்டு பாடசாலை மாணவர்களுக்கு திட்டம் ஒன்றை வரைவதற்கும் நியாயமான தேர்தலொன்று இடம்பெற்றமை தொடர்பாகவும் மக்கள் தொடர்புநிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

- 2013ஆம் ஆண்டில் இலங்கை டிறான்ஸ்பரன்சி இன்டர்நெசனல் நிறுவனத்தின் ஊடாக ஆணைக்குழுவிடமிருந்து கோரப்பட்டதாவது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வருகின்ற முறைப்பாட்டாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளின் வினைத்திறன் தொடர்பில், வலுவிலிருக்கும் தன்மை மற்றும் மதிப்பீட்டிற்கு வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருமாறும் என்பதாகும். இம் மதிப்பீடு தொடர்பில் தகவல்களைச் சேகரிப்பதற்கு வினாக்கொத்துக்களை முன்வைப்பதும் நேர்காணல்களை நடாத்துவதும் இன்றியமையாததென குறிப்பிடப்பட்டுள்ளது. மேலேயுள்ள கோரிக்கையின்படி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முறைப்பாட்டாளர்களிடமிருந்து விடயங்களை விசாரணை செய்வதற்கும் அது தொடர்பாக ஆணைக்குழுவின் நிலமனைக்குள் நுழைந்து செயற்படுவதற்கு டிறான்ஸ்பரன்சி இன்டர்நெசனல் நிறுவனதின் குழுவுக்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுப்பதற்கு ஆணைக்குழுவானது ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

## 4.3 விசேட கலந்துரையாடல்
## சனாதிபதியுடனான சந்திப்பு

2013.02.28 அன்று ஆணையாளர்கள் மேன்மைதகு சனாதிபதியைச் சந்திதது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

- ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துக்கு நிரந்தர கட்டடமொன்றை பெற்றுக்கொடுத்தல்
- மாவட்ட மட்டத்தில் பிரந்திய நிலையங்களை தாபித்தல்
- ஆணைக்குழுவின் அலுவலக குழாமை ஓய்வூதியம் பெறும் சேவையாளர்களாக நியமித்தல்
- 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்துக்கு ஆலோசிக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளல்.

### தேர்தல் ஆணையாளரைச் சந்தித்தல்

2013.09.11 ஆந் தேதியன்று தேர்தல் ஆணையாளரை அழைத்து பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

- வடமாகாண தேர்தலை பதிவு செய்தல்
- மாகாண சபை தேர்தலை நடத்துதல்
- அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புடைமை
- பொலிசு உத்தியோகத்தர்களின் சுயாதீனமான செயற்பாடு
- வன்முறை நடவடிக்கைகளை குறைப்பதற்கு அரசியல் கட்சியுடன் கலந்துரையாடுதல்
- அரச ஆதனத்தை பிழையான முறையில் பயன்படுத்துதல் மற்றும் அச்சூழ்நிலையினை நிருவகித்தல்
- தேர்தல் கண்காணிப்புக் கடமைகள்

### பொலிஸ்மா அதிபரைச் சந்தித்தல்

2013.09.16 அன்று பொலிஸ்மா அதிபருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :-

அதற்கிணங்க பின்வரும் விடயங்கள் தொடர்பாக பொலிஸ்மா அதிபரின் தலையீட்டுடன் நடவடிக்கை எடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

- பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பிலான பயிற்சியினை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் தொடர்ச்சியாக நடாத்துதல்.

- 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 28ஆம் பிரிவில் கூறப்படுவதாவது ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் தடுப்புக் கட்டளை தொடர்பிலான விபரங்களை தெளிவுபடுத்துதல் மற்றும் அனைத்து தகவல்களையும் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறச் செய்ய திட்டமிடுதல்.

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெறும் விசாரணைகளுக்கு சமூகமளிக்கும் போது போதிய ஆயத்தங்களுடன் சமுகமளித்தல்.
- பொலிசு திணைக்களத்துக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெறும் விசாரணைக்கு சட்டப் பிரிவின் உதவி பொலிசு உத்தியோகத்தர் நவாஸ் அவர்களை பிரதான நபராக நியமித்தல்.
- பொலிசு திணைக்களத்துக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்
- ஆணைக்குழுவின் விசாரணை தொடர்பில் பின்வரும் பொலிசு நிலையங்களின் பொலிசு பொறுப்பதிகாரிகள் அறிக்கை சமர்ப்பிக்காமை மற்றும் சமூகமளிக்காமை தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்
  அப்பொலிசு நிலையங்களாவன மத்துகம, பாணதுறை, (தெற்கு) வத்தளை, பிலியந்தல, கொஹூவல, களுத்துறை, (தெற்கு) பயாகல, கடவத்தை மற்றும் பேலியகொடை
- திருகோணமலை மாவட்டத்தில் அக்காலப்பகுதியில் இடம்பெற்ற கைதுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்
- பொலிசுநிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிப்போர் தொடர்பிலான ஆவணங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல்
- பின்வரும் பொலிசு நிலையங்களின் சிறைக்கூடுகளை விஸ்தீரணம் செய்தல், அவையாவன வல்வெட்டித்துறை, இளவாலை, பளை, பூநகரி, முழங்காவில், நாச்சிகுடா என்பனவாகும்.
- பின்வரும் பொலிசு நிலையங்களில் தமிழ் மொழியைப் பேசுகின்ற பெண் பொலிசு உத்தியோகத்தர்களுக்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல்
- நீண்ட காலமாக மறியல் சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கு எதிராக உடனடியான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு உடன்படுதல்.

## 4.4 சர்வதேச நிறுவனங்களுடனான தொடர்புகள்

### பொது நலவாய நாடுகளின் செயலகத்துடன நடவடிக்கையை ஆரம்பித்தல்

பொது நலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மா அவர்கள் 2013.02.12ஆம் தேதியன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணையாளர்களை சந்தித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். அக்கலந்துரையாடலில் இலங்கை சனநாயகம் மற்றும் மனித உரிமைகள் எழுச்சிக்காக பொது நலவாய நாடுகளின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தினார். மேலும் சிவில் அமைப்புக்களுடன் செயற்படுவற்கான கதவு திறக்கப்படவேண்டும் என்றும் அதன் மூலமே மிகச் சிறந்த வினைத்திறனுடைய சேவையினை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் விசேடமாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதே தினம் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக 2013.02.22 அன்று செயலாளர் மூலம் ஆணைக்குழுவின் தவிசாளரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனமான தன்மை மற்றும் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் என்பவற்றுக்காக இலங்கை அரசுடன் ஏற்படுத்திய ஒருமைப்பாட்டுக்கிணங்க 2013.02.13 அன்று வெளியிடப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்டதன் படி பின்வரும் விடயங்களின் கீழ் செயற்படுவதற்காக விரைவான ஒத்துழைப்பை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பெற்றுக்கொடுக்க முடியும் என்பதாகும். அவ்விடயங்களாவன:-

- ஆணைக்குழுவின் அலுவலர் குழாத்திற்கு கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குதல்
- மனித உரிமைகள் இணைப்பு தொடர்பாக பொலிஸாருக்கு வழங்கப்படும் பயிற்சிகளை விரிவாக்குதல்
- மனித உரிமைகளை அறிக்கையிடுதல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிகளை அதிகரித்தல்
- தேசிய செயற்பாட்டாளர்கள் தொடர்பில் ஒருங்கிணைப்பினை அதிகரித்தல்
- மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் விசாரணைகளுக்கான ஒத்துழைப்புக்களை வலுவாக்குதல்

இது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கும் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கும் பொது நலவாய நாடுகளின் செயலாளர் மனித உரிமைகள் பிரிவின் தலைவர் மார்ச் மாதமளவில் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் சிரேட்ட முகாமையாளர்களை சந்திப்பதற்கு வருகை தருவதற்கு ஆலோசிப்பதாக செயலாளர் நாயகம் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தார். அதன் பிரதிபலனாக மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பொது நலவாய நாடுகளின் மனித உரிமைகள் பிரிவுடன் இணைந்து நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அதனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் தகமையை விருத்தி செய்வதற்காக மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தேசிய விசாரணை ஒன்றை நடாத்தும் முறை பற்றி வேலை நிகழ்ச்சித் திட்டமானது ஜீலை மாதம் 02-04 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. இதன்

கருப்பொருளானது சா்வதேச தரங்களுக்கு ஏற்ப தேசிய விசாரணையை நடாத்துதல் ஆகும். இவ் வேலைத்திட்டத்தில் பங்குபற்றுவா்களான அம் மனித உரிமைகள் பிரிவின் தலைவா் மற்றும் மனித உரிமை உத்தியோகத்தா்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளா்களும் மேலும் உள்நாட்டின் மனித உரிமைகள் தொடா்பாக கற்றறிந்த சில புத்திஜீவிகள், நமிபியா தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் ஒம்புட்ஸ்மனும் வழக்குரைஞருமான (advocate) ஜோன் வோல்டா் ஆகியோா் தொடா்புபட்டிருந்தனா். வேலைத்திடடத்தில் இறுதி இலக்காக அமைந்திருந்தது தேசிய விசாரணையொன்றினை நடாத்துதல் தொடா்பில் அலுவலகத்தின் தகைமையை வலுவாக்குதல் என்பதாகும்.

பொதுநலவாய நாடுகளின் தொழிநுட்ப உதவியின் அடிப்படையில் நடாத்தப்பட்ட இரண்டாவது வேலைநிகழ்ச்சித்திட்டத்தில் தேசிய நல்லினக்க முயற்சியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்புக்கள் தொடா்புபட்டுள்ளது. இவ்வேலைத்திட்டமானது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் செப்டெம்பா் 26-27 ஆகிய இரண்டு நாள் வேலைநிகழ்ச்சித்திட்டமாக வவுனியாவில் நடைபெற்றது. இச்செயற்பாட்டிற்கு அப்பிரதேசத்தில் செயற்படுகின்ற அரசசாா்பற்ற நிறுவனங்களை இணைத்துக் கொண்டமையானது விசேடமானதோா் அம்சமாகும். இவ்வேலைதிட்டத்திற்கு வளவாளா்களாக பொநலவாய நாடுகளின் மனித உரிமைகளுக்கான பிரிவின் உத்தியோகத்தா்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளா்கள் போன்றோா் பங்குபற்றியிருந்தனா். இதன் விசேட வளவாளராக வட அயா்லாந்தின் சமாதானம் மற்றும் நல்லிணக்க குழுவின் பணிப்பாளா் மைக்கல் தொரதி அவா்கள் கலந்துகொண்டிருந்தாா்.

- **ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான பொது ஆணையாளரின் இலங்கைக்கான விஜயம் மற்றும் ஆணைக்குழுவுடனான சந்திப்பு**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளா் இலங்கை அரசின் அழைப்பை ஏற்று 2013 ஒகஸ்ட் மாதம் 25ஆம் தேதி தொடக்கம் 31 ஆம் தேதி வரை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிந்தாா். 2013.08.29ஆம் தேதி அன்று ஆணையாளா் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவா்கள் மற்றும் சிரேஸ்ட அலுவலக ஊழியா்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளாா்.

ஆணைக்குழுவின் தலைவா் அவா்கள் ஆணையாளின் இலங்கை விஜயத்தின் போது ஆணைக்குழுவுக்கும் சமுகமளித்தமையிட்டு தனது மகிழ்ச்சியை தெரிவித்துக்கொண்டு அவரை வரவேற்றாா். அத்துடன் ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடா்பான அவரது வினாக்களுக்கு தவிசாளரினால் விரிவான விளக்கமளிக்கப்பட்டதுடன் ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்குள் இற்றைவரை ஆற்றப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடா்பாகவும் தெளிவுபடுத்தியிருந்தாா். அதன் பின்னா் ஆணையாளா் அவா்கள் தேசிய மனித உரிமை நிறுவனத்திற்கு மனித உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடா்பில் விசேடமான பணிகள் உள்ளன என்றும் தனது விஜயத்தின்போது தான் எதிா்நோக்கிய அநுபவங்களையும் பிரச்சினைகளையும் பொறுப்பேற்று அவை அனைத்தையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பவுள்ளதாக தெரிவித்திருந்தாா். பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடா்பில் ஆணைக்குழு உடனடியாகத் தலையிட்டு அது தொடா்பில் ஆணைக்குழுவின் ஸ்தீர நிலைமையை வெளிப்படுத்தவுள்ளதாகவும் அவா் தெரிவித்தாா். இறுதியாக ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடா்பில் தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் அவற்றை அறிக்யையிடுவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இலங்கைக்கான பிரதிநிதி ஊடாக வசதிகளை ஏற்படுத்துவதற்கு தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டாா்.

## 4.5 சர்வதேச நிறுவனங்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல்

- **சர்வதேச பாராளுமன்ற குழுவுடனான கலந்துரையாடல்**

2013 யூலை 09ஆம் தேதியன்று சர்வதேச பாராளுமன்ற குழுவில் மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமையாளா் இலங்கைப் பாராளுமன்ற புறட்டகோல் உத்தியோகத்தர் மற்றும் உரிய குழுவின் வேறு உறுப்பினா்கள் சிலா் ஆணைக்குழுவுடன் இணைந்து விசேட கலந்துரையாடலுக்கு சமூகமளித்திருந்தனா். இச்சா்வதேச அமைப்பானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பினா்களைக் கொண்டுள்ளதுடன் 5 அரச செயற்பாட்டுக் குழுக்களையும் உள்ளடக்குகின்றது. இக்குழுவிற்கு பாராளுமன்ற அமைச்சர்கள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடா்பாக இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. அம்முறைப்பாடு தொடா்பில் பூரணமான அறிவினைப் பெற்றுக்கொள்வதே இக்கலந்துரையாடலின் நோக்கமாகும் எனத் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டது. பாராளுமன்ற அமைச்சா்களுடன் இடம்பெறும் நிகழ்ச்சித்திட்டம் தொடா்பில் ஆணைக்குழுவானது இக்குழுவிற்குத் தெரியப்படுத்தியுள்ளது. நாட்டில் சனநாயகத்தை தாபிக்கும் பொருட்டு அமைப்பின் ஊடாக இலங்கை அரசுக்கும் மற்றும் பாராளுமன்றத்துக்கும் ஒத்துழைப்பை வழங்குவதற்காகவும் தமது உறுப்பினா்கள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடா்பில் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்வதும் இக்கலந்துரையாடலின் இலக்காகும் என அவா்கள் தெளிவுபடுத்தியிருந்தனா். இங்கு ஆணைக்குழுவின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினா்களாலும் வேறு அரசியல் நடவடிக்கை செயற்பாட்டாளா்களினாலும் முன்வைக்கப்படும் சில முறைப்பாடுகள் தொடா்பான விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

இம்முறைப்பாடுகள் தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன அவர்களினால் மடு தேவாலயத்துக்கு செல்வதற்கு தமக்கு தடை விதிக்கப்பட்டமை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுக்கு செய்திருந்த முறைப்பாடு தொடர்பில் அடிப்படை உரிமை மீறப்படவில்லை என்பதனால் செல்லுபடியற்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே பாதிக்கப்பட்ட திறத்தவர்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையீட்டினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அவர்களின் ஊடாக பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு சேர்ப்பது தொடர்பான முறைப்பாடு ஒன்றும், பாராளுமன்ற அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அவர்களினால் செய்யப்பட்ட பேருந்து கட்டணம் உயர்த்துதல் தொடர்பான முறைப்பாடு ஒன்றும் ஜயலத் ஜயவர்தன அவர்களால் சுகாதார அமைச்சுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வடமத்திய மாகாணத்தில் உள்ள சிறுநீரக நோயாளர்களின் நிலைமை தொடர்பான முறைப்பாடுகள் சம்பந்தமாக தெளிவுபடுத்தப்பட்டது. மேலும் முன்னாள் இராணுவத் தளபதியும் சனாதிபதி வேட்பாளருமான சரத் பொன்சேகா அவர்களின் மனைவியினால் தமது கணவரின் தடுத்துவைப்பு மற்றும் தடுத்து வைத்திருக்கும் நிலைமை தொடர்பாக விசாரணை செய்வதற்கு அவரது வேண்டுகோளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட தலையீடு, கொழும்பு நகர சபையில் பிரதி மேயரான அசாத் சாலி அவர்களின் தடுப்பு நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட தலையீடு, கடுவெல மேயர் பி.எஸ். புத்ததாஸ அவர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு பொலிசாரால் ஏற்படுத்தப்படும் தடைகள் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள் ஆகியன தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது. ஏதாவது சந்தர்ப்பங்களில் படுகொலைசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலான விசாரணையானது பொலிசு திணைக்களத்தின் விடயதானத்துக்குள் வருகின்றமையையும் குழு தெளிவுபடுத்தியுள்ளது.

- **பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல்**

பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் மேல்மட்ட உறுப்பினர்கள் சிலர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர். ஆணைக்குழுவுடன் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இக்குழு வடக்கு கிழக்குக்கான தனது சுற்றுப்பயணத்தின் போது கிடைக்கப்பெற்ற அனுபவங்களை விபரித்தனர். .30 வருட காலமாகவிருந்த யுத்தம் மற்றும் சுனாமி தாக்கம் என்பவற்றின் பின்னரான துரித அபிவிருத்தி தொடர்பில் அவர்களது கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

பின்வரும் விடயங்கள் முறைப்பாட்டுக் குழுவினால் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டன :-

பிரித்தானியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சேவையின் ஊடாக 2013ஆம் ஆண்டு பொதுநலவாய மாநாட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இலங்கை அரசுடனான உடன்படிக்கையில் கையொப்பமிடும் போது இலங்கை அரசின் ஊடாக அவை மீளாய்விற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனைக் கூற்றின் உரிமையை கவனத்திற்கொள்ளும்போது தங்காலை பிரதேச சபையின் பிரதிநிதியினால் வெளிநாட்டு பிரசையொருவர் படுகொலை செய்யப்பட்டமை தனியார் சொத்துக்களை சட்டத்திற்கு முரணாக கைப்பற்றுதல் யுத்த நினைவுச் சின்னங்களை நிறுவுதல் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை என்பவற்றை கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொண்டு தவிசாளர் தெரிவித்திருப்பதாவது 30 ஆண்டுகால யுத்தத்தின் பின்னர் தேசிய பாதுகாப்புக்காக சிற்சில வரையறைகளை மீறுதல் இடம்பெற்றுள்ளது எனவும் அவ்வரையறைகள் மக்களின் மனித உரிமைகளை மீறாதளவிற்கு அமுல்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என்பதாகும்.

அவ்வாறே பொலிஸாரின் விடயதானத்துக்குள் அமைகின்ற விடயங்களை ஆணைக்குழுவினால் விசாரணை செய்ய முடியாது என்றும் ஆனால் அவற்றை மேற்பார்வை செய்ய முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார் சொத்துக்கள் அல்லது காணி தொடர்பில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை ஆணைக்குழுவினால் விசேடமாக வடக்கு மாகாணத்தில் நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவையினூடாக தீர்த்துக்கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
அவ்வாறே யுத்த நினைவுகள், யுத்த வெற்றி, என்பதனை விட இணக்கத்தை ஏற்படுத்துதல் பொருத்தமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பிரதம நீதியசரை பதவி நீக்கும் சேவைப் பிரமாணமானது துரிதப்படுத்தப்பட்டதெனவும் தெளிவுபடுத்தப்பட்டது.

## தென்ஆபிரிக்காவின் உயர்ஸ்தானிகர்களுடனான கரந்துரையாடல்

2013.10.31ஆம் திகதி தென்ஆபிரிக்காவின் உயர்ஸ்தானிகர்களுடனான ஆணைக்குழு கலந்துரையாடலொன்றினை மேற்கொண்டுள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் எதிர்காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஓர் விடயமாகும் என அவர் தெரிவித்ததுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மக்களுக்காக பாரியளவிலான கடமைகளை செய்ய வேண்டும் என்றும் கலந்துரையாடியுள்ளார். அவரது வருகையின் பிரதான நோக்கமாக அமைந்தது எதிர்காலத்தில் தெற்காசிய தேசிய மனித உரிமைகள் நிறுவனத்துடன் இணைந்து எவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுத்தச்செல்வது என்பது பற்றியதாகும். தேசிய மனித உரிமைகள் நிறுவனம் என்ற வகையில் அனுபவங்களைப் பகிர்வதற்கான வேலைநிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

அவ்வாறே பொது நல வாய நாடுகளின் ஆவணங்களுக்கான அலுவலகத்தின் தலையீட்டினால் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது எதிர்வரும் இரண்டு ஆண்டுகளினுள் பொதுநலவாய நாடுகளின் உறுப்பினரான இலங்கைக்கு மிகவும் முக்கியமானது என்றும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

**• அமெரிக்க தூதுவராலய அலுவலகத்தின் பிரதிநிதிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்**

2013 சனவரி 29ஆம் தேதியன்று ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இக்குழு ஆணைக்குழுவிடம் தற்போது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எவ்வாறு இடம்பெறுகின்றன எனவும் எவ்வாறான ஒழுங்கினடிப்படையில் ஆணைக்குழுவில் கோவைகள் பேணப்படுகின்றன என்பது தொடர்பாகவும் விசஊதுக்கொண்டது. தவிசாளர் இது தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன் ஆணைக்குழுவில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தியிருந்தார்.

அரசிஊமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் நீதிமன்றத்தின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்கும் ஆணைக்குழு இது தொடர்பில் கவனத்தற் கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

### 4.6 வெளிநாட்டு சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுதல்

| இலக்கம் | பெயர் மற்றும் பதவி | நாடு மற்றும் மாநாடு /கலந்துரையாடல் / கூட்டம் / வேலைநிகழ்ச்சித்திட்டம் | காலப்பகுதி |
|---|---|---|---|
| 01 | நீதியரசர் பிரியந்த ஆர்.பி. பெரேரா அவர்கள் - தவிசாளர் | லண்டன் பொது நலவாய நாடுகளின். தொடர்பிலான வட்டமேசை மாநாடு | 2013.05.01 2013.05.03 |
| | கலாநிதி எச் டப். டபள்யு மஹாநாமஹேவா-ஆணையாளர் | | |
| | எம்.ஆர்.பிரியதர்ஸன- வவுனியா பிராந்திய அலுவலகத்தின் ஒருங்கிணைப்பாளர் | | |
| | திரு ஏ.சி.ஏ. அசீஸ்- விசாரணை உத்தியோகத்தர் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் | | |
| | திரு.டி.கனகராஜ்- யாழ்ப்பாணம்- இணைப்பாளர் | | |
| 02. | எப்.எப்.எம்.எம்.ஜி.கே ஹேரத் - சட்ட உத்தியோகத்தர் | பிலிப்பைன்ஸ்- தேசிய மனித உரிமைகள் நிறுவனம் பற்றிய யும் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய கல்வி கற்கை நெறி | 2013.05.13 2013.05.16 |
| 03. | செல்வி. சிராணி ராஜபக்ச- பணிப்பாளர்- கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித் திடங்களுக்கான பிரிவு | மியன்மார்- ஆசியா பசுபிக்- பயிற்சியளிப்பதற்கான வேலைத்திட்டம் | 2013.06.03 2013.06.07 |
| 04. | திருமதி.சமந்தி ஜயமான்ன பரணகம — செயலாளர்- | அவுஸ்திரேலியா- சிரேட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களின் வட்டமேசை மாநாடு | 2013.08.24 2013.08.25 |
| 05. | எம்.ஏ.என்.சந்திரசிறி- விசாரணை உத்தியோகத்தர் | நேபாளம்- தெற்கு ஆசியா பிராந்திய புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய நிகழ்ச்சித் திட்டம் | 2013.09.18 2013.08.22 |
| 06 | கலாநிதி எஸ்.டபபிள்யு.பிரதிபா மஹாநாமஹேவா அவர்கள்- ஆணையாளர் | டோஹா கட்டார்-தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் ஆசியா பசுபிக் 18ஆவது ஆண்டு நிறைவு கூட்டம் மற்றும் இரு திறத்தவர்களுடனான மாநாடு | 2013.10.01 2013.10.03 |

# அத்தியாயம் 05

# பிராந்திய அலுவலகங்களின் செயற்பாடுகள்

## 5.0 அறிமுகம்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு தலைமை அலுவலகத்தினை விட 10 பிராந்திய அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அவ் அலுவலகங்களை நடாத்திச்செல்வதற்கு அரச ஒதுக்கீட்டின் மூலம் மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையான கட்டடமொன்றில் பிராந்திய அலுவலகத்திற்கு சொந்தமான வாகனம் மற்றும் பிராந்திய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான பிராந்திய இணைப்பாளர் மற்றும் அலுவலர் குழாமொன்றும் உள்ளது. இப்பிராந்திய அலுவலகத்தின் ஊழியர்கள் ஆணைக்குழுவின் நிரந்தர அலுவலர் குழாமைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் வெளிநாட்டு நிதி உதவியின் கீழான செயறத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக பிராந்திய அலுவலகத்தில் செயற்திட்ட உத்தியோகத்தர்களும் உள்ளனர்.

10 பிராந்திய அலுவலகங்களினுள் 06 அலுவலகங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ளது. அவையாவன யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை கல்முனை மற்றும் அம்பாறை என்பனவாகும். ஏனைய 04 அலுவலகங்களும் வடமத்திய, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களுக்கு உட்பட்ட அநுராதபுரம், கண்டி, பதுளை மற்றும் மாத்தறை ஆகிய நகரங்களிலும் அமைந்துள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தினூடாக ஒழுங்கமைக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பிராந்திய இணைப்பாளர்கள் பங்குபற்றுவதுடன் அந்நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பிராந்திய இணைப்பாளர்களுக்கான கூட்டமொன்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர் குழாத்தின் பங்கேற்றலுடன் இடம்பெறும்.

அவ்வாறே 2013 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தினூடாக கிளிநொச்சி நடமாடும் அலுவலகமும் கண்டி பிராந்திய அலுவலகத்தினூடாக நுவரெலியா நடமாடும் அலுவலகமும் வாரத்தில் ஒருநாளைக்கு நடாத்தப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக புத்தளம் நடமாடும் அலுவலகமானது தலைமை அலுவலகத்தின் விசாரணை உத்தியோகத்தர் ஒருவரினால் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் நடாத்தப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்களின் நடவடிக்கைகளில் மனித உரிமைகளை பாதுகாத்தல், முறைப்பாட்டு நடவடிக்கை, மனித உரிமைகளை மேம்படுத்தல், விஜயங்களை மேற்கொள்ளும் பொறிமுறை மற்றும் சிவில் அமைப்புக்களுடன் செயற்படுதல் போன்றன பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

ஒவ்வொரு பிராந்திய இணைப்பாளராலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையொன்றைத் தயாரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பிராந்திய அலுவலகங்களின் அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு இவ் அத்தியாயம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 5.1 அம்பாறை பிராந்திய அலுவலகம்

### அறிமுகம்

இவ் அலுவலகத்தினூடாக அம்பாறை மாவட்டம் உள்ளடக்கப்படுகிறது. மனித உரிமை ஆணைக்குழுவின் 08 பணியாளர்கள் இவ்வலுவலகத்தில் கடமையாற்றுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தின் பிரதான மாவட்டம் அம்பாறை மாவட்டமாகும். அது 4431,154 சதுரக்கிலோ மீற்றர் வரையான பரப்பளவில் அமைந்துள்ளதுடன் மொத்த சனத்தொகை 651,515 ஆகும். அம்பாறை மாவட்டத்தில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் ஆகிய மூவினத்தவர்களும் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தில் 20 பிரதேச செயலகப் பிரிவுகளும் 505 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் உள்ளன. அவ்வாறே மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமங்களின் எண்ணிக்கை 825 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளதுடன் அங்கு வாழுகின்ற மக்களின் பிரதான சீவனோபாயமாக விவசாயம் காணப்படுகின்றது.

2013ஆம் ஆண்டுக்கான தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்தி குறிப்பிடத்தக்களவு செயற்படுத்தப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனத்திட்டம், காணி உரித்து பெற்றுக்கொடுத்தல் போன்றவை அவற்றுள் பிரதானமானவையாகும்.

றம்புக்கன்ஓயா திட்டத்தின் கீழான மஹாஓயா பிரதேசத்தின் காணி மஹாவலித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டது. அதன்கீழ் அப்பிரதேச மக்களுக்கு வயற் காணிகள் பகிர்ந்தளித்தக்கப்பட்டன. பானம பிரதேசத்தை அண்மித்து கடற்படையினர் முகாம்களை அமைத்து வருவதனால் றாகம்வெல, பாணம மக்களுக்கு சொந்தமாக இருந்து பரம்பரையாக பயிர்ச்செய்கை பண்ணப்பட்டு வந்த காணியை அம்மக்கள் இழக்க நேர்ந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் சித்திரவதை, சட்டவிரோதமாக கைதுசெய்தல், தடுத்துவைத்தல் தொடர்பான முறைப்பாடுகள் இவ்வருடத்தில் குறைவடைந்துள்ளமையை காணமுடிகிறது.

## மனித உரிமைகளை பாதுகாத்தல்
## முறைப்பாட்டு நடவடிக்கை

2013 ஆம் ஆண்டு பிராந்திய அலுவலகத்துக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 143 ஆகும். இவ்வருடத்தினுள் முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 133 ஆகும். ஆலோசனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் 885 நபர்கள் இப்பிராந்திய அலுவலகத்திற்கு வருகைதந்துள்ளனர்.

### முறைப்பாடுகளை வகைப்படுத்துதல் - அம்பாறை பிராந்திய அலுவலகம்

| முறைப்பாட்டின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியாள் சுதந்திரம் | சித்திரவதை | 15 |
| | உடல் மற்றும் உள ரீதியிலான பிரச்சினைகள் | 09 |
| சட்ட விரோதமாக கைது செய்யப்படுதல் அல்லது தடுப்பு நிலைமை | | 09 |
| செயலற்ற தன்மை | | 46 |
| தொழில் | | 34 |
| கல்வி | | 03 |
| வேறு | | 27 |
| **மொத்தம்** | | **143** |

சில விசேட தலையீடுகள்

- அம்பாறை லாஹுகல ஆரம்ப பாடசாலையை அமைக்கும்போது முன்னைய விவசாய பாடசாலையில் பெற்றோர்களின் எதிர்ப்பினால் ஏற்பட்டிருந்த பதற்றநிலைமை ஆணைக்குழுவின் தலையீட்டினால் சுமுகமடைந்தது.
- அம்பாறை, பானம மீனவ துறைமுகத்தில் கடற்படையினர் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதனால் மீனவ நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாட்டிற்கிணங்க ஆணைக்குழுவின் தலையீட்டினால் மீனவர்களுக்கு உதவி புரிய முடிந்துள்ளது.
- கெவிலிற்றாமடு மற்றும் மாணிக்கம்மடு ஆகிய பிரதேசங்களில் இடம்பெயர்ந்தோரை மீள் குடியேற்றும்போது ஏற்பட்ட முரண்பாட்டினை நீக்குவதற்காக தலையீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## நிலைய சோதனைகன்

பிராந்திய அலுவலகத்தினூடாக கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை 12 ஆகுமென்பதுடன் ஒரு வருடத்தினுள் 97 தடவைகள் பொலிஸ் நிலையங்கள் கண்காணிக்கப்பட்டுள்ளன. இதனை விட சிறைச்சாலைகளும் சோதனையிடப்பட்டுள்ளன.

பொலிஸ் நிலையங்களை சோதனையிடும்போது அவதானிக்கப்பட்டுள்ள ஒரு விடயம் யாதெனில் பொலிஸ் சிறைக்கூண்டுகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்போருக்கு போதுமான வசதிகள் இல்லை என்பதாகும். அதேபோன்று அம்பாறை சிறைச்சாலையின் சிறைக்கூண்டுகளை கண்காணிக்கும்போதும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு போதுமான வசதிகள் இல்லை என்பது கண்காணிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமைகள் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்.

2013 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் தொடர்பான 28 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருப்பதுடன் அவற்றுள் 22 அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் 06 வேலைத்திட்டங்களும் உள்ளடங்குகின்றன.

இப்பிராந்திய அலுவலகம் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நெருக்கமான உறவுகளைப் பேணிவருகின்றது. அதன் விளைவாக அரச திணைக்களத் தலைவர்கள் தங்களது பணியாட்தொகுதியினருக்கு அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும்படி ஆணைக்குழுவிடம் வேண்டுகோள்விடுத்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரச பணியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், சிவில் சமுக தலைவர்கள், சிவில் பிரசைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் என்போர் நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்குக்குழுக்களாவர்.

2013 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் நடாத்தப்பட்டபோது அங்கு அம்பாறை பிராந்திய அலுவலகத்தினூடாக பதுளை மற்றும் கண்டி பிராந்திய அலுவலக பணியாளர் குழாத்தின் உதவியுடன் மனித உரிமைகள் மேம்படுத்தல் காட்சியகம் ஒன்றும் நடாத்தப்பட்டுள்ளது.

## சிவில் அமைப்பு குழுக்களுடன் செயற்படுதல்

அரச சார்பற்ற அமைப்புக்களுடன் ஆணைக்குழு இணைந்து மாவட்டம் பூராகவும் மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது. 2013 ஆம் ஆண்டில் சேவாலங்கா மன்றம், கெமி சக்தி மன்றம், சர்வோதயம் மற்றும் மனித அபிவிருத்தி மன்றம் என்பன அம்பாறை பிராந்திய அலுவலகத்துடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களாகும்.

## 5.2 அநுராதபுரம் பிராந்திய அலுவலகம்

## அறிமுகம்

வடமத்திய மாகாணத்தை உள்ளடக்கும் வகையில் தாபிக்கப்பட்ட அநுராதபுரம் பிராந்திய அலுவலகமானது பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. ஆயினும் இதற்கு மேலதிகமாக புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டப் பிரதேசங்களும் இக்காரியாலயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 10714 சதுர அடி பரப்பளவுடைய இடப்பரப்பு வடமத்திய மாகாணத்தினுள் அடங்குகின்றது. இங்கு 104,664 எண்ணிக்கையிலான மக்கள் வாழ்கின்றனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 9 பணியாளர்கள் இப்பிராந்திய அலுவலகத்தில் பணியாற்றுகின்றனர்.

இம்மாகாணத்தில் 31 பிரதேச செயலகங்களும் 1008 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் 01 மாநகர சபை மற்றும் 26 பிரதேச சபைகளும் உள்ளன. 42 பொலிஸ் நிலையங்கள் இப்பிராந்திய அலுவலகத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ளன.

2013 ஆம் ஆண்டில் வடமேல் மாகாணசபை தேர்தலின்போது தம்புள்ளை மற்றும் குருநாகல் பிரதேசங்களில் இடம்பெற்ற தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் கலந்துகொண்டுள்ளது.

## மனித உரிமைகளை பாதுகாத்தல்
## முறைப்பாடுகளை கையாளுதல்

2013 ஆம் ஆண்டில் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 748 ஆகும். இவற்றில் பெரும்பாலானவை பொலிஸ் திணைக்களத்திற்கு எதிரானவையாகும்.

சிறுவர்கள் தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகள் சம்பந்தமாக கவனஞ்செலுத்தியபோது, (விசேடமாக முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை, கடமைகளை முறையாக மேற்கொள்ளாமை மற்றும் பக்கச்சார்பாக நடவடிக்கை எடுத்தல் போன்ற முறைப்பாடுகள்) அதற்குரிய பிரதிவாதி தரப்பினரால் முன்வைக்கப்படுகின்ற விடயங்களை ஆராயுமிடத்து சட்டத்தில் இடம்பெறுகின்ற வெவ்வேறான பிரச்சினை தொடர்பில் பிரதிவாதிகள் சட்டத்திற்கிணங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது. விசேடமாக திருமண வயது 18 என்றும் நியதிச்சட்ட கற்பழிப்பு தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும் வயது 16 ஆகும் என்பதுடன் நடைமுறையிலுள்ள முடிவற்ற நிலைமையானது பிரச்சினைக்குரிய விடயமாகும் எனவும் அவதானிக்கப்பட்டது. அதனால் இயைபான சட்டங்களின் ஒருமைத் தன்மையை ஏற்படுத்தும் பொருட்டு சட்டத் திருத்தங்களை துரிதமாக மேற்கொள்வதற்கு தேவையான பரிந்துரைகளை அரசாங்கத்துக்கு முன்வைத்து அது தொடர்பில் விசேட திருப்பம் ஒன்றினை ஏற்படுத்துதல் உசிதமானது என பிராந்திய அலுவலகம் ஆலோசனை வழங்கியுள்ளது.

காணிப்பிரச்சினை தொடர்பில் முன்வைக்கப்பட்ட அநேகமான முறைப்பாடுகள் ஒத்திசைவான தன்மைகளைக் கொண்டிருப்பதுடன் காணிகளைக் கைமாற்றுதல், அடுத்துரிமையாளர்கள் நியமனம், பின்னுரிமையாளர்கள் நியமனம் போன்ற காரணங்களின் அடிப்படையில் இப்பிரச்சினைகள் தோன்றியுள்ளமையினை அவதானிக்கமுடிகிறது. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் இடம்பெறவேண்டிய திருத்தம் துரிதமாக இடம்பெறாமையினால் இந்நிலைமை உருவாகியுள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டிருப்பதனால் அதற்கான சட்டத் திருத்தமொன்றினை விரைவாக மேற்கொள்வதற்கு தேவையான பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு செய்வதற்கும் அது தொடர்பில் விசேட கல்வியினை உருவாக்குதல் பொருத்தமானது என்றும் பிராந்திய அலுவலகம் அடையாளங்கண்டுள்ளது.

**முறைப்பாட்டு வகைகள் - அநுராதபுரம் பிராந்திய அலுவலகம்**

| முறைப்பாட்டின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியாள் சுதந்திரம் | சித்திரவதைகள் | 69 |
| | அச்சுறுத்தல் | 26 |
| | இழிவான நடாத்துகைக்கு உட்படுத்துதல் | 19 |
| | உடல் மற்றும் உளரீதியான துன்புறுத்தல்கள் | 11 |
| சட்டவிரோதமான கைது/தடுத்துவைத்தல் | | 57 |
| காணாமல் போதல் | | 01 |
| செயலற்ற தன்மை | | 180 |
| தொழில் | ஆட்சேர்ப்பு | 08 |
| | பதவி உயர்வு | 21 |
| | பதவி நிலை | 01 |
| | இடமாற்றம் | 32 |
| | சேவை நிறுத்தம் | 38 |
| | சேவை இடைநிறுத்தம் | 13 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 01 |
| | சம்பளம் | 14 |
| | விசேட வரப்பிரசாதங்கள் | 12 |
| ஓய்வூதியம் | | 16 |
| கல்வி | பாடசாலை அனுமதி | 14 |
| | பல்கலைக்கழக அனுமதி | 01 |
| | பாடசாலை/ பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுக்காற்றுப் பிரச்சினை | 01 |
| | கல்வித்திணைக்களங்களில் வளப்பற்றாக்குறை | 01 |
| சுகாதாரம் | அக்கறையின்மை | 02 |
| சொத்துக்கள் | காணிப்பிரச்சினை | 164 |
| | வீதிகள் | 12 |
| | நீர் | 03 |
| | வாடகை வழங்கல் | 01 |
| | மின்சாரம் | 04 |
| | விவசாயிகள் பிரச்சினை | 05 |
| அரச நலன்புரிகள் | சமுர்த்தி | 01 |
| | உர மானியம் | 02 |
| | அரச ஒதுக்கீடுகள் | 01 |
| சூழல் | மண் அகழ்தல் | 01 |
| | வளி மசடைதல் | 01 |
| விடயப்பரப்பிற்கு அடங்காதவை | | 15 |
| **மொத்தம்** | | **748** |

இம்முறைப்பாடு தொடர்பில் உரிய திறத்தவர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று ஆரம்ப கட்ட புலனாய்வு நடவடிக்கைகள் பிராந்திய அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அவற்றில் பிரதிவாதி திறத்தவர்களினால் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது தற்பொழுது இக்குளத்தினுள் கழிவுகளை எடுத்து அவற்றை அகற்றுவதற்கு காலை மற்றும் இரவுநேரக் கடமைகளுக்காக மகாவலி பாதுகாப்பு படையணி உத்தியோகத்தர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் வருகை தரும் யாத்திரிகர்கள் நீராடுவதற்கு அபயவாவியில் குளிப்பதற்கான நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்பதுமாகும். அவற்றில் மேலும் விடயங்கள் முன்வைத்து அநுராதபுர நீர்ப்பாசன பொறியியலாளரினால் குறிப்பிடப்பட்டிருப்பதாவது நீண்ட காலமாக திசாவெவ குளத்தில் யாத்திரிகர்கள் நீராடல் இடம்பெறுவதனால் ஒரேதடவையில் அவர்களை அகற்றுதல் நடைமுறை சாத்தியமற்றது என்றும் சீரான முறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்ட ஒழுங்கொன்றினை தயாரிக்க முடியும் என்பதாகும்.

ஆனால் திசாவெவ குளத்து நீர் பாவனையாளர் சங்கத்தினால் வருடாந்தம் அநுராதபுரத்தில் நடைபெறும் பொசொன்விழா காலத்தில் வருகை தரும் யாத்திரிகர்கள் காரணமாக திசாவெவ குளத்தின் நீர் அசுத்தமடைவதாக தெரிவித்து மீண்டும் மீண்டும் முறைப்பாடு செய்ததன் காரணமாக அம்முறைப்பாடுகள் அனைத்தையும் பரீட்சிப்பதற்காக மீண்டும் 2013.12.23 ஆம் திகதி அநுராதபுர நீர்ப்பாசன பொறியியலாளர், நகர ஆணையாளர், நீர்ப்பாசன பணிப்பாளர் மற்றும் முறைப்பாட்டாளர்களும் பிராந்திய அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

அவற்றில் பிரதிவாதிகள் சார்பில் சமுகமளித்திருந்த உத்தியோகத்தர்கள் கூறியிருப்பதாவது இப்பாதுகாப்பு நடவடிக்கை ஒழுங்குமுறையாகவும் தொடர்ச்சியாகவும் நடாத்திச்செல்வதற்கு பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்பு படையணியின் உதவி அவசியமானது என்றும் அநுராதபுர பிரதான குளங்களை இராணுவ நிர்வாகத்திற்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கைத் திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுவதனால் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றினை பெற்றுக்கொள்ள முடியும் என்று ஆணைக்குழுவில் ஏகமனதாக நிறைவேறியுள்ளது. (HRC/AP/ 504/2010 (I))

## நிலைய சோதனை

இவ் அலுவலகத்தினூடாக 42 பொலிஸ் நிலையங்கள் சோதனைக்குட்படுத்த வேண்டியிருந்ததுடன் ஒவ்வொரு மாதத்திலும் அவை சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சிறைச்சாலைகளானவை 13 தடவைகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

சிறுவர் இல்லங்கள் 21 தடவைகளும் முதியோர் இல்லங்கள் 4 தடவைகளும் மாற்றுத் திறனாளிகளின் இல்லம் 4 தடவைகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

முறைப்பாடுகள் கோவையிடப்பட்டு இருந்தமையினால் விசேட சிறைச்சாலைகளை கண்காணித்தலும் இடம்பெற்றுள்ளது.

2013 ஆம் ஆண்டு தடுப்புக் காவல் நிலையங்களை சோதனையிட்டபோது இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைகள் பின்வருமாறு.

01. சந்தேகநபர்களை நீதிமன்றத்தின் முன் கொணர்வதில் காலதாமதம்

02. சிறைக்கூடங்களில் சுகாதார வசதிகள் போதியளவு இல்லாமை பற்றி கவனத்திற்கொள்ளாமை

03. கைதுசெய்யும்போது தாக்குதல்

04. விசாரணைகளில் உள்ள குறைபாடுகள்

05. நன்நடத்தை திணைக்களத்தின் மேற்பார்வையிலுள்ள நிலையங்களில் தாய் தந்தை இழந்த குழந்தைகள், நலிவடைந்தோர், கைவிடப்பட்டோர் ஆகிய வகைப்படுத்தலின் கீழ் நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்களையும் மற்றும் நீதிமன்றத்தினால் புனர்வாழ்விற்கு அனுப்பப்பட்ட சிறுவர்களையும் ஒரே நிலையத்தில் தடுத்துவைத்தல்.

06. சிறைச்சாலையினால் வயது கூடிய சந்தேக நபர்களையும் வயது குறைந்த சந்தேக நபர்களையும் ஒரே பேரூந்தில் நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்கின்றமை

07. சிறுவர் இல்லங்களை சோதனையிட்டபோது துஸ்பிரயோகத்துக்குட்பட்டு பாதிப்புற்ற நிலையில் உள்ள சிறுவர்களை நீதிமன்றுக்கு அல்லது வேறு தேவைகளுக்காக அழைத்துச் செல்லும் போது வாகனப்போக்குவரத்து தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுகின்றதாகவும் அவதானிக்கப்பட்டது

## மனித உரிமைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள், மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பிலான வேலைநிகழ்ச்சித் திட்டங்கள், அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் போன்ற 40 நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வலுவலகத்தின் ஊடாக நடாத்தப்பட்டன.

அவ்வறிவூட்டலில் இராணுவ உத்தியோகத்தர்கள், பொலிசு உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், சமுக சேவை உத்தியோகத்தர்கள், சமயத் தலைவர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், இளைஞர் மற்றும் மாணவர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிற் சங்க உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் போன்ற இலக்கு குழுக்கள் பங்குபற்றினார்கள்.

சர்வதேச மகளிர் தினத்தன்று பெண்களுக்கான உரிமைகள பற்றி குற்ற விசாரணை தொடர்பில் பொலிசு திணைக்களத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்டமையானது விசேட அம்சமாகும்.

அதற்கு மேலாக மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதற்காக பாடசாலைகளுக்கிடையில் விவாதப் போட்டியொன்றும் நடாத்தப்பட்டது. மாவட்ட செயலக அலுவலகத்தில் நடைபெற்ற சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் தொடர்பில் ஆணைக்குழுவின் உதவியானது கிடைக்கப்பெற்றது.

சிவில் அமைப்புக்களுடன் செயற்படும்போது பெண்கள் அமைப்பினால் நடாத்தப்படும் ஆண் பெண் சமுக அமைப்புக்கிணங்க இடம்பெறும் வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினார்கள்.

### விசேட கலந்துரையாடல்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் வட மத்திய மாகாண பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்.

கடந்த சில ஆண்டுகளுக்குள் பிராந்திய அலுவலகத்துக்கு கிடைத்த முறைப்பாடுகளை வகைப்படுத்தும்போது பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றது.

இந்நிலைமையானது மேலும் அதிகரிப்பதற்கு பிரதானமாக வட மத்திய மாகாணத்துக்கு உரிய பிராந்திய அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து செயற்படும் அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற மாட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களின் செயற்பாடுகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளின் நிலைமை மற்றும் பொலிஸ் நிலைய சோதனைகளின் போது ஆணைக்குழுவின் கண்காணிப்புக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று வட மத்திய மாகாண பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உட்பட்ட அனைத்து உயர் பதவியிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுடனும் நடாத்துவதற்கு பிராந்திய அலுவலகமானது நடவடிக்கைகளை ஒழுங்கமைத்துள்ளது.

அதற்கமைவாக அந்நிகழ்ச்சித் திட்டமானது ஆணைக்குழுவின் கௌரவ தவிசாளர் அவர்கள், மற்றும் சட்டச் செயலாளர் என்போரின் தலைமையில் 2013.11.01 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பொலிஸ் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வடமத்திய மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர், பிரதி பொலிஸ் மா அதிபர், அநுராதரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களின் பொலிஸ் உத்தியோகத்தர்கள், இவ்விரு மாகாணங்களினதும் உள்ள அனைத்து உதவி பொலிஸ் அத்தியட்சகர்களுடன் அனைத்து பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர். அதேபோன்று இந்நிகழ்ச்சித் திட்டத்துக்கு அநுராதபுரம் பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய இணைப்பு உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக அனைத்து அலுவலக பணியாளர்களும் பங்குபற்றியிருந்தனர்.

பிராந்திய அலுவலகத்தினால் கடந்த காலங்களில் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போதும் பொலிஸ் நிலையங்களைச் சோதனையிடும்போதும் இனம் காணப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாகவிருந்தது.

01. பிராந்திய அலுவலகங்களில் கிடைக்கப்பெறுகின்ற கடிதங்களுக்கு பதில் அறிக்கைகள் வழங்குவதிலுள்ள தாமதம்.
02. சந்தேக நபர்களை நீதிமன்றத்துக்கு முன் கொணர்வதிலுள்ள தாமதம்
03. சிறைக்கூண்டுகளில் சுகாதார வசதிகள் போதுமைத் தன்மை பற்றி கவனத்தில் எடுக்காமை
04. கைது செய்யும் போது தாக்குதல்
05. விசாரணை செய்வதிலுள்ள குறைபாடுகள்

கலந்துரையாடலின் இறுதியில் சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபரினால் 2013 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகத்துக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் பிரதிவாதிகளாக பங்குபற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலான அறிக்கைகள் ஒவ்வொரு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்புவதற்கு சந்தர்ப்பமானது வழங்கப்பட்டது. அதற்கமைவாக ஒவ்வொரு பொலிஸ் நிலையத்தினையும் பிரதிநித்துவப்படுத்தும் வகையில் சமுகமளித்த பொலிஸ் பொறுப்பதிகாரிகள் தங்களது பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக பிராந்திய அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் குறுகிய விளக்கமொன்றைப் பெற்றனர்.

அத்துடன் பிராந்திய இணைப்பாளரினால் 2013ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகத்துக்கு பொலிஸ் நிலையங்களினால் அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை, தற்போது விசாரணைகள் இடம்பெறும் முறைப்பாடுகளின்

எண்ணிக்கை மற்றும் தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் அல்லது பரிந்துரைகள் வழங்குதலுக்காக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்பிலான விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

இறுதியாக ஆணைக்குழுவானது கௌரவ தவிசாளர் மற்றும் சட்டச் செயலாளரின் பங்குபற்றுதலுடன் விசேட ஆலோசனையொன்றை முன்வைத்தது. அதாவது வருடத்துக்கு இரண்டு தடவைகள் இவ்வாறான சந்திப்பொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் திணைக்களம் போன்றவை நடாத்துதல் சாலச் சிறந்தது எனவும் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்ளும் விழிப்புணர்வின் மூலம் பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளைக் குறைப்பதற்கு இது உதவிபுரிகின்றது என்பதேயாகும்.

### சிவில் அமைப்புக்களுடனான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

- 2013.04.03 ஆம் திகதியன்று பொலநறுவை மனித அபிவிருத்தி மன்றத்துடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதுடன் அங்கு அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் பொலன்னறுவை மாவட்டத்தில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் தொடர்பான விடயங்கள் அதிகளவில் முன்வைக்கப்பட்டதுடன் அங்கு அவர்களால் ஆணைக்குழுவிடம் மேலும் வேண்டுகோள்விடுக்கப்பட்டிருப்பதாவது சட்டம் பற்றி பெண்களுக்கு போதுமான அறிவின்மையால் அது தொடர்பில் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை ஏற்பாடுசெய்தல்வேண்டும் என்பதாகும். அதற்கமைவாக 2013 .யூலை மாதம் 4ஆம் திகதி பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் வேறு அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் என்போரை இணைத்து தமன்கடுவ பிரதேச செயலகத்தில் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

- 2013.05.08 ஆம் திகதி ரஜரட்டை கமி பஹண எனும் பெயருடைய அரச சார்பற்ற அமைப்பொன்று பிராந்திய அலுவலகத்துடன் கலந்துரையாடலொன்றினை மேற்கொண்டிருந்தது. அந்த அமைப்பின் பிரதான நோக்கமானது கட்டுக்கோப்பின்றியுள்ள பெண்களை ஒழுங்கு நெறிப்படுத்துவதற்காக புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்கும் அனைவரினதும் கவனத்துக்குட்பட்ட சமுக நோய்களை விலக்குவதற்கும் சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து சுகாதார பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்துவதுமாகும். இம்முறையில் அந்நிறுவனத்தின் காப்பினைப் பெறுகின்ற பெண்கள் எவ்வித நியாயமான காரணங்களும் இன்றி பொலிசாரினால் கைது செய்யப்படுதல் தொடர்பாகவும் அவர்களுக்கு இதுவரையும் அடையாள அட்டைகள் இல்லாமையால் பாரிய பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளதால் அது தொடர்பில் ஆணைக்குழுவானது இவ்விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்படியும் வேண்டுகோள் விடுத்தது. அதற்கிணங்க இது தொடர்பில் அநுராதபுரம் தலைமை பொலிஸ் பரிசோதகருடன் கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தி உரிய விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அடையாள அட்டை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் மாவட்டப் பதிவாளரை சந்தித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பமும் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

- தலாவ ஊனமுற்ற பெண்கள் சங்கத்தின் ஊடாக அவர்களுடைய நிலையத்தில் தங்கி வாழ்கின்ற ஊனமுற்ற பெண்களுக்கு பிரதேசத்திலுள்ள இளைஞர்களினால் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் மற்றும் கேலி கிண்டல்கள் தொடர்பிலும் உரிய கட்டடம் அமைந்துள்ள காணியின் எல்லைப் பிரச்சினை தொடர்பிலும் அந்நிலையத்தின் தலைவரினால் முறைப்பாடொன்று பிராந்திய அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் தலாவ பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் மாகாண சமுக சேவைகள் பணிப்பாளர் போன்றோருக்கு தொலைபேசியூடாக பிரச்சினையை தெரியப்படுத்தி அதில் தலையிடும்படியும் விரைவாக இந்நிலைமையினை இல்லாதொழிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5.3 பதுளை பிராந்திய அலுவலகம்

### அறிமுகம்

இந்த அலுவலகம் ஊவா மாகாணத்தின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள மொனறாகலை மற்றும் பதுளை மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதேசங்களை ஒன்றிணைத்து செயற்படுகின்ற அலுவலகமாகும். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊழியர்கள் ஏழு பேர் இவ்வலுவலகத்தில் பணியாற்றுகின்றனர்.

ஊவா மாகாணம் 8500 சதுர கிலோமீற்றர் வரையான பரப்பளவைக் கொண்டிருப்பதுடன் இது இலங்கையின் மொத்த பரப்பளவில் 12.9% ஆகும். இங்குள்ள சனத்தொகையின் எண்ணிக்கை 1,259,800 ஆகும். இப்பிராந்திய அலுவலகத்தின் நியாயாதிக்கத்தினுள் 2 மாவட்டச் செயலகங்களும் 26 பிரதேச செயலகங்களும் உள்ளடங்குகின்றன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அதிகமானவை இம்மாகாணத்தில் உள்ளன. மஹியங்கனை, தம்மான, மற்றும் பிபில ஆகிய பிரதேசங்களில் ஆதிவாசி இன குடிமக்கள் வாழ்ந்துவருகின்றமை விசேடமாக குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

2013 ஆம் ஆண்டில் இம்மாகாணத்தில் சுகாதார சேவை நிலைமைகள் விருத்தியடைந்துள்ளன எனவும் கல்வி நிலையினை உயர்த்துவதற்கு மத்திய அரசு மற்றும் மாகாண சபை என்பன விசேட நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து செல்வதனையும் அவதானிக்க முடிந்தது. மொனராகலை மாவட்டத்தில் வீதிகள் அதிகளவில் அபிவிருத்தி செய்யப்பட்டு போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளதனை ஆணைக்குழுவின் கண்காணிப்பு நடவடிக்கைகளின்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

### மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
### முறைப்பாடுகளை கையாளுதல்

அலுவலகத்துக்குகிடைத்துள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 302 ஆகும். அவற்றுள் தொழில் முறைகேடுகள் சம்பந்தமான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைத்துள்ளன. இப்பிராந்திய அலுவலகமானது மேலும் கண்காணித்திருப்பதாவது பிரதேசத்தின் மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகளை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக அறிந்திருந்தும் நேரடியாக ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடுதலானது பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது என்பதாகும்.

1167 பேர் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பிராந்திய அலுவலகத்துக்கு சமுகமளித்தள்ளனா்.

**முறைப்பாட்டின் வகைகள் - பதுளை பிராந்திய அலுவலகம்.**

| முறைப்பாட்டின் தன்மைகள் | | முறைப்பாட்டின் எண்ணிக்கைகள் |
|---|---|---|
| தனிநபர் சுதந்திரம் | சித்திரவதை | 19 |
| | உடல் மற்றும் உள ரீதியான துன்புறுத்தல்கள் | 23 |
| சட்டவிரோதமாக கைதுசெய்தல் / தடுத்துவைத்தல் | | 11 |
| செயற்பாடற்ற தன்மை | | 32 |
| தொழில் | | 87 |
| கல்வி | | 13 |
| சுகாதாரம் | | 02 |
| ஆதனம் | | 60 |
| அரச நலன்புரி | | 05 |
| சூழல் | | 04 |
| வேறு | | 18 |
| விடயப்பரப்பிற்குள் வராதவை | | 28 |
| **மொத்தம்** | | **302** |

### நிலைய சோதனை

இவ் அலுவலகத்தினூடாக 28 பொலிஸ் நிலையங்கள், 09 பொலிஸ் காவல் நிலையங்கள் என்பவற்றுடன் 03 சிறைச்சாலைகளும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படவேண்டியவை ஆகும். பொலிஸ் நிலையங்கள் 62 தடவைகளும் சிறைச்சாலைகள் 04 தடவைகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

பொலிஸ் நிலையங்களை சோதனையிடும்பொழுது காலவரையின்றி கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது பல சந்தா்ப்பங்களிலும் அவதானிக்கப்பட்டதுடன் துரிதமாக நீதி மன்றத்தில் முன்கொணா்வதற்கும் அல்லது பொலிஸார் பிணையினடிப்படையில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தல்தென இளையோர் சீர்திருத்த மத்தியநிலைய கண்காணிப்பும் ஆணைக்குழு அதிகாரமும்

2013.05.20 ஆம் திகதி மேற்படி மத்திய நிலைய கண்காணிப்பின்பொழுது இருவர் தாக்கப்பட்டு வைத்திய சிகிச்சை அளிக்கப்படாது தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக சிறைக்கைதிகளினால் தெரிவிக்கப்பட்டதற்கு அமைவாக பிராந்திய இணைப்பாளரினால் அனைத்து சிறைக்கூண்டுகளும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டது. ஆனால் அவ்வாறு தாக்குதலுக்குள்ளான எவரும் காணப்படாததினால் நிலையத்திற்குப் பொறுப்பான சிறைச்சாலை உத்தியோகத்தரிடம் அவ்வாறு தாக்குதலுக்குட்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்போர் தொடர்பாக விசாரித்தபொழுது அவ்வாறான எவரும் இல்லை என்று தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அதற்கு பின்னர் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளரினால் தல்தென சிறைச்சாலை ஆணையாளருக்கு இந்நிலைமை தொடர்பாக ஆராய்ந்து பார்க்குமாறு தெலைபேசியூடாக தெரியப்படுத்தப்பட்டது.

அதன் விளைவாக அவர் ஆணைக்குழுவிற்கு தெரிவித்துள்ளதாவது தாக்குதலுக்குள்ளான நபர் ஒருவர் உத்தியோகத்தர்களினால் தன்னிடம் அழைத்து வரப்பட்டதாகவும் அக் கைதியிடமிருந்து வாக்குமூலம் ஒன்றினை பெற்றுக்கொண்டு அவரை உரிய சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் என்பதாகும். அதற்கு மறுநாள் பிராந்திய இணைப்பாளர் இச்சிறைக்கைதியை விசாரணைசெய்து வாக்குமூலத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக மாகாண பொது வைத்தியசாலைக்குச் சென்றபொழுது கைதியின் பாதுகாப்பிற்காக இருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் அவ்விடத்தில் இல்லாமையால் தடுத்து வைக்கப்பட்டவரிடமிருந்து வாக்குமூலத்தினைக் குறிப்பெடுத்துக்கொண்டார். இவ்வாறு வாக்குமூலத்தினை பதிவுசெய்யும்போது சிறைச்சாலை காவலாளி ஒருவர் அவ்விடத்திற்கு வந்து சிறைச்சாலையின் மேலதிகாரிகளிடமிருந்து எழுத்துமூலமான அனுமதியின்றி வாக்குமூலத்தினை பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்க முடியாது எனக் கூறினார்.

இச்சம்பவத்தின் பின்னர் மனித உரிமை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் அதிகாரங்களை பிரயோகிப்பது தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதென்ற நிலைமைபற்றி தெளிவுபடுத்தி தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தினார். தலைமை அலுவலகத்தின் தலையீட்டினால் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினை தொடர்புகொண்டு இது தொடர்பாக தெரிவித்திருந்தும் அன்றைய தினம் வாக்குமூலத்தினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

அதன் பின்னர் ஆணைக்குழுவின் தவிசாளர் முன்னிலையில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், பதுளை சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் மற்றும் சம்பவத்துடன் தொடர்புபட்ட சிறைச்சாலை காவலாளி ஆகியோர் வரவழைக்கப்பட்டனர். அவ்வழைப்பின் போது ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டிருப்பதாவது இச்சம்பவத்தின் பின்னர் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை உத்தியோகத்தர்களது விசாரணை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்தை உள்ளடக்கிய கடிதமொன்று 2013.07.26 ஆம் திகதியே அனைத்து சிறைச்சாலை அத்தியட்சகர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்பதாகும். அவ்வாறே ஆணைக்குழுவின் அதிகாரங்கள் தொடர்பிலும் முறையான அறிவுறுத்தல் இன்மையால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அது தொடர்பில் ஆணைக்குழு முன்னிலையில் வருத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாமல் கவனித்துக்கொள்வதாகவும் மதிப்பிற்குரிய தவிசாளர் முன்னிலையில் ஏகமானதாக தெரிவித்தார்கள். (2013.07.26 ஆம் திகதிய கடிதத்தின் பிரதி ஒன்று இணைப்பு 05 ஆக இணைக்கப்பட்டுள்ளது)

## மனித உரிமை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

மனித உரிமைகள் சம்பந்தமான 17 கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் உறுப்பினர்கள் போன்றோர் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்குக்குழுக்கள் ஆவர்.

பதுளை மாவட்டத்தின் 04 பிரதேச செயலகங்களை சேர்ந்த 500பேர் வரையான அலுவலக மற்றும் கள உத்தியோகத்தர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பில் அறிவூட்டல் வழங்கப்பட்டதுடன் இவ்வாறான வேலைத்திட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுக்கும்படி ஏனைய திணைக்களத் தலைவர்களால் ஆணைக்குழுவிற்குத் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்களுக்கு நடாத்தப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு வளவாளர்களாக கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரும் தலைமை அலுவலகத்தின் சிரேஷ்ட முகாமையாளர் ஒருவரும் கலந்துகொண்டனர்.

## சிவில் ஒருங்கிணைப்புக் குழுக்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்

ஆணைக்குழு சிவில் ஒருங்கிணைப்புக் குழுக்களுடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது. சர்வோதய ஊவா மாகாண அலுவலகம் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் மதங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமை நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பதுளை ஸ்கொட் நிறுவனத்தினூடாக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வள அனுசரணை வழங்கியது.

மேலும் இலங்கை விழிப்புலனற்றோர் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கும் இவ் அலுவலகத்தின் அனுசரணை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிவில் அமைப்புக்களுடனான செயற்பாடுகளை வலுப்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் விசேட கூட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

## 5.4 மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம்

## அறிமுகம்

மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டம் கண்காணிக்கப்படுகின்றது. இவ்வலுவலகத்திற்கு ஆணைக்குழுவின் 8 ஊழியர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

அம்மாவட்டத்தின் சனத்தொகையானது 581,223 ஆகவுள்ளதுடன் 2633 சதுர கிலோ மீட்டர்கள் வரையிலான பரப்பளவினையும் கொண்டுள்ளது. இம் மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களும் 330 அரச பாடசாலைகளும், 12 பொலிஸ் நிலையங்களும் அமைந்துள்ளன. பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரமாக கமத்தொழில் மற்றும் மீன்பிடி என்பன காணப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பிரதிநித்துவப்படுத்தும் 3 அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் உள்ளனர்.

2013ஆம் ஆண்டில் மாகாண சபை மற்றும் பிரதேச சபைகள் மாவட்டத்தினுள் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளமையும், அம்பாறை மாவட்டத்தில் தேசத்துக்கான மகுடம் கணகாட்சியானது இடம்பெற்றதுடன் வீதி அபிவிருத்தி உட்பட்ட பரந்தளவிலான அபிவிருத்திகளும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாநகரத்தில் கல்லடிப்பாலம், வாகரைப்பாலம் மற்றும் வவுணதீவுப்பாலம் போன்றன பிரசித்தி பெற்ற இடங்களாகும் என்பதுடன் இவை புதிதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்பாடுகளிற் சிலவாகும்.

தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லிம் சமுகத்தினரின் கலாச்சார நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளமையும் முக்கியமானதாகும்.

சமத்துவ முறையில் அணுகுவதற்கான சந்தர்ப்பத்தினை உறுதிப்படுத்துவதற்காக மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களுக்கு விசேட தேவையுடையோரின் அணுகுதலை விரிவாக்கியமையானது விசேடமாக குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும்.

## மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

## முறைப்பாடுகளைக் கையாளுதல்

இவ்வலுவலகத்திற்கு ஆண்டு முழுவதும் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 452 ஆகும். பொதுவாக ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக சமுகமளித்தவர்களின் எண்ணிக்கை 458ஆகும் என்பதுடன் அவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர்.

அதிகளவிலான முறைப்பாடுகள் பொலிசாரின் செயற்பாடற்ற தன்மை காரணமாக பொலிசாருக்கு எதிராகவும் காணியைக் கைப்பற்றுதல் மற்றும் காணி உரிமை பிரச்சினைகள் தொடர்பிலும் கிடைக்கப்பெற்றுள்ளன.

### முறைப்பாடுகளின் வகைகள்

| முறைப்பாடுகளின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியாள் சுதந்திரம் | சித்திரவதை | 04 |
| | அச்சுறுத்தல் | 31 |
| | | |
| | உடல் மற்றும் உள ரீதியிலான துன்புறுத்தல் | 20 |
| சட்டவிரோதமாக கைது செய்தல் அல்லது தடுத்து வைத்தல் | | 27 |
| காணாமல் போதல் | | 17 |
| செயலற்ற தன்மை | | 91 |
| தொழில் | | 48 |
| கல்வி | | 57 |
| சுகாதாரம் | | 09 |
| ஆதனம் | | 70 |
| அரச நலன் | | 10 |
| சூழல் | | 06 |
| வேறு | | 62 |
| **மொத்தம்** | | **452** |

இணக்கப்பாட்டின் மூலம் தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகள்
தொழில் உரிமைகள்

மின்சார சபையின் ஊழியராக பணியாற்றிய ஒருவர் நிரந்தர சேவையாளராக பணியாற்றியபோது நிலக்கண்ணி வெடிப்பிற்குட்பட்டு அங்கவீனமுற்றிருந்தார்.

இம்முறைப்பாட்டாளரின் பதவி உயர்வு தொடர்பில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அவர் ஏனைய தகமைகளில் முன்னிலையில் இருந்ததுடன் அவருடைய அங்கவீனத்தினம் காரணமாகவே அவருக்கு பதவியுயர்வு கிடைக்கப்பெறவில்லை. இந்நிலைமையானது ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடப்பட்டதன் பின்னர் ஆணைக்குழுவின் தலையீட்டினால் அவருக்கு பதவியுயர்வினை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. (HRC/BCO/342/2012)

### புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள்

1. இளந்தாய் ஒருவர் அவருடைய குடும்பத்தில் இருந்து வெளிநாட்டுப் பணிப்பெண்ணாக செல்வதற்கு மேற்கொண்ட முயற்சி தொடர்பில் அவரது கணவரால் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் அப்பிரதேசத்தில் சிறுவர் உரிமைகளுக்கான கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் உரிமைகளுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தலையீட்டினால் வெளிநாடு செல்வது நிறுத்தப்பட்டது. 2வயதுடைய தமது பிள்ளையினுடைய பாதுகாப்பினை உறுதிப்படுத்தப்படாமலும் கணவரதும் எதிர்ப்புடனும் வெளிநாட்டுக்குச் செல்வது சாத்தியமற்றது என சிறுவர் உரிமைகளுக்கான கண்காணிப்பு மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெளிவுபடுத்தியுள்ளதை சம்பவத்தின் நிகழ்வுகளை கற்கும் போது ஆணைக்குழுவுக்கு தெளிவானது. (HRC/BCO/23/2013).

2. தமது மனைவி வெளிநாட்டு சென்றதன் பின்னர் துன்பங்களுக்கு உள்ளாவதாக கணவர் செய்த முறைப்பாடு தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவுக்கு அறிவித்து சவுதி அரேபியாவிலிருந்து மீண்டும் அழைத்து வரும் நடவடிக்கை ஆணைக்குழுவின் தலையீட்டினால் இடம்பெற்றுள்ளதுடன் தமது மனைவி பாதுகாப்பாக மீண்டும் வந்துள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டது எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (HRC/BCO/034/2012)

3. சவுதி அரேபியாவில் பணியாற்றும் போது இறந்த தனது கணவரின் உடலை கொண்டுவருவதற்கு வறுமை நிலையிலுள்ள பெண்ணொருவர் ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டைச் செய்துள்ளார். அவரது முறைப்பாட்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அது தொடர்பில் அக்கறையாக செயற்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார். உரிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆணைக்குழுவின் தலையீட்டினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சடலம் முறைப்பாட்டாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. (HRC/BCO/339/2013)

### சிறுவர் உரிமைகள்

1. பாடசாலையிலிருந்து விலகும் போது விலகல் சான்றிதழை வழங்காமை தொடர்பில் பாடசாலைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுட்டிற்கு விசாரணையின் பின்னர் தீர்வு காணப்பட்டது (HRC/BCO/005/2013)

2. மாணவிகளுக்கு பிரம்பினால் அடித்தமை மற்றும் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் அதிபர் மற்றும் ஆசிரியரை அழைத்து விடயத்தை தெளிவுபடுத்தியதுடன் அதன் பின்னர் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்ற உத்தரவாதத்தின் ஊடாகத் தீர்க்கப்பட்டது. (HRC/BC)/061/2013)

3. பிரதேசத்ததிலுள்ள பிரபல்யமான பெண்கள் பாடசாலைக்கு உயர்தரத்துக்கான தகமைகள் இருந்தும் அனுமதி கிடைக்காமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை ஆணைக்குழு விசாரணை மேற்கொண்டதன் பின்னரான தீர்வினால் பிள்ளைக்கு அப்பாடசாலைக்கான அனுமதியானது கிடைக்கப்பெற்றுள்ளது. (HRC/BCO/154/2013)

4. மாறுபட்ட திறன்களையுடைய பிள்ளைகள் தங்கியுள்ள சிறுவர் இல்லங்களில் இடம்பெறும் பாலியல் ரீதியலான துன்புறுத்தல்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டதனையடுத்து மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தின் ஊடாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. உரிய திறத்தவர்களை அழைத்து சம்பவத்துடன் தொடர்புடைய ஊழியரின் பணியை இடைநிறுத்துவதற்கும் நிருவாகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் உரிய அரச அதிகாரிகள் சிறுவர் இல்லங்களை உடனடியாக பார்வையிடுவதற்கும் இணக்கத்தையேற்படுத்துவதற்கும் ஆணைக்குழுவுக்கு இயலுமாகவிருந்தது. அரச உத்தியோகத்தர்கள் சிறுவர் இல்லங்களை பார்வையிடும்போது நிறுவனத்தின் பிரதான

நிருவாக உத்தியோகத்தருடன் கலந்துரையாடுகின்றனரே தவிர உள்ளகரீதியிலான பிரச்சினைகள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்படாதிருந்தமை ஆணைக்குழுவின் தலையீட்டினால் அடையாளம் காணப்பட்டுள்ள பிரதானமான மற்றுமோர் விடயமாகும். (HRC/BCO/022/2013)

## காணாமல்போன குடும்ப உறுப்பினர்களின் உரிமை

காணமல்போன குடும்ப உறுப்பினர்களை ஏமாற்றி அவர்களது சொத்துக்கள், பணம் என்பவற்றைப் பெறும் குழுவொன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படுவதாகஆணைக்குழுவிற்கு அறிக்கையிடப்பட்டதன் பின்னர் அக் குடும்ப் உறுப்பினர்களை அழைத்து காணாமல் போனோர் தொடர்பில் முறைப்பாடு செய்கின்ற முறைமை மற்றும் பல்வேறுபட்ட நிறுவனங்களினூடாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் முறைகள் தொடர்பான அறிவூட்டலொன்று ஆணைக்குழுவினூடாக நடைபெற்றது. இவ் அறிவூட்டலின் பின்னர் அவ்வாறான முறைப்பாடுகள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை. (HRC/BCO/81/2013)

## நிலைய சோதனை

இப்பிராந்திய அலுவலகத்தின் ஊடாக 11 பொலிஸ் நிலையங்களை ஒவ்வொரு மாதமும் சோதனை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிட்ட பொலிஸ் நிலையம் மீண்டும் மீண்டும் மாதத்துக்கு ஆகக்குறைந்தது 8 தடவைகள் சோதனைசெய்யப்பட்டு வருடத்தில் 102 தடவைகள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலைய சோதனையின்பொருட்டு உரிய முறையில் பொலிஸ் நிலையத்தினால் உதவிகள் பெற்றுத்தரப்படவில்லை எனத் தெரிவித்து பொலிஸ் நிலையத்தின் உதவிப் பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலமான அறிவித்தலொன்று 2013.09.12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் பிரதிப்பொலிஸ்மா அதிபரிடமிருந்து ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களது கடமைகளுக்கு உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல், பயிற்சியளித்தல் மற்றும் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை 31 ஆகும்.

அனேகமான நிகழ்ச்சித்திட்டங்கள் LLRC அறிக்கையினதும் மற்றும் தேசிய மனித உரிமை திட்டத்தில் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கமைவாக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களேயாகும். சில நிகழ்ச்சித்திட்டங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்களுடாக ஒழுங்கமைக்கப்பட்டு ஆணைக்குழுவின் வள அனுசரணையுடன் இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டங்களாகும். இப்பிராந்திய அலுவலக அதிகார எல்லைக்குட்பட்டு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் இலக்குக்குழுக்கள் சிலவற்றிற்கும் பரவலாக்கப்பட்டுள்ளன.

அக்குழுக்களின் பெயர்கள்: கிராம உத்தியோகத்தரின் கீழே செயற்படும் கிராம மட்ட சிறுவர் உரிமைகளை மேற்பார்வை செய்யும் குழு உறுப்பினர்கள், மாவட்ட செயலாளரின் கீழே செயற்படும் சிறுவர் உரிமைகளை மேற்பார்வை செய்யும் குழு உறுப்பினர்கள், கிராம மகளிர் சங்க உறுப்பினர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் முதியோர் குழு உறுப்பினர்கள் ஆவர்.

அரச உத்தியோகத்தர்களாக அதிபர்கள், ஆசிரியர்கள், நன்நடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமைகள் மற்றும் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், தாதிய மற்றும் மகப்பேற்று உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் சிரேஷ்ட, கனிஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோராவர்.

மாணவர் சமுகத்தில் பாடசாலை மாணவர்கள், முதலாம் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள புதிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்களும் ஏனைய குழுக்களாக குடும்பத் தலைவியாகவுள்ள பெண்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள், முதியோர் இல்ல நிர்வாகிகள், சமுகசேவையாளர்கள், சமுக தலைவர்கள், சமய தலைவர்கள், தொழிற் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், அரச சார்பற்ற அமைப்புக்களின் உறுப்பினர்களும் ஆவார்கள்.

அனைத்து மனித உரிமைகள் தொடர்பாகவும் விழிப்புணர்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளோரின் மொத்த எண்ணிக்கை 2755 ஆகும்.

### சிவில் அமைப்பு குழுக்களுடன் நடிவடிக்கைகளை மேற்கொள்ளல்

சிவில் அமைப்பு குழுக்களுடன் சேர்ந்து பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளை இவ் அலுவலகம் நடாத்தியுள்ளது. சிவில் அமைப்பு குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் வேறு கல்விமான்கள் போன்றோரைப் பங்குபெறச் செய்வதற்காக பிரதேச அமைப்பு குழு தாபிக்கப்பட்டது.

### பிரதேச ஒருங்கிணைப்பு குழுவிற்கு நடாத்தப்பட்ட வேலைத்திட்டம்.

மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை வலுவூட்டும் வகையில் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற மனித உரிமை பிரச்சினைகளை இனங்காணுதல் மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறு பிரச்சினைகளை இனங்காணுதல் மற்றும் அவற்றினை விலக்கிக்கொள்வதில் ஆணைக்குழுவின் செயற்பாடு எவ்வாறு அமைதல்வேண்டும் என்பது தொடர்பாகவும் சிவில் அமைப்புக்களின் ஒத்துழைப்பு மற்றும் அரச திணைக்களங்களின் பங்களிப்பு எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பனபோன்ற நோக்கங்களைக் கருத்திற்கொண்டு விசேட வேலைத்திட்டம் ஒன்று மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தினூடாக ஒழுங்கமைக்கப்பட்டது.

கிராம அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள், கிராம மகளிர் சங்க உறுப்பினர்கள், அரச ஊழியர்கள், ஓய்வு பெற்றோர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் உறுப்பினர்கள், சமயத்தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் இவ்வேலைத்திட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வேலைத் திட்டத்திற்கு பிரதான அலுவலகத்திலிருந்து ஆணையாளர் பங்குபற்றியிருந்ததுடன் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவினூடாக ஆணைக்குழு கோரியிருப்பது என்ன என்பது இங்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் இப்பிரதேச ஒருங்கிணைப்பு குழுவினூடாக பிரதேசத்தில் இடம்பெறுகின்ற குற்றங்களை இனங்கண்டு அவை தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகோள் விடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பங்குபற்றுனர்கள் பிரதேசத்தின் மனித உரிமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரச்சினைகளாக பின்வரும் விடயங்களை முன்வைத்தனர் -

1. சில நிறுவனங்கள் பிரதேச மக்களுக்கு பெருந்தொகையிலான கடன்களை வழங்குதல்மற்றும் அவற்றைத் திருப்பி செலுத்துவதிலுள்ள சிரமங்களும்.
2. இளம் சமுதாயத்தினர் போதைப்பொருட் பாவனைகளுக்கு அடிமையாகுவதால் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுதல்.
3. வறுமை நிலை காரணமாக பெண்களை விபச்சார தொழிலில் ஈடுபடுத்துதல்
4. சூழல் மாசடைதல் தொடர்பாக பிரதேசத்தின் அதிகாரிகள் சமுகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தாமை
5. தாய்மார்களை வெளிநாட்டு வேலைக்கு அனுப்புவதனால் பிள்ளைகளின் உறவு அற்றுப்போதல்
6. தனியார் பேருந்துகளின் தாமதம்
7. சட்டவிரோதமாக மணல் அகழ்ந்தெடுத்தலும் மற்றும் கடல் பாதிப்படைதல்
8. காணி அனுமதிப்பத்திரங்களை மாற்றுதல்
9. சில அரசியல்வாதிகள் வீதிகளின் பெயர்களை மாற்றுதல் மற்றும் அது தொடர்பில் சமுகத்தின் அதிருப்தி
10. ஞாயிற்றுக் கிழமைகளில் நடாத்தப்படுகின்ற மேலதிக வகுப்புக்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோருக்கு தடைகள் மற்றும் விபத்துக்களை ஏற்படுத்துதல்
11. முன்பள்ளி சிறார்களின் பாடசாலைக்கு அரசாங்கத்தின் பங்களிப்பு போதாமை
12. ஏறாவூர் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற காடழிப்பு
13. ஓட்டமாவடி பிரதேசத்தில் பாடசாலை வளாகத்தினுள் புத்தர் சிலையினை அமைப்பதனால் பொதுமக்கள் அதிருப்தியடைதல்
14. கிராம உத்தியோகத்தர்கள் இல்லாமை
15. முச்சக்கர வண்டிகளுக்கு மீட்டர் பொருத்துவதனை கட்டாயமாக்குதல்
16. தகவல் தொழில்நுட்ப பாடத்தினை தெரிவுசெய்த முஸ்லிம் பாடசாலைகளை மட்டும் இனம்காணுதல்.
17. பொலிஸ் உத்தியோகத்தர்களினால் தகவல் வழங்குவோரின் இரகசியத்தன்மை பேணப்படாமையால் பொலிஸார் மீதான அவநம்பிக்கை

மேற்படி இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு நடவடிக்கை எடுக்கவேண்டியது எவ்வாறு என்பது பற்றியும் ஆணைக்குழு எவ்வாறு செயற்படவேண்டும் என்பதுடன் இருபகுதியினரும் இணைந்து எவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டதற்கு அமைவாக பின்வரும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

- விழிப்புணர்வு செயற்பாடுகளை தொடர்ச்சியாக இடம்பெறச்செய்தல்
- சூழற்பிரச்சினை தொடர்பாக நகரசபை மற்றும் பிரதேச செயலகங்கள் விழிப்புணர்வு மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளாதவிடத்து ஆணைக்குழு அதில் தலையிடுதல்
- வீதிகளின் பெயர்ப் பலகைகளை மாற்றுதல் தொடர்பான விபரங்களை சேகரித்தல்
- தனியார் பேருந்து போக்குவரத்து சங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல்
- வனசீவராசிகள் திணைக்களத்துடன் காடழித்தல் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல்
- போதைப்பொருட்களை பாவிப்பதனால் ஏற்படும் கொடிய தாக்கங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல்
- சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்செல்லுதல் தொடர்பில் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபைகளுக்கு தகவல்களை வழங்குதல்
- தனியார் மேலதிக வகுப்புக்கள் தொடர்பாக பிரதேச அதிகாரிகளை அறிவுறுத்தல்

பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தினை மாதத்திற்கு ஒரு தடவை நடாத்துவதென்றும், அடையாள அட்டை வழங்கும்படி பங்குபற்றுனர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை ஆணைக்குழு கவனத்திற்கொண்டது.

## 5.5 யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம்

### அறிமுகம்

யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகமானது வட மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 5 ஊழியர்களும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் வேலை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் யுனிசெப் செயற்திட்டத்தின் கீழ் 4 ஊழியர்களும் இவ்வலுவலகத்தில் பணி புரிகின்றனர்.

கிளிநொச்சி நடமாடும் அலுவலகமானது ஒவ்வொரு வியாழக்கிழமையும் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தினால் மேற்பார்வை செய்யப்படும்.

யாழ்ப்பாண மாவட்டம் 1025 சதுர கிலோ மீட்டர் இடப்பரப்பிலும் கிளிநொச்சி மாவட்டமானது 1279 சதுர கிலோ மீட்டர் இடப்பரப்பிலும் அமைந்துள்ளது.யாழ்ப்பாண மாவட்டமானது 7 தீவுகளைக் கொண்டமைந்துள்ளமையானது விசேடமானதோர் அம்சமாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலகங்களும் 435 கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலகங்களும் 95 கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு மாநகர சபையும் 3 நகர சபைகளும் 13 பிரதேச சபைகளும் உள்ளதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பிரதேச சபைகள் மட்டுமே உள்ளன.

புனித வழிபாட்டுத் தலங்களான நல்லூர் ஆலயம் மற்றும் வேறு ஆலயங்களும் அத்துடன் நாக விகாரையும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் சனத்தொகை 650,720 பேர் ஆகவும் கிளிநொச்சி மாவட்டத்தின் சனத்தொகை 103717பேர் ஆகவும் காணப்படுகின்றது.

இவ்வாண்டில் யாழ் குடாநாட்டின் 6381 ஏக்கர் காணியானது பலாலி மற்றும் காங்கேசன்துறை அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு சுவீகரிக்கப்படுவதற்காக பாதுகாப்பு அமைச்சினால் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2013ஆம் ஆண்டின் யாழ் குடாநாட்டின் கடல் எல்லைக்குள் தென் இந்திய மீனவர்கள் மற்றும் இலங்கையின் யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சாராத மீனவர்கள் நுழைதல் போன்றவற்றினால் இப்பிரதேசத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பொறுப்புடைய நிறுவனமான மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் பொலிசார் என்போரை அழைத்து விசேட கூட்டமொன்று ஆணைக்குழுவில் நடாத்தப்பட்டது.

வட மாகாண சபைத் தேர்தலானது 2013.09.21 அன்று நடாத்தப்பட்டமையானது விசேடமானதாகும். இது 25 வருடங்களுக்குப் பின்னர் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தலாகும். நாட்டின் பிரதான அரசியல் கட்சியுடன் போட்டியிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பானது 5 மாவட்டங்களில் வெற்றியடைந்துள்ளதுடன் 38 மாகாண சபை ஆசனங்களில் 30 ஆசனங்களையும் கைப்பற்றி கொண்டுள்ளது.

பிரதேசத்தில் வாக்களிப்பானது 2010 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலில் 33% ஆக இருந்ததுடன் இம்முறை வாக்களிப்பானது 68 % மாக உயர்ந்துள்ளது. மத்திய அரசின் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 7 ஆசனங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் பெற்று வெற்றியடைந்துள்ளது.

2013 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் இரு பெண்கள் கடத்தப்பட்டு துஸ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் 2 சம்வங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் வேராவில் பிரதேசத்தில் வைத்தியசாலை உத்தியோகத்தர்களின் தலையீட்டுடன் 5 வயதிற்கு குறைந்த பிள்ளைகளையுடைய தாய்மார்களுக்கு பிள்ளைகளுடைய நிறையை அளந்ததன் பின்னர் குடும்பக் கட்டுப்பாட்டு மருந்துகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இது தொடர்பில் இரண்டு நோயாளர் காவு வண்டிகளும் (Ambulance) இணைக்கப்பட்டு போக்குவரத்து வசதி வழங்கப்பட்டு உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமைகளைப் பாதுகாத்தல் முறைப்பாடுகளைக் கையாளுதல்

பிராந்திய அலுவலகத்தின் ஊடாக 2013ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னரும் கோப்பிடப்பட்ட முறைப்பாடுகளில் 500க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் விசாரணை நடாத்தப்பட்டதுடன் 2013ஆம் ஆண்டில் மட்டும் 254 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

2013ஆம் ஆண்டில் காணாமற்போனோர் தொடர்பில் 12 முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டதுடன் அவற்றுள் 8 பேர் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இக்காணாமல் போன சம்பவம் தனிப்பட்ட காரணத்தினாலேயே இடம்பெற்றுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் 4 பேர் தொடர்பில் தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

2013ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிலும் பதிவு செய்யப்பட்டு 2013 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 246ஆகும்.

### முறைப்பாடுகளை வகைப்படுத்துதல்- யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம்

| முறைப்பாடுகளின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியாள் சுதந்திரம் | உடல் மற்றும் உள ரீதியிலான துன்புறுத்தல் | 67 |
| சட்டவிரோதமாக கைது செய்தல் அல்லது தடுத்து வைத்தல் | | 16 |
| காணாமல் போதல் | | 12 |
| செயலற்ற தன்மை | | 54 |
| தொழில் | | 47 |
| கல்வி | | 10 |
| சுகாதாரம் | | 02 |
| ஆதனம் | | 13 |
| அரச நலன் | | 12 |
| சிறுவர் | | 02 |
| விடயப்பரப்பிற்குள் வராதவை | | 19 |
| கிளிநொச்சி நடமாடும் அலுவலகத்தின் முறைப்பாடுகள் | | 126 |
| **மொத்தம்** | | **380** |

இப்பிராந்திய அலுவலகத்தின் ஊடாக 17 பொலிஸ் நிலையங்கள் சோதனை செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு பொலிஸ் நிலையமும் ஒவ்வொரு மாதமும் பசோதனையிடப்பட்டது. அவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட அனைத்து விஜயங்களின் எண்ணிக்கை 202 ஆகும். அவ்வாறே சோதனையின் போது தடுப்பு நிலைமை தொடர்பில் மேலும் முன்னேற்றகர நிலைமை மேற்கொள்ள வேண்டும் ஆலோசனையானது வழங்கப்பட்டது.

இச்சோதனைகளின்போது ஆரம்ப விசாரணையின்றி கைதுசெய்தல், தடுத்து வைத்தல் தொடர்பான ஆவணங்களை தாமதமாக சமர்ப்பித்தல், சில பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மனித உரிமைகள் பற்றி அக்கறை செலுத்தாமை, சில பொலிஸ் நிலையங்களில் சிறைக்கூண்டுகள் இன்மை போன்றவை அறிக்கையிடப்பட்டது.

இவ்வருடத்தில் யாழ்ப்பாண சிறைச்சாலையானது 9 தடவைகள் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொடர்ச்சியான சோதனை நடவடிக்கையினால் தடுப்பு நிலைமைகளில் முன்னேற்றமேற்பட்டுள்ளதனை அவதானிக்கப்பட்டது. சிறைச்சாலை அறைக்குள் போதிய வெளிச்சமின்மை, குடிப்பதற்கு சுத்தமான குடிநீர் பற்றாக்குறை, உணவு பானங்களில் சுகாதார நிலைமையானது விருத்தியடைதல் வேண்டும் போன்றவை கண்காணிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையினுள் சித்திரவதை இடம்பெறுதலானது அவதானிக்கப்பட்டதுடன் யாழ்ப்பாண பிரதேசத்தில் நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் போதியளவின்மை அத்துடன் சித்திரவதைக்குள்ளாகும் சாத்தியங்கள் இருத்தல் போன்றவற்றையும் பிராந்திய அலுவலகமானது அவதானித்தது.

அரச சிறுவர் இல்லமொன்று மற்றும் தனியாரால் நடாத்தப்படும் 17 சிறுவர் இல்லங்களும் பிராந்திய அலுவலகத்தின் ஊடாக சோதனைக்குட்படுத்தப்பட்டது. அரச சிறுவர் இல்லங்களானவை ஆண்டொன்றினுள் 10 தடவைகள் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

அப்போது போதியளவு சுகாதார நிலைமையின்மை அவதானிக்கப்பட்டது. இவ்வாண்டில் இல்லங்களிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் பிள்ளைகளைச் சேர்ப்பதில் விசேட கொள்கையொன்றும் நன்நடத்தை திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

## விசேட தலையீடு.

நாவற்குழி சிங்கள் கிராமத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின்னர் பிராந்திய அலுவலக ஊழியர்கள் அவ்விடத்தை சோதனைக்குட்படுத்தினார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள போதனை மண்டபத்துக்கு குண்டு வைக்கப்பட்டபோது அங்கு 80 ஆண்டுகளாகவிருந்த தேரர் அவர்களுக்கும் ஏனையோருக்கும் சேதங்கள் ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் பக்தர்கள் விளக்கு மற்றும் பூக்களினால் பூஜை செய்து மீண்டும் வரும் போதே இவ் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. விகாரையினுள் விழாமல் இரும்பு வேலிகளிலேயே குண்டு விழுந்தது. அதற்கு அண்மையில் இராணுவ முகாமும் இருந்தது. எவ்வாறாயினும் இரவு நேர பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படுதல் தொடர்பில் ஆணைக்குழு பொலிசாருக்கு ஆலோசனை வழங்கியது.

## மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்

2013ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்களின் ஊடாக மனித உரிமைகளை மேம்படுத்தும் 23 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெற்றன. சில நிகழ்ச்சித் திட்டங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி அனுசரணையிலும் யுனிசெப் நிதியத்தின் நிதி அனுசரணையின் கீழும் நடைபெறுகின்றன. அவ்வாறே வேறு நிறுவனங்களுடன் இணைந்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குக் குழுக்களானவை சிவில் அமைப்பு உறுப்பினர்கள், சமூக சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், சமய தலைவர்கள், தொழிற்சங்க தலைவர்கள், பாடசாலை சிறுவர்கள், சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் போன்றவர்களாகும்.
சிறுவர் உரிமைகள் பற்றிய வேலைநிகழ்ச்சித் திட்டத்தில் கீழே உள்ள விடயங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- சிறுவர்கள் பாடசாலையிலிருந்து விலகுதல்
- 18 வயதுக்கு முன்னரான திருமணங்கள் மற்றும் வறுமை
- தேவையற்ற கருத்தரித்தல்
- சிறுவர் பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்தல்

## சிவில் அமைப்புக்களுடன் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணம் செடாக் கரிட்டாஸ் உடன் இணைந்து 6 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெற்றன. அக்குழுக்களாவன கிராம பெண்கள் அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என்போராவர்.

## அரச உத்தியோகத்தர்களுடன் இடம்பெற்ற கூட்டம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடைபெற்ற விசாரணைகளில் அரச அதிகாரிகளாக முகம் கொடுக்கும் பிரச்சினைகளானவை இக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது. அவ்வாறெனில்

- அரச காணிகள் தொடர்பில் மட்டும் தலையிட்டு நடவடிக்கை எடுப்பதற்கு வட மாகாண காணி நிருவாக திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரமானது தனியார் காணிகள் தொடர்பிலான பிரச்சினைகளை விசாரிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமையால் நிறுவனமானது பிரச்சனைக்கு உட்பட்டுள்ளது
- யாழ்ப்பாண பொலிசு நிலைய உத்தியோகத்தர்கள் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பில் அறிவூட்டப்படுதல் வேண்டும்.
- சுகாதார துறையில் தொழில் சங்க நிருவாகத்துக்கு பிரச்சினைகளை முன்வைக்காமல் நேரடியாக ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்தலானது பிரச்சினை தீர்க்கும் வழியாகும்

### பிராந்திய அமைப்புக் குழு

பிராந்திய அலுவலகத்தின் நியாயாதிக்கத்துக்குள் மனித உரிமைகள் தொடா்பில் பொறுப்புடைய அரச நிறுவனம் மற்றும் மனித உரிமைகள் தொடா்பில் செயற்படுகின்ற சிவில் அமைப்புக்களுடன் இணைந்து 5 கூட்டங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அங்குள்ள குழுவினருக்கிடையில் ஒருங்கிணைப்பை விருத்தி செய்தலுக்கும் வலுவாக்குதலுக்கும் நடாத்தப்பட்டது.

### கலந்துரையாடலின் போது அடையாளம் காணப்பட்ட விடயங்கள் பின்வருமாறு :-

- காணாமல் போனோா் பற்றிய முறைப்பாடு மற்றும் முறைப்பாட்டாளருக்கு விதிக்கப்படும் அச்சுறுத்தல்
- தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்
- பாதுகாப்பு படையினரினால் பயன்படுத்தப்படும் காணி
- இடமாற்றக் கொள்கையினை வட மகாகாண கல்வித் திணைக்களமானது நடைமுறைப்படுத்தாமை
- யாழ்ப்பாண இளைஞா்கள் மற்றும் முச்சக்கர வண்டி ஓட்டுநா்கள் அரசியல் ஊா்வலங்களில் பங்குபற்றுமாறு வலுக்கட்டயாப்படுத்துதல்
- வீடமைப்பு உதவியின் கீழ் கிடைக்கப்பெறும் வீடமைப்பு வசதிகளுக்கு பிரதேச செயலகமானது ஆட்சேபித்தல்
- வரலாற்று சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களில் பாதுகாப்பு பிரிவை தாபித்தலினால் அவ்வலயத்துக்குள் பிரவேசிக்க முடியாமை.
- யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து சூழலுக்கு ஒவ்வாத முறையில் கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்படுதல் -
- வைத்தியருடைய பரிந்துரைகள் அன்றி மருந்து சாலையில் மருந்துகளை வழங்குதல்

## 5.6 கல்முனைப் பிராந்திய அலுவலகம்

### அறிமுகம்

கல்முனை பிராந்திய அலுவலகமானது 1234.4 சதுர கிலோ மீட்டா் பரப்பளவினைக் கொண்ட பிரதேசத்தைக் உள்ளடக்கும் வகையில் தாபிக்கப்பட்டதுடன் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகமானது மிகக் குறைந்த நிலப்பரப்பினையே உள்ளடக்குவதற்காக தாபிக்கப்பட்டது. இவ் அலுவலக நியாயாதிக்கத்துக்குள் 13 பிரதேச செயலகங்களும் 8 பொலிஸ் நிலையங்களும் 9 பிரதேச சபைகளும் 2 நகர சபைகளும் அடங்குகின்றன. கிராம சேவகா் பிரிவினுள் 373 பிரிவுகள் உள்ளடங்குகின்றன. சனத்தொகையின் எண்ணிக்கையானது அண்ணளவாக 450,000 ஆகும் என்பதுடன் இங்கு குறைந்தளவிலான சிங்கள மக்களும் பெரும்பான்மையான முஸ்லிம் மற்றும தமிழ் மக்களும் வாழ்கின்றனா்.

இவ்வலுவலகத்தில் ஆணைக்குழுவின் அலுவலக குழாமில் 6 போ் உள்ளனா். 2013 பெப்ருவரி மாதம் இங்கு கடமையாற்றிய பிதேச இணைப்பாளா் ஓய்வு பெற்ற காரணத்தினால் அங்கு கடமையாற்றுகின்ற விசாரணை உத்தியோகத்தா் பதிற் கடமை புரியும் இணைப்பாளராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளாா்.

### மனித உரிமைகளை பாதுகாத்தல் முறைப்பாடுகளைக் கையாளுதல்

இப்பிராந்திய அலுவலகத்தில் 2013ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கையானது 233ஆகும். அதில் 222 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்டது. ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டும் அலுவலகத்துக்கு சமுகமளித்தவா்களின் எண்ணிக்கை 425 ஆகும்.

## முறைப்பாடுகளை வகைப்படுத்துதல் - கல்முனை பிராந்திய அலுவலகம்

| முறைப்பாடுகளின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியாள் சுதந்திரம் | சித்திரவதை | 07 |
| | உடல் மற்றும் உள ரீதியிலான | 33 |
| சட்டவிரோதமான கைது செய்தல் அல்லது தடுத்து வைத்தல் | | 02 |
| காணாமல் போதல் | | 01 |
| செயலற்ற தன்மை | | 11 |
| தொழில் | | 23 |
| ஓய்வூதியம் | | |
| கல்வி | | 24 |
| சுகாதாரம் | | 02 |
| ஆதனம் | | 05 |
| அரச நலன் | சமுர்த்தி | |
| சூழல் | நில அகழ்வு | |
| சிறுவர் | | 08 |
| வேறு | | 01 |
| விடயப்பரப்பிற்குள் வராதவை | | 16 |
| **மொத்தம்** | | **233** |

### இடங்களுக்கு விஜயம் மேற்கொள்ளுதல்

இப்பிராந்திய அலுவலகத்தின் கண்காணிப்புக்கு 8 பொலிஸ் நிலையங்கள் உள்ளடக்கப்படுகின்றதுடன் ஒவ்வொரு மாதமும் 8 பொலிசு நிலையங்கள் மேற்பார்வை செய்யப்படுகின்றன.ஓராண்டினுள் 58 தடவைகள் பொலிசு நிலையப் பரிசோதனைகளானவை இடம்பெறுகின்றது.

சிறுவா் இல்லங்களானவை 14 தடவைகள் சோதனைக்குட்படுத்தப்படுவதுடன்` நன்னடத்தை உத்தியோகத்தா்கள் மற்றும் வேறு பொறுப்புடைய உத்தியோகத்தா்கள் என்போரினால் சிறுவா்கள் தொடா்ச்சியாக கண்காணிக்கப்படுவதில்லை எனவும் சிறுவா் இல்லப் பாதுகாவலா்கள் இவ்வில்லங்களில் உள்ள சிறுவா்களை பாடசாலையில் சோ்க்கும் போது இடா்களுக்கு முகம் கொடுத்துள்ளனா் எனவும் பிராந்திய அலுவலகமானது பரிந்துரை செய்துள்ளது.

பிரதேசத்தில் நடைபெறுகின்ற முதியோா் இல்லமொன்று அலுவலகத்ததால் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் இவ்வருடத்தினுள் 4 தடவைகள் அவ்வில்லமானது பரிசோதிக்கப்பட்டது.இல்லத்தை நடாத்துதல் தொடா்பில் போதுமானளவு ஒதுக்கீடு இன்மை மற்றும் தற்போதுள்ள நிலைமையானது அவ்வளவாக மகிழ்ச்சியற்றதாக உள்ளமை போன்றவைகளை ஆணைக்குழுவானது பரிந்துரை செய்தது.

### மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்

2013ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பற்றி 20 அறிவூட்டும் நிகழ்ச்சி திட்டங்களானவை நடாத்தப்பட்டதுடன் சாதாரண தரம் மற்றும் உயா்தர பாடசாலை மாணவா்கள் , சிறுவா் இல்லங்களிலுள்ள பிள்ளைகள் , பெண்கள் அமைப்பின் உறுப்பினா்கள் மற்றும் இளைஞா் சமூக பிரதிநிதிகள் உட்பட்ட 1016 பேருக்குக் இவ் அறிவூட்டலை வழங்க ஆணைக்குழுவுக்கு இயலுமாகவிருந்தது.

### புலம்பெயா் தொழிலாளா்களின் உரிமைகள்

சா்வதேச மனித உரிமைகள் தினத்தன்று கள ஆய்வு ஒன்றினை மேற்கொள்வதற்கு புலம்பெயா் தொழிலாளா்கள் தொடா்பிலான வேலைநிகழ்ச்சித் திட்டமொன்று மனித அபிவிருத்தி அமைப்பு மற்றும் சா்வோதயம் என்பனவற்றின் ஒருங்கிணைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது. பெண் அபிவிருத்தி உத்தியோகத்தா்கள், சிறுவா் உரிமைகளை மேம்படுத்தும் உத்தியோகத்தா்கள், நன்னடத்தை உத்தியோகத்தா்கள் , சிறுவா் பாதுகாப்பு உத்தியோகத்தா்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளா்கள், ஆலோசனையாளா்கள் மற்றும் நிவாரண சகோதரிகள் போன்றோா் இவ்வேலை நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினாா்கள்.

வெளிநாடு செல்வதற்கான காரணங்களாக எவ்விதமான வருமானமும் இல்லாமையால் வாழ்க்கைச் செலவினை சுமப்பதற்கு இயலாமை, வசிப்பதற்கு வீடொன்றை அமைத்தல், பெண் பிள்ளைகள் தொடா்பில் சீதனம் வழங்க வேண்டியிருத்தல் மற்றும் சிறுவா்களின் கல்விக்கு பணம் தேவைப்படுதல் போன்ற காரணிகளே அடையாளம் காணப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் உள்ள சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் கடன் எடுத்தல், வீட்டு வன்முறைகள், சிறுவர்களுக்கான பாதுகாப்பு இல்லாமை, போதைப் பொருட்கள் போன்றவை பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவ்வாறே வெளிநாட்டிற்கு சென்ற வேலையாட்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளாக மொழிப் பிரச்சினை, இழிவான சேவைகளை செய்ய நேரிடுதல், கவனயீனம், தங்குமிடம் மற்றும் உணவு பற்றிய பிரச்சினைகள் மற்றும் சித்திரவதைக்குட்படுதல் போன்றவை தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் முகவர்கள் மூலம் வீட்டுப் பணிப்பெண்களாக பெண்களை அனுப்புதலானது சட்டரீதியாகப் பாதுகாப்பற்றது என்றபோதும் தொடர்ந்தும் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் ஆட்களை கவர்தல்

மேற்படி தலைப்பு பற்றி கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேட்ட விரிவுரையாளரான எஸ். சர்வேஸ்வரன் அவர்களின் வள உதவியுடன் விசேட நிகழ்ச்சித் திட்டமானது கல்முனை பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்றது.

புலம்பெயர் தொழிலாளர்கள் முகம்கொடுக்கும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் முக்கியமான உரிமைகளாகவுள்ள புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள், சமூக பாதுகாப்பு மற்றும் தொழிற் சங்க அமைப்பின் உரிமைகள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் உரிமைகள் போன்றவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வேலைநிகழ்ச்சித் திட்டத்தில் அவ்விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள பிரதேசத்திலுள்ள அரச உத்தியோகத்தர்கள், தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் என்போர் பங்குபற்றியிருந்தனர்.

தேசிய மற்றும் சர்வதேச சட்டத்தின் நிலைமையானது இங்கு பின்தங்கியிருப்பதனால் தொழில் தொடர்பில் வெளிநாட்டுக்குச் செல்வதற்கான காரணம், அதன் விளைவுகள் மற்றும் தாக்கங்கள் என்பனவும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

## சிறுவர் உரிமைகள்

இந்நிகழ்ச்சித்திட்டமானது சிறுவர் உரிமைகள் தொடர்பில் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவுக்கு பொறுப்பான பொலிசு உத்தியோகத்தர்கள் , சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமைகளை மேம்படுத்தும் உத்தியோகத்தர்கள் மற்றும் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டது. கல்முனைப் பிரதேசத்தில் வாழ்கின்ற பெரும்பாலான பிள்ளைகள் யுத்தத்தின் மற்றும் சுனாமியின் தாக்கத்தினால் வறுமையினால் துன்புறுகின்றனர். சமுகத்திலுள்ள பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பாக அறிவூட்டுவதற்காகவும், வன்முறைகளை ஒழிப்பதற்காகவும், நியாயமான சமூகச் சூழலொன்றை பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும், வெவ்வேறான நிறுவனங்களின் மூலம் பாதுகாப்பை ஏற்படுத்தும் ஒருங்கிணைப்பொன்றை அபிவிருத்தி செய்வதற்காகவும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறுவர் பாதுகாப்பு செயற்பாட்டாளருடன் மாவட்ட ரீதியலான வலையமைப்பொன்றை ஏற்படுத்தி நடவடிக்கை எடுத்தலே இவ்வேலைநிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

பங்குபற்றுநர்களினால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளாக பொலிஸ் நிலையங்கள் சிலவற்றில் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவுகளில் தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்கள் இன்மை, சில நிலையங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவுகளுக்கு பெண் உத்தியோகத்தர்கள் இன்மை, சில பொலிஸ் நிலையங்களில் அவ்வாறான பிரிவுகள் இன்மை மற்றும் இப்பிரிவுகளுக்கு ஒழுங்கான தொழினுட்ப வசதிகள் இன்மை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பில் ஆணைக்குழுவானது தலையிட்டு நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானித்தது.

## கிராமத்து சிறுவர்களின் உரிமைகள்

கிராம மட்டத்திலுள்ள சிறுவர் உரிமைகளை மேற்பார்வை செய்யும் குழு மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் குழுக்களின் கூட்டங்கள் தொடர்பில் ஆணைக்குழுவானது பங்களிப்புச் செய்தது.

## முதியோர்களின் உரிமைகளும் மனித உரிமைகளும்

சமுக சேவை உத்தியோகத்தர்கள், கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வேலைத்திட்டம் ஒன்றை நடாத்தியதுடன் மனித உரிமைகள் தொடர்பில் முதியோர்களுக்கு தாக்கம் செலுத்தும் பிரச்சினைகள் மனித உரிமைகளாக கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும் எனவும் அது தொடர்பில் எவ்வாறு தலையீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டுமெனவும் கலந்துரையாடப்பட்டது.

## பெண்களின் உரிமைகள்

ஆண் பெண் சமூகத்தில் பெண்கள் உரிமைகள் பற்றி அறிந்திராமையால் ஏற்படுகின்ற வன்முறைகள் பிரதேசத்தில்

அதிகரிப்பதற்கான காரணத்தை ஆணைக்குழுவானது அடையாளம் கண்டுள்ளதுடன் பெணகள் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வூட்டும் தகவல்களைப் வழங்கி பெண்களுக்கு மிகச்சிறந்த தீர்மானம் எடுப்பதற்கு உதவுதல் இவ்வேலைத்திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பதன் பிரதான காரணமாக பால்ய திருமணங்கள், இளவயதில் பிள்ளைகளை பிரசவித்தல், பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் தொழிலுக்குச் செல்லுதல் போன்றன இனம் காணப்பட்டுள்ளன.

இவ்வேலைநிகழ்ச்சித்திட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்ததுடன் பெற்றுக்கொண்ட விழிப்புணர்வின் மூலம் அரச உத்தியோகத்தர்கள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் போது வினைத்திறனுடன் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என ஆணைக்குழு எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சித்திரவதையை ஒழித்தல்

சித்திரவதைக்கு உள்ளானோருக்கு அதரவளிக்கும் சர்வதேச தினமாக யூன் 26 ஆம் திகதியைப் பிரகடனப்படுத்துவதற்கு வேலைநிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளதுடன் சித்திரவதை தொடர்பிலுள்ள வெவ்வேறு வரைவிலக்கணங்களின் பயன்பாட்டினை இல்லாதாக்குதலின் முக்கியத்துவம் மற்றும் சட்டரீதியான பாதுகாப்பினை அபிவிருத்தி செய்தல் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்வேலை நிகழ்ச்சித்திட்டத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் ஆலோசனை உதவியாளர்கள் என்போர் பங்குபற்றினார்கள்.

### சிவில் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்த மனித உரிமைகள் வேலைத்திட்டம்

முஸ்லிம் பெண்கள் ஆய்வு நடவடிக்கைகளுக்கான சங்கத்துடன் மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை பிராந்திய அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து வேலைத்திட்டம் ஒன்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிதியத்தின் நிதி அனுசரணையின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டது.

வேலைநிகழ்ச்சித்திட்டத்தின் வளவாளருக்கான அனுசரணையானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட விரிவுரையாளர், தலைமை அலுவலகத்தின் பணிப்பாளர் (கண்காணிப்பு மற்றும் மீளாய்வு) மற்றும் யுனிசெப் நிறுவனத்தின் ஆலோசகர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்றது.

இந்நிகழ்ச்சி திட்டத்தில் பிரதான பங்குபற்றுநர்கள் கிழக்கு பிராந்தியத்தில் அச்சுறுத்தலுக்குள்ளானவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு செயற்படுகின்ற சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்பது விசேட அம்சமாகும். தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களின் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், வர்த்தக சமூகத்தினர்கள் மற்றும் மதத்தலைவர்களும் இவ் வேலைநிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். வேலைநிகழ்ச்சித்திட்டத்தில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக சர்வதேச சங்கம் மற்றும் அரச பொறுப்புடைமை, சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் தேசிய சட்ட நிலைமை, வெவ்வேறான நிறுவனங்களின் கடமைகள், ஆண் பெண் சமூகம் மற்றும் வன்முறைகள், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை மற்றும் 1325 வது ஆலோசனை சபை, மனித உரிமைகளை பரப்புதல், அடிப்படை உரிமைகள் மற்றும் அரசியலமைப்பு போன்றன தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

### மீனவர்களின் உரிமைகள்

கல்முனைப் பிரதேசத்தின் மீனவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் மனித அபிவிருத்தி அமைப்பின் பங்குபற்றுதலுடன் ஆணைக்குழுவானது மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டது. எதிர்காலச் செயற்பாடுகளின் பொருட்டு அடையாளம் காணப்பட்ட பிச்சினைகளாவன மீனவர் சங்கத்துக்காக தற்காலிக தங்குமிடம் இன்மை, மீனவர் சங்கத்தின் நடைமுறையிலுள்ள செயற்பாடுகள் பலவீனமடைதல், கடல் பிராந்தியத்தில் குவிந்துள்ள அதிகளவிலான குப்பை கூழங்கள் மற்றும் சட்டவிரோதக் குடியேற்றம் போன்றவையாகும்.

### பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக்களுடனான கலந்துரையாடல்

கல்முனை பிராந்திய அலுவலகத்தின் மூலம் ஆலோசனைக் குழுவானது பொறுப்புவாய்ந்த சிவில் அமைப்புக்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகளை அடையாளம் கண்டதுடன் எதிர்காலத்தில் ஆணைக்குழுவானது பிராந்திய அமைப்புக் குழுவுடன் ஒன்றிணைந்து மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் முறைமை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

### விசேட தலையீடு

### நிந்தவூரில் இடம்பெற்ற சம்பவம்

சம்மாந்துறை பொலிசு பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் இரவு நேரத்தில் இடம்பெறும் சில கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஆட்கள் பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டதன் பின்னர் அவர்களை விசேட அதிரடிப் படையினரால் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமையை கண்டித்து பிரதேச மக்கள் கொள்ளைக்காரர்களை கைது செய்வதனை வலியுறுத்தி 2 நாட்கள் எதிர்ப்பார்ப்பட்டம் நடாத்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் 36 மணித்தியாலங்களாக நடாத்திய எதிர்ப்பினால் விசேட அதிரடிப் படையினருடன் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டதனால் 300 பொலிசு உத்தியோகத்தர்கள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டனர். விசேட அதிரடிப் படையினர் மற்றும் பிரதேசவாசிகளுக்கிடையில் ஏற்பட்ட கலவரத்தில் நிந்தவூர் பிரதேசம் சபைத் தலைவர் காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கல்முனை அக்கரைப்பற்று வீதிப் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தியதால் கைது செய்யப்பட்ட 21 பேரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். ஆணைக்குழுவின் தலையீட்டினால் நிந்தவூர் சமூக சபை, பள்ளிவாசல் அதிகாரிகள், பிரதி பொலிஸ்மா அதிபர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, விசேட அதிரடிப்படை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்களுடன் சட்ட மற்றும் சமாதானத்தை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய முறைமை பற்றியும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 5.7 கண்டி பிராந்திய அலுவலகம்

### அறிமுகம்

கண்டி பிராந்திய அலுவலகமானது மத்திய மாகாணத்தின் கண்டி, நுவரெலிய மற்றும் மாத்தளை மாவட்டங்களை உள்ளடக்குகின்றது.

பௌத்தர்களின் முக்கிய வழிபாட்டுத்தலமானதும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உல்லாசப்பிரயாணிகளின் கவனத்திற்குட்பட்டதுமான புனித தலமான தலதா மாளிகை கண்டியில் அமைந்துள்ளது.

2013ஆம் ஆண்டில் இவ்வலுவலகத்தில் பணியாற்றிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஊழியர்களின் எண்ணிக்கை 09 ஆகும்.

கண்டி பிராந்திய அலுவலகத்தின் ஊடாக வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் நுவரெலியா பிரதேசத்தில் நடமாடும் அலுவலகமானது செயற்படுத்தப்படுகின்றது. இவ்வாண்டில் நுவரெலியா நடமாடும் அலுவலகத்திற்கு ஆலோசனை பெறும் பொருட்டு சமுகமளித்தோரின் எண்ணிக்கை 102 ஆகும்.

### மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
### முறைப்பாடுகளைக் கையாளுதல்

2013ஆம் ஆண்டில் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 675 ஆகும். இவ்வலுவலகத்தின் ஊடாக 2395 பேர் ஆலோசனை பெற்றுக்கொண்டனர்.

**முறைப்பாடுகளை வகைப்படுத்துதல்- கண்டி பிராந்திய அலுவலகம்**

| முறைப்பாடுகளின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியாள் சுதந்திரம் | சித்திரவதை | 28 |
| | உடல் மற்றும் உள ரீதியலான சித்திரவதை | 32 |
| சட்டவிரோதமாக கைது செய்யப்படுதல் அல்லது தடுத்து வைத்தல் | | 47 |
| செயலற்ற தன்மை | | 88 |
| தொழில் | | 12 |
| | பதவியுயர்வு | 11 |
| | இடமாற்றம் | 33 |
| | சேவையிலிருந்து நீக்கப்படுதல் | 01 |
| ஓய்வூதியம் | | 16 |
| கல்வி | பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் | 01 |
| சுகாதாரம் | | 01 |
| ஆதனம் | | 02 |
| சிறுவர் | | 01 |
| பெண்கள் | | 01 |
| **மொத்தம்** | | **675** |

இவ்வலுவலகத்தில் 4 உத்தியோகத்தர்கள் விசாரணைகள் மேற்கொள்ளுவதுடன் ஆண்டிறுதியினுள் பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 626 ஆகும். அவற்றுள் ஏனைய ஆண்டுகளில் கோப்பிடப்பட்ட முறைப்பாடுகளும் உள்ளடங்குகின்றன. தலைமை அலுவலகத்துக்கு பரிந்துரைகளை முன்வைக்கும் பொருட்டு பரிசீலனைக்காக அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 69 ஆகும்.

### தலையீடு மேற்கொள்ளப்பட்ட சில விசேட முறைப்பாடுகள்
### பெண்களின் உரிமைகள்

பெண்களுக்கான குடும்பக் கட்டுப்பாடு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பில் நுவரெலியா சுகாதார உத்தியோகத்தர்களைக் குற்றஞ்சாட்டி கோப்பிடப்பட்ட முறைப்பாடானது ஆணைக்குழுவின் அவதானத்துக்குட்பட்டது. ஆணைக்குழுவின் விசாரணையின்போது அவதானிக்கப்பட்டதாவது வைத்திய பரிந்துரைகளின் பிரகாரம் மருத்துவிச்சிகளினால் பெண்களின் சம்மதத்துடனேயே குடும்பக் கட்டுப்பாடு இடம்பெறுகின்றது என்பதாகும்.

### சிறுவர் உரிமைகள்

பிரதேச பாடசாலையொன்றின் பெற்றோர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் பிராந்திய அலுவலகததின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டு ஆணைக்குழு விசேட தலையீட்டினை மேற்கொண்டது. பிரதேசத்தின் கல்வி அதிகாரிகளை அழைத்து ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகளான அதிபர் ஒருவரை நியமித்தல் மற்றும் பிரச்சினையுடன் தொடர்புபட்ட பதிற் கடமை புரியும் அதிபரை இடமாற்றுதல் போன்ற கோரிக்கைகளுக்கு இணக்கப்பாட்டின் மூலம் பிரச்சினையானது தீர்வு காணப்பட்டது.

### சுகாதார உரிமைகள்

கண்டி போதனா வைத்தியசாலையின் ஓய்வறை தொடர்பில் வைத்தியர்கள் மற்றும் தாதிமாருக்கிடையில் ஏற்பட்ட பிணக்கின் காரணமாக நோயாளர்கள் முகம்கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆணைக்குழு தலையீட்டினை மேற்கொண்டது. வைத்தியசாலை அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடியபோது எதிர்ப்பு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளும் அளவுக்கு போதிய காரணம் இல்லை எனவும் சுகாதார அமைச்சினால் விசேட குழுவொன்று இது தொடர்பாக உரிய காரணங்களை விசாரித்தறிவதற்கு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் கவனத்திற்கொண்டுவரப்பட்டது.

நிருவாக மற்றும் திணைக்களத்தினுடைய குறைபாடு மற்றும் சிற்சில காரணங்களினால் குழு உரிமைகள் அல்லது கோரிக்கைகளானவை நோயாளர்களின் உரிமைகளுக்கு பாதகம் ஏற்படுத்தாது என ஆணைக்குழுவானது இங்கு சுட்டிக்காட்டியது.

### தொழிற்சங்கத்துடன் செயற்படுதல்

மத்திய மாகாணத்தில் தொழிற் சங்கத் தலைவர்களுக்காக விசேட வேலைநிகழ்ச்சித்திட்டமொன்று ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டது. அவ் வேலைத்திட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர் ஒன்றியத்தின் தொழிற் சங்கம், மத்திய மாகாண மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்டக் கைத்தொழிற் கூட்டுத்தாபனத்தின் மூலம் நிருவகிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை நிதி போன்ற கொடுப்பனவுகள் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுகின்றது என தெரிவிக்கப்படுவதுடன் அது தொடர்பில் ஆரம்ப விசாரணையொன்றை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகமானது ஆரம்பித்துள்ளதுடன் மேலும் அப்பிரச்சினை தொடர்பில் தலையிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

### நிலைய சோதனை

இவ்வலுவலகத்தின் ஊடாக 60 பொலிசு நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் 373 தடவைகள் சோதனைகளானவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டு மாதங்களுக்கொரு தடைவை பொலிசு நிலையமானது சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இப்பிராந்திய அலுவலகத்தின் ஊடாக போகம்பர, தும்பறை, பள்ளேகல திறந்த வெளி சிறைச்சாலைகள் சோதனை மேற்கொள்ள வேண்டிய சிறைச்சாலைகளாகும். இச்சிறைச்சாலைகளுக்கான விஜயமானது 10 தடைவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சோதனைக்குட்படுத்தவேண்டிய சிறுவர் இல்லங்களான ரிகிறி சிறுவர் இல்லம் மற்றும் வீரவில வத்த சிறுவர் தடுப்பு முகாம் என்பன காணப்படுகின்றது. 6 தடவைகள் சிறுவர் இல்லங்களானவை சோதனையிடப்பட்டது.

### மனித உரிமைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

மனித உரிமைகள் தொடர்பில் 70 அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டினுள் நடாத்தப்பட்டுள்ளன. மனித உரிமைகள் தொடர்பில் அறிவினைப் பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 4728 ஆகும். இவ்வேலை

நிகழ்ச்சித்திட்டங்களிற் சில ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் என்பதுடன் சில நிகழ்ச்சித் திட்டங்கள் வேறு நிறுவனங்களின் ஊடாக ஒழுங்குபடுத்தப்பட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊடாக வள அநுசரணை வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களாகும்.

அவ்வாறே சில நிகழ்ச்சித்திட்டங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் யுனிசெப் செயற்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற நிதி அநுசரணையுடன் நடாத்தப்பட்டன. மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்துக்காக பிராந்திய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் மற்றும் சட்ட உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக உதவி வழங்கினர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ உத்தியோகத்தர்கள், படையினர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற் பயிற்சி பெறும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகிய இலக்கு குழுக்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு ஊட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமானது தமிழ் மற்றும் சிங்கள ஊடகங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள், அதிபர்கள், கிராம சேவகர்கள் ஆகியோருக்கு நடாத்தப்பட்டுள்ளது.

விழிப்புலனற்ற சமுகம் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகள் மற்றும் மனித உரிமைகளின் நிலைமைகள் தொடர்பில் விசேட நிகழ்ச்சித்திட்டமும் முதியோர் உரிமைகள் தொடர்பான வேலைநிகழ்ச்சித் திட்டமும் அத்துடன் வீரவில வத்த சிறுவர் தடுப்பு நிலையத்தில் சிறுவர் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் இவ்வருடத்தில் நடாத்தப்பட்டமை விசேடமான ஓர் அம்சமாகும்.

ஊடகங்களின் ஊடாக அறிவூட்டும் வேலைநிகழ்ச்சித் திட்டமானது வருடம் முழுவதும் நடாத்தப்பட்டுள்ளது.

### பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக்களுடன் செயற்படுதல்

பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவிற்கு அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலாக சிவில் அமைப்புக்களுடன் பிரதேசத்தில் நடைபெறும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி அது தொடர்பில் செயற்பட்டது. அவ்வாறே இவ்வமைப்பின் மூலம் கிராம மட்டத்திலான வேலை நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து அது தொடர்பில் ஆணைக்குழுவின் உதவியானது வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் பிராந்திய அலுவலகம், மனித உரிமைக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் போது மனித அபிவிருத்தி அமைப்பு மற்றும் சமாதானத்துக்கான நிறுவனம் என்பனவற்றுடன் இணைந்து செயற்பட்டுள்ளது.

## 5.8 மாத்தறை பிராந்திய அலுவலகம்

### அறிமுகம்

மாத்தறை பிராந்திய அலுவலகமானது தென் மாகாணத்தின் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்குகின்றன. இங்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 10 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். தென் மாகாணமானது 5497.41 சதுர கிலோ மீட்டர்கள் இடப்பரப்பினைக் கொண்டுள்ளதுடன் இங்குள்ள மொத்த சனத்தொகையானது 2,391,000 ஆகும்.

தென் மாகாணத்தில் 3 மாநகர சபைகள், 3 நகர சபைகள், 36 பிரதேச சபைகள் மற்றும் 47 பிரதேச செயலகங்களும் அமைந்துள்ளதுடன் 1295 பாடசாலைகள், 57 பொலிஸ் நிலையங்கள், 73 வைத்தியசாலைகள், 06 சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு நிலையங்கள் என்பவற்றுடன் 05 சிறுவர் இல்லங்களும் அமைந்துள்ளன.

2013ஆம் ஆண்டில் தென் மாகாணத்தை மையப்படுத்தி அரசாங்க மட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் இடம்பெற்றன. அதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதனுள் மக்களின் ஜீவனோபாயமானது சில மாற்றங்களுக்குட்பட்டுள்ளதுடன் அதனூடாக இடம்பெறும் பொருளாதார மற்றும் சமுக அபிவிருத்திகளுக்கு மனித உரிமைகள் பற்றிய நிலைமை தொடர்பான விருத்தியடைதலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

### மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
### முறைப்பாடுகளைக் கையாளுதல்

இவ்வாண்டினுள் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 648 ஆகும். 2012 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 180 ஆகும். அதற்கமைவாக மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 828 ஆகும். மூன்று மாவட்டங்களினுள்ளும் காலி மாவட்டத்திலிருந்தே அதிகமான முறைப்பாடுகள் கிடைத்திருப்பதுடன் மாத்தறை மாவட்டமானது இரண்டாவது இடத்தினை வகிக்கின்றது.

மனித உரிமை மீறுகைகள் வெளிப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை 205 ஆகுமென்பதுடன் அக்கறை காட்டாமையால் முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 117 ஆகும். அவ்வாறே ஆண்டினுள் முடிவுறுத்தப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 656 ஆகும்.

### முறைப்பாடுகளின் வகைகள்- மாத்தறை பிராந்திய அலுவலகம்

| முறைப்பாடுகளின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியாள் சுதந்திரம் | சித்திரவதை | 63 |
| | உடல் மற்றும் உள ரீதியலான சித்திரவதை | 43 |
| சட்ட விரோதமாகக் கைது செய்தல் அல்லது தடுத்து வைத்தல் | | 68 |
| காணாமல் போதல் | | 02 |
| செயலற்ற தன்மை | | 95 |
| தொழில் | | 123 |
| கல்வி | | 85 |
| சுகாதாரம் | | 02 |
| ஆதனம் | | 119 |
| அரச நலன்புரி | | 06 |
| சூழல் | | 08 |
| சிறுவர் | | 02 |
| பெண்கள் | | 03 |
| வேறு | | 29 |
| **மொத்தம்** | | **648** |

### சில விசேட தலையீடுகள்

- **கல்விக்கான உரிமைகள்**

காலி மாவட்டத்ததில் அம்பலாங்கொடை பிரதேசத்தில் சுனாமி வலயத்தில் உள்ள இடத்துக்குச் சொந்தமான திறத்தவருடைய பிள்ளைகள் வசதியான பாடசாலைகளுக்கு சேர்வதற்கு இயலாமையாகவுள்ளமையானது செய்திதாள்கள் மூலம் அறியக்கிடைத்ததையடுத்து உரிய பாடசாலை அதிபர்கள் மற்றும் வலய கல்வி அலுவலகத்தின் அதிகாரிகள் இவ்வாணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டு நடாத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு ஏற்ப உரிய பிள்ளைகளை வசதியுள்ள பாடசாலைகளில் சேர்ப்பதற்கு இயலுமாகவிருந்தது. (HRC/MT/109/13/N-G)

றத்கம சிறிசுமன வித்தியாலயத்தில் முதலாம் தரத்துக்கு சேர்த்தல் தொடர்பிலான பிரச்சினையானது செய்திதாள்கள் மூலம் அவதானிக்கப்பட்டதன் பின்னர் உரிய கல்வி அதிகாரிகளுடன் பிரச்சினை தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக புதிதாக வகுப்பொன்று ஒழுங்குசெய்யப்பட்டு தகமைகளை பூர்த்தி செய்துள்ள மாணவர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கையானது எடுக்கப்பட்டது. (HRC/MT/69/13/V)

- **வதிவிட உரிமைகள்**

முலட்டியன பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரிவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை தனக்கும் தம்முடைய குடும்பத்துக்காகவும் வீடொன்றை கட்டுவதற்கு இடம் இல்லை என தெரிவித்து அதிகாரிகளுக்கு எதிராக எதிர்ப்பொன்றினைச் செய்ததன் அடிப்படையில் உரிய அதிகாரிகளுக்கு இம்முறைப்பாட்டாளரின் பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு அவசியமான தலையீடானது ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டதுடன் அவருக்கு அரச காணியொன்று ஒதுக்குவதற்காககவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (HRC/MT/278/13/S)

### நிலைய சோதனை

சோதனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை 57 ஆகும். காலத்துக்கு காலம் அவ்வாண்டினுள் 389 பொலிஸ் நிலையங்கள் சோதனைக்குட்பட்டது.
பூசா தடுப்பு முகாமானது 3 மாதங்களுக்கொரு தடைவை சோதனையிடப்பட்டது.

இவைதவிர காலி சிறைச்சாலை, தங்காலை சிறைச்சாலை, வீரவில திறந்த சிறைச்சாலை போன்றனவும் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது.

2012ஆம் ஆண்டில் பொலிஸ் நிலைய கண்காணிப்பின் போது சட்டவிரோதமான முறையில் கைது செய்தல், தடுத்து வைத்தல் தொடர்பிலும் விசாரணைகளின் போது முறையான காரணங்களைக் கூறாமல் சமூகமளிக்காத பொலிசு

நிலையங்கள் தொடர்பிலும் அவதானிக்கப்பட்டு அவை தொடர்பில் தெற்கு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடப்பட்டு அவ்வாறான நிலைமையை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

### மனித உரிமைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்

2013ஆம் ஆண்டில் 28 மனித உரிமைகள் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ம்றறும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்றன.

இவ்வருடத்திலும் அதற்கு முன்னரும் பிரதானமாக சிவில் சமூகத்தை அறிவூட்டுவதற்கு நடாத்தப்பட்ட விசேடமாக 2 வருட காலப்பகுதிக்கான மாத்தறை ஊடகவியலாளருடன் இணைந்து நடாத்திய ஒலிபரப்பு நிகழ்ச்சியினு-டாக மக்களுக்கு மனித உரிமைகள் தொடர்பில் விசேட விழிப்புணர்வானது ஏற்பட்டுள்ளதுடன் அதன் மூலம் கிராமிய மற்றும் நகர மக்கள் ஆணைக்குழுவுக்கு வருதலானது அவ் அபிவிருத்தியினைக் காட்டுகின்றது. சிவில் அமைப்புக்களை அறிவூட்டுவதுடன் ஆணைக்குழுவுக்கு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவர்களிடமிருந்து நிகழ்வுகள் அறிக்கையிடப்படுதலானது மிகச் சிறந்த முன்னேற்றம் எனக் கருதமுடியும்.

பொலிசு உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், வான் படை உத்தியோகத்தர்கள், தொழிற் பயிற்சி பெறும் மாணவர்கள், ஊடகவியல் கற்கை நெறியை பயிலும் மாணவர்கள், சமுக தலைவர்கள், சமயத் தலைவர்கள், மற்றும் பிரதேசத்திலுள்ள உறுப்பினர்கள் இவ்வறிவூட்டல் நிகழ்ச்சியில் பங்குபற்றிய இலக்குகுழுக்களின் உறுப்பினர்கள் ஆவர்.

### சிவில் சமுக குழுக்களுடன் செயற்படுதல்

கம்புறுபிட்டிய பிரதிபா ஊடகத்துடன் ஒன்றிணைந்து ஒருங்கிணைந்த செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

## 5.9 திருகோணமலை பிராந்திய அலுவலகம்

### அறிமுகம்

கிழக்கு மாகாணத்தில் அமைந்திருக்கும் இப்பிராந்திய அவலுவலகத்தின் அதிகார இடப்பரப்பு 2727 சதுர கிலோ மீட்டர்களாகும். புராதன முக்கியத்துவம் வாய்ந்த கோணேஸ்வரர் கோவிலும் சர்வதேச வர்த்தகங்களின்போது வரலாற்றிலேயே முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகமும் இங்கு அமைந்துள்ளன. மனித உரிமை ஆணைக்குழுவின் 07 பணியாளர்களும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் இரண்டு பணியாளர்களளும் இங்கு பணியாற்றுகின்றனர்.

இம்மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்களும் 230 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் உள்ளடங்குகின்றன.

### மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

### முறைப்பாடுகளை கையாளுதல்

இப்பிராந்திய அலுவலகத்திற்கு அவ்வாண்டில் கிடைத்துள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 128 ஆகும். சித்திரவதை, துன்புறுத்தல், தாக்குதல் தொடர்பாக 02 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிராக கிடைத்துள்ளன. காணாமல்போனோர் தொடர்பாக 03 முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அம்மூவரும் திரும்பி வந்துள்ளனர். திணைக்களங்களின் செயற்பாடற்ற தன்மை தொடர்பாக 31 முறைப்பாடுகள் பொலிஸ் நிலையம், கல்வித்திணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு எதிராக கிடைத்துள்ளன.

### நிலைய சோதனை

திருகோணமலை சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையின் கீழுள்ள 07 பொலிஸ் நிலையங்களும் கந்தளாய் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையின் கீழுள்ள 06 பொலிஸ் நிலையங்களும் திருகோணமலை பிராந்திய அலுவலகத்தினூடாக சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக மறியற்சிறைச்சாலையுடன் 17 சிறுவர் இல்லங்களும் முதியோர் இல்லம் ஒன்றும் செவிப்புலனற்றோர் சிறுவர் பாடசாலை ஒன்றும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

பொலிஸ் நிலையங்கள் 95 தடவைகளும் மறியற் சிறைச்சாலை 03 தடவைகளும் சிறுவர் இல்லங்கள் 03 தடவைகளும் முதியோர் இல்லம் 02 தடவைகளும் மேற்பார்வை செய்யப்பட்டது. பொலிஸ் நிலைய சோதனையின்போது மொழிக்கொள்கை அமுல்படுத்தல் இடம்பெறுகின்றதா என்பதுபற்றியும் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவிற்கு பெண் உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்கின்றார்களா என்பது பற்றியும் மேற்பார்வை செய்யப்பட்டது.

**முறைப்பாட்டின் வகைகள் - திருகோணமலை பிராந்திய அலுவலகம்**

| முறைப்பாட்டின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியாள் சுதந்திரம் | சித்திரவதை | 10 |
| | உடல் மற்றும் உளரீதியான துன்புறுத்தல் | 11 |
| சட்டவிரோதமான முறையில் கைதுசெய்ததல் /தடுத்துவைத்தல் | | 17 |
| காணாமல் போதல் | | 03 |
| செயற்பாடற்ற தன்மை | | 31 |
| தொழில் | பதவியுயர்வு | 03 |
| | இடமாற்றம் | 03 |
| | சேவை இடைநிறுத்தல் | 01 |
| | நேர்முகப் பரீட்சை | 01 |
| | விசேட வரப்பிரசாதங்கள் | 07 |
| ஓய்வூதியம் | | 02 |
| கல்வி | பாடசாலை அனுமதி | 02 |
| | அரசாங்க பயிற்சி நிறுவனங்களுக்கு அனுமதி | 01 |
| | பரீட்சை | 02 |
| | பாடசாலை மாணவர்களின் ஒழுக்காற்று பிரச்சினை | 01 |
| சொத்துக்கள் | | 10 |
| அரச நலன்புரிகள் | சமுர்த்தி | 04 |
| சூழல் | ஒலி மாசடைதல் | 01 |
| வேறு | | 15 |
| விடயப்பரப்பிற்கு அப்பாற்பட்டவை | | 03 |
| **மொத்தம்** | | 128 |

### மனித உரிமை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

15 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இராணுவ உத்தியோகத்தர்கள், படைவீரர்கள், கடற்படை உத்தியோகத்தர்கள், பொலிசு உத்தியோகத்தர்கள், கிழக்கு மாகாணத்தின் நிருவாக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்பின் உறுப்பினர்கள் போன்றோர் இதன் இலக்கு குழுக்களாவர்.

## 5.10 வவுனியா பிராந்திய அலுவலகம்

### அறிமுகம்

இப்பிராந்திய அலுவலகத்தில் வவுனியா, முல்லைத்தீவு, மற்றும் மன்னார் மாவட்டங்கள் உள்ளடங்குகின்றன. இப்பிராந்திய அலுவலகத்தில் ஆணைக்குழுவின் 06 ஊழியர்கள் கடமை புரிகின்றனர்.

இம்மாவட்டத்தில் சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இனத்தவர்கள் வாழ்கின்றதுடன் பெரும்பான்மையாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களும் மிகவும் குறைந்தளவிலான சிங்களவர்களும் வாழ்கின்றனர். இப்பிராந்திய அலுவலகத்தின் வரம்பெல்லைக்குள் 15 பிரதேச செயலகங்கள் உள்ளடங்குகின்றன. இங்கு வாழ்கின்ற மக்களின் சீவனோபாயமாக கமம் மற்றும் மீன்பிடித் தொழில் காணப்படுகின்றது.

அரசினால் வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்தில் பெருந் தொருக்கள் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் அபிவிருத்தி அடைந்ததுடன் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் அடிப்படை வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியேற்றுதல் மற்றும் கமத் தொழிலை விருத்தி செய்தல் என்பனவும் இடம்பெற்றன.

ஆணைக்குழு பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் மீள் குடியேறியவர்களின் வீடுகள் மற்றும் காணிப் பிரச்சினைகளில் தலையிட்டது.

30 ஆண்டுகளாகவிருந்த யுத்தத்தின் பின்னர் புது வாழ்வொன்றுக்கு பிரதேசத்திலுள்ள மக்கள் ஆயத்தமாகவுள்ளதாக ஆணைக்குழு கண்டறிந்தது.

### மனித உரிமைகளைப் பாதுகாத்தல் முறைப்பாடுகளைக் கையாளுதல்

வவுனியா பிராந்திய அலுவலகத்திற்கு 396 முறைப்பாடுகள் இவ்வருடத்தில் கிடைத்தள்ளன. அவற்றில் 294 முறைப்பாடுகள் தொடர்பில் புலனாய்வினை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 214 முறைப்பாடுகள் இணக்கம் காணப்பட்டுள்ளது. 16 முறைப்பாடுகள் மேலதிக நடவடிக்கைக்காக தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**முறைப்பாடுகளை வகைப்படுத்துதல் - வவுனியா பிராந்திய அலுவலகம்**

| முறைப்பாடுகளின் தன்மை | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியாள் சுதந்திரம் | சித்திரவதை | 05 |
| | இழிவான நடாத்துகைக்கு உட்படுதத்துதல் | 74 |
| சட்ட விரோதமாக கைது செய்தல் அல்லது தடுத்து வைத்தல் | | 41 |
| காணாமல் போதல் | | 78 |
| செயலற்ற தன்மை | | 10 |
| தொழில் | | 21 |
| கல்வி | | 10 |
| சுகாதாரம் | | 02 |
| ஆதனம் | | 34 |
| அரச நலன் | | 09 |
| சிறுவர் | | 05 |
| பெண்கள் | | 09 |
| வேறு | | 97 |
| **மொத்தம்** | | **396** |

### விசேட தலையீடு

மன்னார் உப்புக்குளம் மீனவக் கிராமங்கள் சிலவற்றில் மீனவர் படகு தரிப்பிட பிரச்சினையொன்று சம்பந்தமாக ஆணைக்குழு தலையிட்டு தகவல்களைப் பெற்றுக்கொண்டது. மீனவர்களுடைய தொழிலான மீனவக் கைத்தொழில் மற்றும் அது தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் இங்கு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து பரிந்துரையுடனான அறிக்கையொன்றினை ஆணைக்குழுவினூடாகத் தெரிவிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

### இணக்கப்பாட்டுடன் வெற்றியளித்துள்ள முறைப்பாடொன்று.

பிரதேசத்தின் பாடசாலையொன்றில் இடம்பெற்ற விழாவொன்றின்போது உயர்தர மாணவர் குழுவொன்று ஒழுக்கக்கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டதனால் அவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது. இவ்வாறு வகுப்பு தடைக்குட்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆகும். அம்மாவட்டத்தின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆணைக்குழுவிற்கு செய்த அறிவித்தல் ஒன்றின் அடிப்படையில் இச்சிறுவர்களினுடைய உரிமை மற்றும் பாடசாலை ஒழுக்கத்தினை பின்பற்றுதல் தொடர்பாக உரிய திறத்தவர்களுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு ஆணைக்குழுவால் முடிந்துள்ளது.

### இடங்களுக்கான விஜயம்

இவ்வலுவலகத்தின் சோதனைகளுக்கு வவுனியா மாவட்டத்தில் 08 பொலிசு நிலையங்களும், மன்னார் மாவட்டத்தில் 07 பொலிசு நிலையங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 04 பொலிஸ் நிலையங்களும் சிறைச்சாலை ஒன்றும் உட்படுத்தப்பட்டது. அரச தடுப்பு நிலையங்களானவை 08 தடவைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் பொலிஸ் நிலையங்களானவை 58 தடவைகள் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டது.

### மனித உரிமை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

15 மனித உரிமை தொடர்பான அறிவூட்டல் வேலைத்திட்டம் மற்றும் கூட்டங்கள் என்பன நடாத்தப்பட்டுள்ளதுடன் அவற்றின் இலக்குக்குழுக்கள் பின்வருமாறு: பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ உத்தியோகத்தர்கள், சிவில் பிரசைகள், குழு உறுப்பினர்கள், சமயத்தலைவர்கள், தொழிற் தலைவர்கள் மற்றும் கிராம சபை தலைவர்கள் போன்றோராவர்.

### சிவில் அமைப்புக் குழுக்களுடனான நடவடிக்கை

இவ் அலுவலகம் சிவில் அமைப்புக்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டிருப்பதுடன் இவ்வமைப்புக்கள் மீண்டும் மீண்டும் பின்வரும் பிரச்சினைகள் தொடர்பில் தலையிடும்படி வேண்டுகோள் விடுத்துள்ளன.

- காணாமல்போனோர் தொடர்பான விபரங்களை தேடி வழங்குதல்
- உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வீடுகளை மீண்டும் கையளித்தல்
- மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் ஆணைக்குழுவின் பங்களிப்பு

## 5.11 புத்தளம் நடமாடும் அலுவலகம்

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்குகின்றன. அம் மாவட்டங்களினுள் மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயம் ஒன்று அமைந்துள்ளது. ஆகையினால் புத்தளம் மாவட்ட மக்கள் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு வருவதிலுள்ள கஷ்ட நிலைமையினை கருத்திற்கொண்டு புத்தளம் மாவட்டத்திலே நடமாடும் அலுவலகம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

புத்தளம் மாவட்டத்தின்கீழ் 16 பிரதேச செயலகங்களும் 58 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் உள்ளடங்குகின்றன. மாகாணசபைக்குரித்தான 02 மாநகர சபைகளும் 24 உள்ளூராட்சி மன்றங்களும் உள்ளடங்குகின்றன. புத்தளம் மாவட்டத்தில் 15 பொலிஸ் நிலையங்கள் உள்ளன.

ஒவ்வொரு வாரத்திலும் வியாழக்கிழமைகளில் இந்நடமாடும் அலுவலகம் திறக்கப்படும். தலைமை அலுவலகத்தின் உத்தியோகத்தர் ஒருவர் இக்காரியாலயத்தில் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார். அலுவலகம் அமைந்திருப்பது பழைய புத்தளம் மாநகர சபை கட்டடத்திலேயாகும். இந்நடமாடும் அலுவலகத்தின் நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதற்காக விசேட கூட்டம் ஒன்று 2013 ஒக்டோார் மாதம் நடாத்தப்பட்டது. அது தொடர்பாக அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சமயத் தலைவர்கள், சமுகத்தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களும் அழைக்கப்பட்டடிருந்தனர்.

2013ஆம் ஆண்டினுள் இந்நடமாடும் அலுவலகத்திற்கு 126 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அம்முறைப்பாடுகள் அரச ஊழியர்களின் பதவியுயர்வு, இடமாற்றம், பதவி நிரந்தரமாக்கல் ஆகிய பிரச்சினைகளும் உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறும் செயற்பாடற்றதன்மை என்பனவும் பிள்ளைகள் பாடசாலைகளிலிருந்து வெளியேறுதல், வீடுகளில் ஏற்படுகின்ற சண்டைச்சரவுகள், காணிப்பிரச்சினை மற்றும் பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடின்மை மற்றும் சித்திரவதைகள் என்பனவும் உள்ளடங்குகின்றன.

ஆணைக்குழுவின் தலையீட்டுடன் மேற்படி பிரச்சினைகளுக்கு உரிய ஒழுங்கினடிப்படையில் உதவியினை பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கும், சில நிறுவனங்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கும் முடிந்துள்ளது.

வடபகுதியில் உள்ளக இடப்பெயர்விற்கு உட்பட்டோர் காலம் முழுவதும் புத்தளம் மாவட்டத்திலேயே வசித்துவருகின்றனர். இவ்விடயத்தில் பொருளாதார தாக்கம், சமுகம் மற்றும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக மனித உரிமையாளர்கள் தலையிட்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டு தீர்ப்பதுவும் மற்றும் மத ஒற்றுமையை உருவாக்குவதும் பல்லின மக்கள் வாழ்கின்றமை இம்மாவட்டத்தினுள் முக்கியமான விடயமாகையால் அதன்பொருட்டு ஆணைக்குழுவானது நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளது என்று 2013 ஆம் ஆண்டின் அநுபவத்தின் ஊடாக ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

# அத்தியாயம் 06

## மனித வளம் மற்றும் நிதி முகாமைத்துவம்

### 6.1 ஆளணி

2013ஆம் ஆண்டில் அரசாங்க நிர்வாக அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பிஊதிற்கு அமைவாக ஆணைக்குழுவின் சேவை எண்ணிக்கை பின்வருமாறு அமைகின்றது.

| | |
|---|---|
| 1. அதி உயர் நிலை | 02 |
| 2. உயர் நிலை | 19 |
| 3. 3 ஆம் நிலை | 01 |
| 4. 4 ஆம் நிலை | 102 |
| 5. 5ஆம் நிலை | 54 |

06 பிராந்திய அலுவலகங்களைத் தாபிப்பதற்கு ஆணைக்குழு ஆலோசித்திருப்பதனால் 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் விளைவாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினூடாக ஊழியர்களின் எண்ணிக்கையானது 273 ஆக அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக பொதுத்திறைசேரியினூடாக அவ்வலுவலகங்களை தாபிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டிற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசின் 2012.01.13 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் நிரந்தர அலுவலர் குழாமின் பதவியானது ஓய்வூதியத்திற்கு உரித்துடைய பதவியாக வெளியிடப்பட்டுள்ளது.

ஓய்வூதிய நடைமுறைக்கு .உரித்துடையதாக்கப்படும் போதும் மற்றும் ஓய்வூதிய திட்டத்துக்கு பங்களிப்புச் செய்யும் போதும் பணியாளர்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் மற்றும் அதன் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பில் அலுவலர் குழாமினை அறிவூட்டும்பொருட்டு ஓய்வூதிய திணைக்களத்தின் பங்குபற்றுதலுடன் 2013.04.05 அன்று கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

## ஆளணிதொடர்பானதகவல் - 2013 ஆம் ஆண்டு

அமைச்சு : ஜனாதிபதிசெயலகம்
திணைக்களம் : இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழு
முகவரி : இல.165, கின்சிவீதி, கொழும்பு 08

| பதவி திட்டம | வகுப்பு | சம்பளத் திட்டம் | அனுமதியளிக்கப்பட்டுள்ள ஆளணியளவு | | | சேவையிலுள்ளஆளணியளவு | | | மேலதிகதகவல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | தற்காலிகம் | ஒப்பந்தம் | நிரந்தரம் | தற்காலிகம் | ஒப்பந்தம் | |
| செயலாளர் | | SL-3-2006 | 1 | - | - | 1 | - | - | |
| மேலதிகசெயலாளர் | | SL-3-2006 | 1 | - | - | - | - | | ஒப்பந்தஅ டிப்படையில் மீண்டும் சேவைக்குநியமி க்கப்பட்டுள்ளது. |
| பிரதிச் செயலாளர் | | SL-1-2006 | - | - | - | 1 | - | - | |
| பணிப்பாளர் | I | SL-1-2006 | 5 | - | - | 2 | - | - | |
| உதவி/பிரதிப் பணிப்பாளர் | III | SL-1-2006 | 3 | - | - | - | - | - | |
| சட்டஉத்தியோகத்தர் | III | SL-1-2006 | 22 | - | - | 12 | - | - | |
| பிராந்தியஒருங்கிணைப்பாளர் | III | SL-1-2006 | 11 | - | - | 9 | - | - | |
| வலையமைப்புபரிபாலகர் | III | SL-1-2006 | 1 | - | - | 1 | - | - | |
| கணக்காளர் | III | SL-1-2006 | 1 | - | - | 1 | - | - | |
| உள்ளககணக்காய்வாளர் | III | SL-1-2006 | 1 | - | - | 1 | - | - | |
| நிர்வாகஉத்தியோகத்தர் | Supra | MN-7-2006-A | 1 | - | - | 1 | - | - | |
| கணக்குஉத்தியோகத்தர் | Supra | MN-7-2006-A | 1 | - | - | - | - | - | |
| உதவி நூலகர்/நூலகர் | Supra | MN-7-2006-A | 2 | - | - | - | - | - | |
| சிரேஷ்ட புலனாய்வுஉத்தியோகத்தர் | | MN-7-2006-A | 3 | - | - | - | - | - | |
| பயிற்சிமற்றும் கல்விஉத்தியோகத்தர் | III | MN-4-2006-A | 1 | - | - | 1 | - | - | |
| ஆராய்ச்சிஉத்தியோகத்தர் | III | MN-4-2006-A | 1 | - | - | 1 | - | 0 | |
| நிகழ்ச்சிஉதவியாளர் | III | MN-4-2006-A | 1 | - | - | 0 | - | 0 | |
| புலனாய்வுஉத்தியோகத்தர் | III | MN-4-2006-A | 47 | - | - | 31 | - | 0 | |
| சட்டஉதவியாளர் | III | MN-4-2006-A | 14 | - | - | - | | | |
| புலனாய்வுஉதவியாளர் | III | MN-4-2006-A | 14 | - | - | - | | | |
| கணக்குஉதவியாளர் | III | MN-4-2006-A | 1 | - | - | 2 | | | |
| நூலகமற்றும் ஆளணிப்படுத்தும் உத்தியோகத்தர் | III | MN-4-2006-A | 1 | | | 1 | | | |
| மொழிபெயர்ப்பாளர் | III | MN-4-2006-A | 2 | - | - | - | - | - | |
| வன்,மென் பொருள் தொழில்நுட்பவியலாளர் | III | MT-1-2006-A | 2 | - | - | - | - | | |
| முகாமைத்துவஉதவியாளர் | III | MN-1-2006-A | 70 | - | - | 57 | - | | தட்டெழுத்துபயி ற்சியாளர் |
| வாகனசாரதி | III | PL-3-2006-A | 22 | - | - | 15 | - | - | |
| அலுவலகஉதவியாளர் | III | PL-1-2006-A | 31 | - | - | 27 | - | - | |
| காவலாளர் | III | PL-1-2006-A | 11 | - | - | 10 | - | - | |
| தொழிலாளர் | III | PL-1-2006-A | 2 | - | - | 2 | - | - | |
| மொத்தம் | | | **273** | **-** | **-** | **176** | **-** | **1** | |

தட்டெழுத்துபயிற்சியாளர் - 01

## 6.2 நிதி ஒதுக்கீடு ஒதுக்கீட்டு கணக்கு

2013 ஆம் ஆண்டிற்காக பொதுத்திறைசேரியினூடாக கிடைத்த நிதி 162 மில்லியன் ரூபாய் மட்டுமே ஆகும். 2012 ஆம் ஆண்டினை விட இவ்வருடத்தில் நிதி ஒதுக்கீடானது அதிகரிக்கப்பட்டுள்ளது. இங்கு விசேடமாக குறிப்பிடவேண்டியது யாதெனில் மனித உரிமை ஆணைக்குழுவினுடைய விடய நோக்கு மற்றும் வேண்டுகோள்களின் அடிப்படையில் தேசிய மனித உரிமைத்திட்டத்தினை 2011-2016 வரை செயற்படுத்துவதற்கு ஆணைக்குழுவிற்கு நிதி ஒதுக்கீடானது 2012 ஆம் ஆண்டினை விட அதிகளவில் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| அரச உதவி | நிதி (இலங்கை ரூபாய்) |
|---|---|
| புனரமைப்பு | 144,666,000.00 |
| மூலதனம் | 6,009,000.00 |
| ஏனையவை | 163,725.02 |
| மொத்த வருமானம் | 150,838,725.02 |
| தனியாள்ஊதியம் | 83,267,665.22 |
| போக்குவரத்து செலவு | 948,499.40 |
| வசதிகள் | 5,680,663.13 |
| பராமரிப்பு செலவுகள் | 2,926,186.65 |
| சேவைகள் | 51,806,710.62 |
| இட மாற்றங்கள் | 200,000.00 |
| மூலதனச் சொத்துக்கள் அல்லது புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி | 9,900.00 |
| மூலதனச் சொத்துக்களின் கைப்பற்றுகை | 2,429,314.00 |
| தகமையை கட்டியெழுப்புதல் | 158,511.50 |
| வேறு மூலதனச் செலவுகள்(மனிதஉரிமைகள் நிகழ்ச்சித்திட்டம்) | 2,989,923.06 |
| **மொத்தச்செலவுகள்** | **150,417,373.58** |

### நிலையானசொத்துக்களின் அசைவுபற்றியஅறிக்கை - 2013
### செலவினத் தலைப்பு இல. 13

| செலவுவிடயக் குறியீடும் சொத்துக்களின் வகையும் | 2013.01.01 அன்றுள்ளவாரான-ஆரம்பமீதி | ஆண்டிற்கானமேலதிகம் | | ஆண்டின்போதுநீக்கம் | 2013.12.31 அன்றுள்ளவா-னமீதி |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | ரூபாய் | ரூபாய் | ரூபாய் | ரூபாய் |
| 2101 வாகனங்கள் | 49,217,096 | 0 | | | 49,217,096 |
| 2102 தளபாடங்களும் அலுவலகஉபகரணங்களும் | 5,983,761 | 2,000,000 | | | 7,983,761 |
| 2103 இயந்திரங்களும் இயந்திரசாதனங்களும் | 1,071,478 | 74,142 | | | 1,145,620 |
| 2104 கட்டிடமும் நிர்மாணமும் | 28,060 | 0 | | 0 | 28,060 |
| 2105 காணியும் காணிஅபிவிருத்தியும் | | | 0 | | |
| தேறியமொத்தம் | 56,300,395 | 2,074,142 | | | 58,374,537 |

## 2013 ஆம் ஆண்டின் செலவுக்கூற்று

அமைச்சு / திணைக்களம் / மாவட்ட செயலகம் இன் பெயர்: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

செலவுத் தலைப்பு இல. 013

| பொருட் குறியீடு | விவரணம் | (1) வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு ஏற்பாடுகள் | (2) பிற்சேர்க்கை ஏற்பாடுகளும் பிற்சேர்க்கை மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி 66 மற்றும் 69 இற்கு அமைய மாற்றல்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | (5) மொத்த செலவுகள் | (6) சேமிப்பு தேறிய விளைவு/ (மேலதிகம்) (4-5) |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | ரூபாய் | ரூபாய் | ரூபாய் | ரூபாய் | ரூபாய் |
| | மீண்டும் வரும் செலவினம் ஆளுக்குரிய வேதனங்கள் | | | | | | |
| 1001 | சம்பளமும் கூலிகளும் | 48,000,000 | | (1,750,000) | 46,250,000 | 46,184,357 | 65,643 |
| 1002 | மேலதிக நேர் விடுமுறை கொடுப்பனவு | 2,500,000 | | (1,200,000) | 1,300,000 | 1,254,132 | 45,868 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 33,000,000 | | 3,100,000 | 36,100,000 | 35,842,977 | 257,023 |
| | பிரயாண செலுகள் | | | | | | |
| 1101 | உள்ளூர் | 1,000,000 | | (400,000) | 600,000 | 549,216 | 50,785 |
| 1102 | வெளிநாடு | 700,000 | | (300,000) | 400,000 | 399,284 | 716 |
| | வழுங்கல்கள் | | | | | | |
| 1201 | காகிதாதிகளும் அலுவலக தேவைப்பொருட்களும் | 1,500,000 | | 325,000 | 1,825,000 | 1,814,561 | 10,439 |
| 1202 | எரிபொருள் | 4,500,000 | | (800,000) | 3,700,000 | 3,691,865 | 8,135 |
| 1205 | உணவும் சீருடைகளும் | 300,000 | | (125,000) | 175,000 | 174,237 | 763 |
| | பராமரிப்பு செலவினம் | | | | | | |
| 1301 | வாகனங்கள் | 1,750,000 | | 650,000 | 2,400,000 | 2,351,798 | 48,202 |
| 1302 | பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 700,000 | | (125,000) | 575,000 | 482,291 | 92,709 |
| 1303 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 100,000 | | | 100,000 | 92,098 | 7,902 |
| | சேவைகள் | | | | | | |
| 1401 | போக்குவரத்து மற்றும் வாகன வாடகை | 3,800,000 | | 250,000 | 4,050,000 | 4,032,912 | 17,088 |
| 1402 | தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் | 3,300,000 | | (195,000) | 3,105,000 | 3,099,351 | 5,649 |
| 1403 | மின்சாரமும் நீரும் | 7,000,000 | | 1,600,000 | 8,600,000 | 8,240,617 | 359,383 |
| 1404 | வாடகைகளும் உள்ளூர் வரிகளும் (குறிப்பு 02) | 36,000,000 | | | 36,000,000 | 31,949,336 | 4,050,664 |
| 1405 | ஏனையவை | 5,600,000 | | (1,030,000) | 4,570,000 | 4,484,495 | 85,505 |
| | மாற்றல்கள் | | | | | | |
| 1505 | சந்தா மற்றும் பங்களிப்புக் கட்டணம் | 200,000 | | | 200,000 | 200,000 | - |
| | உப தொகை (மீண்டெடும்) | 149,950,000 | 0 | 0 | 149,950,000 | 144,843,526 | 5,106,474 |
| | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும் மேம்பாடும் | | | | | | |
| 2001 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 500,000 | | | 500,000 | 9,900 | 490,100 |
| 2002 | இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும் | 100,000 | | | 100,000 | | 100,000 |
| | மூலதனச் சொத்துக்களின் உரிமை கொள்ளல் | | | | | | |
| 2101 | வாகனங்கள் | | 6,855,172 | | 6,855,172 | 355,172 | 6,500,000 |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 2,000,000 | | | 2,000,000 | 2,000,000 | 0 |
| 2103 | இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும் | 100,000 | | | 100,000 | 74,142 | 25,858 |
| | ஆற்றல் விருத்தி | | | | | | |
| 2401 | பயிற்சி அளிப்பும் ஆற்றல் விருத்தியும் | 200,000 | | | 200,000 | 158,511 | 41,489 |
| | ஏனைய மூலதன செலவினங்கள் | | | | | | |
| 2502 | ஏனைய முதலீடுகள் | 3,000,000 | | | 3,000,000 | 2,989,923 | 10,077 |
| | உப மொத்தம் (மூலதனம்) | 5,900,000 | 6,855,172 | 0 | 12,755,172 | 5,587,648 | 7,167,524 |
| | முழுத் தொகை | 155,850,000 | 6,855,172 | 0 | 162,705,172 | 150,431,174 | 12,273,998 |

### 6.3 ஆணைக்குழு பணியாளர்களது திறன்களைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டம்

மனித உரிமைகள் ஆணைக்குழு பணியாளர்களின் செயற்திறனை அதிகரிக்கும் நோக்கில் பயிற்சியளித்தல் இடம்பெற்றுள்ளது.

#### 6.3.1 விசேட விரிவுரைகளை நடாத்துதல்

விசேட விரிவுரைகளானவை கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்ட பிரிவினூடாக அலுவலர் குழாத்தினுடைய தேவைக்கேற்றவாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

- மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி. திரு.பிரதிபா மஹாநாமஹேவா அவர்களால் மரணதண்டனை தொடர்பிலான விசேட கருத்தரங்கு ஒன்று 2013.01.16 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் திருமதி. ஜெசிமா இஸ்மயில் அவர்களால் பெண்களின் உரிமை தொடர்பாக கருத்தரங்கு ஒன்று 2013.01.30 ஆம் திகதி அலுவலர் குழாத்தினால் English றுபைெடளைா என்ற ஆங்கில திரைப்படம் காண்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டது.
- சர்வதேச ரீதியிலான மீளாய்வு செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வெளிவிவகார அமைச்சின் முன்னைய செயலாளர் திரு. எச்.எம்.பி.எஸ். பலிஹக்கார மற்றும் சிவில் அமைப்பு செயற்பாட்டாளரான சட்டத்தரணி திரு.சுதர்ஸன குணவர்த்தன ஆகியோரால் 2013.02.13 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

#### 6.3.2 பயிற்சிக்காக வேறு நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்துதல்

- இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் திறன் அபிவிருத்தியானது ஒதுக்கீட்டு நிதியின்மூலம் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தில் ஆணைக்குழுவானது பணியாளர்களை ஈடுபடுத்தியுள்ளது.
- முகாமைத்துவ உதவியாளர்களின் திறன்களை விருத்தி செய்யும்பொருட்டு 2013.01.29 ஆம் திகதி நடாத்தப்பட்ட வேலைத்திட்டத்திற்கு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக உதவிப் பணியாளர்கள் 44பேர் பங்குபற்றியிருந்தனர்.
- அவ்வாறே அரசினுடைய வரப்பிரசாத செயற்பாடுகள் தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிர்வாக பிரிவின் விடயத்திற்குப் பொறுப்பான இரண்டுபேர் பங்குபற்றியிருந்தனர்.
- 2013.10.14 மற்றும் 2013.10.15 ஆகிய இரண்டு தினங்களுக்கும் நடாத்துவதற்கு ஏற்பாடுசெய்திருந்த வளவாளர்களுக்காக நடைபெற்ற மனித மூலதனமுகாமைத்துவம் தொடர்பான வேலைத்திட்டத்திற்கு ஆணைக்குழுவின் பதிற்கடமையாற்றும் நிர்வாக மற்றும் நிதிக்கான பணிப்பாளர் பங்குபற்றினார்.
- பொறியியற்சேவை அமைச்சின் நிர்மாண மற்றும் இயந்திர உபகரண மத்திய நிலையத்தினூடாக கொள்வனவு மற்றும் களஞ்சியம் தொடர்பான பயிற்சியொன்று 2013.01.28 ஆம் திகதி விடயத்திற்கு பொறுப்பான பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது
- இலங்கை தாபக நிறுவனத்துடன் இணைந்து கலாநிதி சுனில் விஜேவர்த்தன அவர்களுடைய அனுசரணையில் பல்வேறுபட்ட முகாமைத்துவம் தொடர்பில் வேலைத்திட்டமொன்று 2013.08.02 ஆம் திகதி பணியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

#### 6.3.3 ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட பயிற்சிகள்

- **புலனாய்வு தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம்**

மனித உரிமை ஆணைக்குழுவில் புலனாய்வு நடவடிக்கையானது அதிகளவில் அடிப்படை உரிமைகள் தொடர்பிலேயே இடம்பெறுகின்றது. இவ்வாறான புலனாய்வு நடவடிக்கைகளில் பொலிசாரின் நடைமுறைகள் தொடர்பில் பரந்த அறிவு இருத்தல் அவசியமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு பொலிஸாரினால் இடம்பெறும் குற்ற விசாரணை தொடர்பில் சிறப்புத்தேர்ச்சியுடைய ஓய்வுபெற்ற முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி திரு. அமரசிங்க அவர்களின் வளஅனுசரணையுடன் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது 2013.09.13 மற்றும் 2013.09.14 திகதிகளில் நடாத்தப்பட்டது. இதனூடாக பக்கச்சார்பற்ற குற்ற விசாரணைகள் இடம்பெறுவது எப்படி, மனித உரிமைகளை

பாதுகாத்தலில் பொலிஸாரினுடைய நடவடிக்கைகள் எவ்வாறு மேற்பார்வைக்கு உட்படுத்துதல் வேண்டும் போன்றன தொடர்பாக ஆணைக்குழு அலுவலர் குழாம் அறிவை பெற்றுக்கொண்டது.

- **தேசிய விசாரணை தொடர்பான பயிற்சி**

ரசின்பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் அலுவலகத்தின் மனித உரிமை பிரிவின் முழுமையான ஆதரவின் கீழ் சர்வதேச விதிகளின் அடிப்படையில் மனித உரிமை விடயங்கள் தொடர்பில் தேசிய விசாரணையொன்றினை நடாத்துகின்ற முறைமை தொடர்பான வேலை நிகழ்ச்சித்திட்டமானது (work shop) 2013.07.02 ஆம் திகதி தொடக்கம் 2013.07.04 திகதி வரைக்கும் நடாத்தப்பட்டது.

- **தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் சம்பந்தமான பயிற்சி**

ரசின்மனித உரிமை ஆணைக்குழுவின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் முழுமையான ஆதரவின் கீழ் மேற்படி பயிற்சி வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது. அனுபவம்வாய்ந்த பயிற்சியாளர்களினதும் மற்றும் நிபுணர்களினதும் உதவியும் அதன்போது கிடைக்கப்பெற்றது.

- **தேசிய நல்லிணக்கம் தொடர்பான பயிற்சி**

பொதுநலவாய நாடுகள் செயல்திறன் மனித உரிமை பிரிவின் முழுமையான ஆதரவின் கீழ் தேசிய நல்லிணக்கத்திற்குள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பொறுப்புக்கள் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம் ஒன்று 2013.09.26 ஆம் திகதி தொடக்கம் 2013.09.27 ஆம் திகதி வரைக்கும் நடாத்தப்பட்டது.

### 6.3.4 மொழித்திறன் விருத்தி

ஆணைக்குழுவினூடாக ஆங்கில மொழி மற்றும் இரண்டாம் மொழியான தமிழ் மொழியை அல்லது சிங்கள மொழியை கற்பதற்கு தேவையான வளங்கள் மற்றும் நிதி ஒதுக்கீட்டினை பணியாளர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைவாக தேசிய மொழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினுடைய தேசிய மொழிப்பயிற்சி திணைக்களத்தினூடாக தமிழ் மொழி வகுப்புக்களை வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் தலைமை அலுவலகத்தில் நடாத்துவதற்கிணங்க 2013.04.23 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அதற்குச் இணையாக பிராந்திய அலுவலகங்களின் ஊழியர்களுக்கும் அதற்கு அண்மையிலுள்ள திணைக்களத்தினூடாக ஆங்கில மொழி மற்றும் தமிழ் மொழித்திறன் விருத்தியாக்கல் பாடநெறி யைக் கற்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை வேலைத்திட்டத்தின் முழு ஆதரவுடன் ஆங்கில மொாழி வகுப்பு தலைமை அலுவலகத்தின் அலுவலர் குழாத்திற்கு 2013.05.15 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது.

### 6.3.5 பல்வேறுபட்ட சமய நம்பிக்கை மற்றும் கலை பண்பாடுகளை இனங்காணுதல் தொடர்பான வேலைத்திட்டம்.

ஆணைக்குழுவின் அலுவலர் குழாமானது தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களின் இந்து, பௌத்த, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ போன்ற பல்லினங்களையுடைய மதங்களை உள்ளடக்குகின்றது. மனித உரிமைகளில் பிரதானமாக சமய ரீதியிலான வரவேற்றல் மற்றும் உபசரித்தலுடனான சமய நம்பிக்கை மற்றும் அனுஷ்டானம் போன்றவற்றுக்குள்ள உரிமை மனித உரிமையாகும்.

அனைத்து மதங்களும் கூறுகின்ற பெறுமதியானவற்றுள் உரிமைகளும் பொறுப்புக்களும் தொடர்பில் முழுமையான விவரணமொன்று வழங்கப்படுகின்றது. சமயத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரமானது மிகவும் பெறுமதியான உரிமையாகும் என்பதுடன் அதனை தொடர்ந்து பின்பற்றுவதற்கான சூழலானது உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். பல்லின மதங்களையுடைய நாடான இலங்கையில் சமய உரிமையானது அடிப்படை உரிமையாகவே காணப்படுகின்றது.

சமயங்களுக்கிடையிலான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக சமயம் மற்றும் கலாச்சரங்களை புரிந்து கொள்ளும் பொருட்டும் சமயங்களுக்கிடையல் ஏற்படுகின்ற ஒழுக்க விழுமியங்கள் மற்றும் பழக்க வழக்கங்கள் என்பவற்றை அறிந்து கொள்வதற்காகவும் ஆணைக்குழுவின் மூலம் அலுவலக குழாமின் பங்குபற்றுதலுடன் சிலவகையான நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

### தமிழ் சிங்கள புதுவருடக் கொண்டாட்ட நிகழ்ச்சி

தமிழ் சிங்கள புதுவருடத்தில் பல்வேறுபட்ட சம்பிரதாயங்கள் உள்ளமைக்கான காரணங்கள் மற்றும் அதன்மூலம்

ஏற்படுகின்ற சமூகத்தின் பெறுமதி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் நிகழ்ச்சிகளும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை உள்ளடக்கி அலுவலர்குழாம் அனைவரதும் பங்குபற்றுதலுடன் 2013.04.22 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. சுப நேரத்தில் அடுப்பு மூட்டுதல், புதுவருட விளையாட்டுப் போட்டி, புது வருட உணவு மேசை, பெரியோர்களைச் சந்தித்தல் போன்ற விசேட அம்சங்கள் இவற்றுள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## வெசாக் கொண்டாட்டம்

பௌத்த கலாச்சாரக் கொண்டாட்டமான வெசாக் பண்டிகையானது 2013.05.29 அன்று பௌத்த குருமார்களையும், தந்தங்களையும் கொண்டுவந்ததடன், மற்றும் அன்னதானம் வழங்குதல் போன்றனவும் இடம்பெற்றதுடன் சம்பிரதாயபூர்வமான போதனைகளில் அனைத்து சமயத்தினரும் பங்குபற்றியிருந்தனர். அன்றைய தினம் அலுவலக குழாத்தின் அனுசரணையுடன் ஒழுங்கு படுத்தப்பட்ட உணவானது அனைத்து ஊழியர்களுக்கும் அருந்தக் கிடைத்தது.

அலுவலக குழாத்தின் ஒவ்வெரு குழுவும் ஒன்றிணைந்து வெசாக் கூடுகளை நிர்மாணித்ததுடன் அதன் பின்னர் போட்டியொன்றும் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டது.

## இந்து சமய கொண்டாட்டம்

ரசின்இந்து பக்தர்களின் விசேட கொண்டாட்டமாக கருதப்படும் நவராத்திரி பூசையானது 2013.10.11 அன்று ஆணைக்குழுவினுள் நடைபெற்றதுடன் அது சாந்தமான ஓர் கொண்டாட்டமாக ஒழுங்கு செய்யப்பட்டது. அலங்காரங்களுக்காக தேங்காய், மாவிலை, வாழையிலை போன்றன பயன்படுத்தப்பட்டன. வரவேற்புக்காக குங்குமம் அணிதல் இந்து முறைப்படி பின்பற்றப்படும் முக்கியமான அம்சமாகும். இந்து சமயம் மற்றும் சமாதானம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் விசேட விரிவுரையானது சட்டம் தொடர்பில் கற்றோர்களால் நடாத்தப்பட்டதுடன் நவராத்திரிபூசையானது இந்து குருமாரினால் நடாத்தப்பட்டது. இந்துக்கல்லூரியின் சோலேன் இசை மற்றும் இந்து மகளிர் வித்தியாலயத்தின் மாணவர்களின் இசையும் யோகா நிகழ்ச்சியும் இதனுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்ட முடிவின் போது இந்து மற்றும் தமிழ் சமூகத்துக்கு உரித்தான உணவுகளும் பரிமாறப்பட்டிருந்தது.

## முஸ்லிம் சமய கொண்டாட்டம்

இவ்வேலைத்திட்டத்திற்கு பல்வேறுபட்ட சமய பெரியார்கள் வரவழைக்கப்பட்டு இடம்பெற்றதுடன் அவர்களால் இஸ்லாமிய தர்மம் காட்டுகின்ற வழிவகைகள் பற்றியும் ஆராயப்பட்டன. இந்து, பௌத்த, கிறிஸ்தவ தர்மங்கள் தொடர்பில் மதத் தலைவர்களும் இதன்பொருட்டு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

முஸ்லிம் சமுகத்தினரின் விழா என்பதால் உபசரிப்பின்போது இனிப்புப்பண்டம் (கற்கண்டு முதலானவை) வழங்கப்பட்டு, பன்னீர் (Rose watter) தெளித்து வரவேற்றதையும் இதன்போது அவதானிக்க முடிந்தது.

கலாச்சார நிகழ்வின்போது முஸ்லிம் திருமணம் ஒன்று நடாத்தும் முறைமைபற்றி செய்து காட்டியதுடன் அதற்கேற்ற இசையும் இசைக்கப்பட்டது. நோன்பு நேரத்தில் நள்ளிரவில் விழித்தெழும்போது மத்தளம் ஒன்றை இசைத்துக்கொண்டு எழும்புதல் ஒரு விசேட அம்சமாக காட்சிப்படுத்தப்பட்டது.

விழா காலங்களின்போது முஸ்லிம் மக்களின் பாரம்பரிய உணவாக கருதப்படும் புரியாணி மற்றும் வட்டிலப்பம் போன்ற சுவையான உணவுகளை அருந்துவதற்கும் ஆணைக்குழு அலுவலர் குழாத்திற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அலுவலர் குழாத்தின் ஒத்துழைப்புடன் 2013.08.26 திகதியன்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

## நத்தார் பண்டிகை

கத்தோலிக்க/கிறிஸ்தவ பக்தர்கள் யேசுநாதரின் பிறப்பை அடிப்படையாக கொண்டே நத்தார் பண்டிகையைக் கொண்டாடுகிறாகள். சாந்தமும் கருணையும் உருவான யேசு குழந்தையினுடைய பிறப்பை உலகம் முழுவதும் உணர்வுபூர்வமான முறையில் அனுஷ்டிக்கிறது. இந்த கொண்டாட்டமானது 2013.12.20 ஆம் திகதி நடாத்தப்பட்டது. ஆணைக்குழுவினால் நத்தார் தினத்தை சுட்டிக்காட்டும் வகையில் நத்தார் கேக் அலுவலக குழாத்திற்கு வழங்கியமை மற்றும் நத்தார் செய்தியை வழங்குவதற்காக செமினரியின் பணிப்பாளரை அழைத்து விரிவுரை ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததுடன் இலங்கை இளைஞர் கிறித்தவ சங்கத்தை பிரதிநிதிப்படுத்தும் உறுப்பினர்களின் உரையொன்றும் இடம்பெற்றது. அலுவலக குழாத்தின் பூரண ஒத்துழைப்புடன் நத்தார் மரம் உட்பட நத்தார் அலங்காரங்கள் என்பவற்றுடன் கொண்டாடப்பட்டது. நத்தாரின் மற்றுமொரு விசேட அம்சமாக அமையப்பெற்றது நத்தார் தாத்தாவின் வருகையாகும். அலுவலக குழாத்தின் சிறு பிள்ளைகள் ஒன்றிணைந்து கொண்டாடினார்கள் என்பதுடன் இவ்வருடத்தில் சமய மற்றும் சகவாழ்வு தொடர்பில் இடம்பெற்ற அனைத்து விழாக்களும் நிறைவு பெற்றது.

### 6.3.6 சுவரொட்டிகள்

அலுவலக குழாத்தின் திறன்களை விருத்தி செய்வதற்காக சுவரொட்டிகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், காட்டுன் மற்றும் சித்திரங்கள், கவிதைகள் போன்றவையும் காட்சிப்படுத்தப்பட்டன. 2013ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகம் மற்றும் தலைமை அலுவலலக ஊழியர்களின்மூலம் தம்மால் வடிவமைக்கப்பட்ட சுவரொட்டிகள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இவற்றினூடாக மனரீதியிலான திருப்தியொன்றினை உருவாக்குவதாக உணரும்வகையில் சில நிர்மாணங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## 6.4 ஊழியர் சங்கத்தின் செயற்பாடுகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊழியர் சங்கம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊழியர்கள் நலன்புரிச் சங்கம் என்பன 2013ஆம் ஆண்டில் செயற்பட்டன. ஊழியர்களின் உரிமைகள் மற்றும் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அச்சங்கமானது சுயாதீனமாக இவ்வாணைக்குழுவின் உதவியுடன் தொழிற்படுகின்றது.

# அத்தியாயம் 07

## 2013 ஆம் ஆண்டின் மனித உரிமைகளின் நிலைமைகள்

நாட்டினுள் மனித உரிமைகளின் நிலைமைகள் தொடர்பில் சிற்சில அபிவிருத்திகள் இடம்பெற்றபோதிலும் அவை போதாது என்ற நிலைமையானது ஏற்படவில்லை.முறைப்பாடுகள் தொடர்பில் நோக்கும்போது ஆணைக்குழுவுக்கு முன்னைய ஆண்டினை விட இவ்வருடத்தில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகக் காட்டுகின்றது. ஆனால் அந்நிலைமையானது போதியளவு முன்னேற்றமின்மையான நிலையே காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையானது இலங்கைக்கு எதிரான ஆலோசனைகளை நிறைவேற்றுவதற்கு உள்ளது. யுத்தத்தின் போது விசேடமாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக 2002-2009 ஆம் ஆண்டு காலப'பகுதியில் இடம்பெற்ற சட்டத்திற்கு அப்பாற்பட்ட சம்பவம் காரணமாக பல்வேறுபட்ட திறத்தவர்களின் நடவடிக்கை தொடர்பில் மேற்கொள்ளப்படும் காரணத்தைக் கண்டறிதல் அல்லது விசாரணையை மேற்கொள்ளுதல் வேண்டுமென்பது ஒரு ஆலோசனையாகும். இது தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை ஏற்றுக்கொள்ளாவிடின் தேசிய பொறிமுறையொன்றின் ஊடாக அவை தொடர்பில் விசாரணை செய்தல் முக்கியமானதாகும்.இது தொடர்பில் சர்வதேசச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் செயற்பாடுகள் தொடர்பில் அறிவுடைய கல்விமான்கள் இலங்கையில் உள்ளனர்.அவ்வெல்லா திறத்தவர்களினதும் நன்மைக்காகவும் மற்றும் எதிர்காலத்திலான நல்லிணக்கத்துக்கும் வசதியேற்படுத்திக் கொடுக்கமுடியும்.காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஆணைக்குழுவொன்றை அமைத்தல் முக்கிமானதாகும்.அதற்கு பரந்தளவில் கற்றறிவதற்கு சந்தர்ப்பம் மற்றும் வசதியேற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

வடக்கில் தேர்தலை நடாத்துவது நியாயமான நடவடிக்கையாகும்.அவர்களுக்கு தமது பிரதிநிதிகள் மூலம் சனனாயக ஆட்சியொன்றுக்கு பல ஆண்டுகளின் பின்னர் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சாராம்சமாக எடுத்து நோக்கும்போது தேர்தலானது நியாயமாக நடைபெற்றது என்பதே ஆணைக்குழுவின் பரிந்துரையாகும் .இச் சந்தர்ப்பத்தை மிகவும் விரிவாக்குவதற்கு அதனைப் பலப்படுத்துவதற்காக செயற்படுதல் மிக முக்கியமானதாகும். திருகோணமலையில் 5 சிறுவர்களின் படுகொலை தொடர்பில் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தமையானது போற்றக்கூடியதொன்றாகும். அது பல காலமாக முடங்கி கிடந்ததுடன் குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொணர்வதற்கு ஏதுவாகவும் இருந்தது.இராணுவம் மற்றும் பொலிசார் வேறு வேறாக நிருவாகம் செய்தல் முக்கியமானதாகும்.அப்போது அமைச்சருடைய செயலாளர் என்னும் பதவிக்கு சிவில் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல் மிகவும் பொருத்தமானதாகும்.அது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கமானது கவனம் செலுத்துல் வேண்டும்.

பொது நலவாய நாடுகளின் சம்மேளனம் இலங்கையில் இடம்பெற்றமையானது சர்வதேசத்தினது கவனம் கிடைக்கப்பெற்றதுடன் பல்வேறுபட்ட நாடுகளுடனனான மிகவும் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகவும் இருந்தது. அதன் தவிசாளர் பதவியானது இலங்கைக்கு கிடைக்கப்பெற்றமையானது முக்கியமானது என்பதுடன் இதன் உண்மைத்தன்மையை உறுதி செய்வதற்கான அவசியமான கலந்துரையாடல் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் போதுமானளவு இடம்பெறவில்லை.

### சட்ட ஆட்சி

சனநாயக சமுகத்தில் சட்டம் என்பது மக்கள் மற்றும் அரசுக்கிடையிலான உடன்படிக்கையொன்றாகும்.அது எட்டப்பெறாதவிடத்து உரிய பொதுமக்கள் உடன்படிக்கையானது வலிதற்றதாகிவிடும்.அவ்வாறே பல்வேறுபட்ட தத்துவங்களையும் அதிகாரங்களையும் உடையவர்களின் மற்றும் சமுக குழுக்களின் அவ்வாறான தத்துவத்தையுடைய மக்களைப் பாதுகாப்பது அரசினுடைய கடமையாகும். பல்வேறுபட்ட வேறுபாடுகளின்றி சம வாய்ப்பு மற்றும் சமமான கௌரவம் என்பவவையானது சட்டத்தின் மூலமே பாதுகாக்கப்படமுடியும். சட்டவாட்சி நிலவும் போது பாரபட்சத்துக்கான சந்தர்ப்பமானது இல்லை. அதற்கிணங்க அனைவரும் ஒன்றாக வாழ முடியும். இருப்பினும் கடந்த கால அத்தியாயத்தில் சட்டமானது பலவீனமடைந்துள்ளதுடன் பெருமளவில் பங்களிப்பின்றி இருப்பதனையும் காணமுடிகின்றது. சில சமயக் குழுக்களின் மூலம் சட்டத்தை கையிலெடுத்து செயற்படுவதுடன அதிகாரமாகவும் பலாத்காரமாகவும் செயற்படுவதனை காணமுடிகின்றதுடன் அது தொடர்பில் சட்டமானது மௌனமாக

காணப்படுகின்றது.சட்டத்துக்கிணங்க அதன் மீதான நம்பிக்கையனது இழந்து போவதால் வேறு வழிகளை நாடுவதே எமது எண்ணமாகும். இச்சமுக நல்லிணக்கத்துக்கு பாரிய சவால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.30 ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் முன்னேறுவதுற்கு முயற்சிக்கின்ற இலங்கைக்கு அதனைத் தாங்கமுடியாதுள்ளதுடன் அத்தகைய விடயமானது இடம்பெறக்கூடாது. வேறு சமய நடவடிக்கையுடைய இடங்களில் தாக்குதல் இடம்பெறும்போது சட்டம் மற்றும் அது தொடர்பில் செயற்படும் பொலிஸாரின் செயற்பாடுகள் போதுமானதெனக் கருதமுடியாது.

குடிநீர் தொழிற்சாலையின் செயற்பாட்டினால் அசுத்தமடைவதுடன் அது தொடர்பில் சுத்தமான நீரைக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த கம்பஹா றத்துபஸ்வெல மக்களுக்கு நடாத்திய துப்பாக்கிச் சூட்டினால் நிகழ்ந்த மூவரின் படுகொலை மற்றும் ஏனையோருக்கான தாக்குதல் என்பன பாரிய மனித உரிமை மீறல்கள் ஆகும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவானது கருதுகின்றது.இதனால் சட்டத்தை விரைவாக செயற்படுத்தல் மற்றும் சட்டத்துக்கு முரணாக செயற்படும் இராணுவத்தினருக்கு எதிராக போதியளவிலான சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.பொலிசாரினால் நிருவாகம் செய்யக்கூடியதாகவுள்ளவிடத்து உணர்ச்சிவசப்பட்ட இராணுவத்தினரின் தலையீட்டினால் சமுகத்துக்கு பாதகாமான நிலைமையே ஏற்படும்.சிவில் பிணக்கு மற்றும் நடவடிக்கை தொடர்பில் இராணுவத்தினரை இணைத்துக் கொள்வதிலிருந்து விலகுதல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பில் பொலிசார் இணைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள்

நாட்டினுடைய அபிவிருத்தியானது ஸ்தீரமானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அம்மக்களுடைய உரிமைகளானவை கீழ் நிலைக்கு இட்டுச் செல்லப்படக்கூடாது. மக்கள் தொடர்பிலான அபிவிருத்தியெனில் அது அவர்களால் செய்யப்படுதல் வேண்டும். நகர அபிவிருத்தி விடயங்களில் மனிதரை வெளியேற்றுவதற்கு செயற்பட்ட முறைகள் மற்றும் கட்டிடங்களை அகற்றும்போது நிச்சயமற்ற இழப்பீடு என்பன நிச்சயமற்றதன்மையை ஏற்படுத்தும் சந்தர்ப்பம் அதிகரிக்கும் வகையில் செயற்பட்டதைக் காணக்கூடியதாகவிருந்தது.அதனால் நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளின் கீழ் சில முறைமையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.இதனால் சிலருக்கு உயர்நீதிமன்றத்திடம் நிவாரணம் கோரவேண்டியுள்ளதுடன் அதன் மூலம் வழிகாட்டல்களை பெறக்கூடியதாகவிருந்தது. இது வெளிப்படையான தன்மை என்பதுடன விழிப்புணர்வை ஊட்டும் பணியாகும். மற்றும் அனைவரினதும் உரிமைகள் மீறப்படுவதிலிருந்து விலக்குவது தொடர்பில் செயற்படுவதன் முக்கியத்துவத்தை விளங்குதல் வேண்டும்.
இவ்வாறான நிகழ்வுகள் வடக்கினைப்போல் கிழக்கிலும் பொது நோக்கங்களுக்காக காணிகளை வழங்கும் போது இடம்பெற்றதாக அறிக்கை கிடைக்கப்பெற்றதுடன் பொது நோக்கத்துக்காக செய்ய வேண்டியிருப்பின் தெரிவு அடிப்படையிலான முறைகளிலும் நிவாரணங்களுடனும் செயற்படுதல் வேண்டும்.அவ்வாறான செல்வாக்கின்றி அவ்வாறான அபிப்பிராயம் ஏற்படாத வகையில் செயற்படுதல் அவசியமானதாகும்.

## பயங்கரவாத தடைச் சட்டம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மேலும் செயற்படுவதற்கு அசராங்கமானது கூடுதலான கவனத்தைச் செலுத்தியுள்ளது.இன்னும் இதன் கீழ் கைது செய்யப்படுபவர்களின் குற்றமானது கண்டுபிடிக்கப்படின் தாமதமின்றி சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறில்லாதுவிடின் அவர்களை விடுவித்தல் வேண்டும்.பல ஆண்டு காலமாக தொடர்சியாக தடுத்து வைத்திருத்தல் கூடாது. அவ்வாறே கடந்த காலத்தில் சட்டத்துக்கு முரணாக பல படுகொலைகள் இடம்பெற்றன.இப்படுகொலைகள் பொலிசாரினால் தற்பாதுகாப்புக்காக செய்யப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.பொலிசாரின் கைதின் பின்னரான சந்தேக நபர்களின் ஆயுதங்களை தேடும் பொருட்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று ஆயுதங்களுடன் இம்முறையில் சந்தேக நபர்களை படுகொலை செய்தல் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.சட்டமானது அது நியாயமான படுகொலை என ஏற்கின்றதுடன் பெரும்பான்மையான மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளாமையே காணக்கூடியதாக உள்ளது.அப்போது சட்டமே அகௌரவத்துக்கு உட்பட்டு காணப்படுகின்றமையானது வருத்தத்துக்குரிய விடயமாகும்.பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சில சந்தர்ப்பங்களில் அரசியல் தலைவர்கள் பல்வேறு காரணங்களுக்காக கைது செய்யப்படுவதுடன் அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் சிலர் விடுதலை செய்யப்பட்டும் உள்ளனர் என்ற மக்களிடையே காணப்படும் அபிப்பிராயம் ஆகும். இதனால் இது தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து பார்த்தல் முக்கியமாகும்.

## ஊடக சுதந்திரம்

நடைமுறையிலுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களை விட வெகுசன ஊடகங்கள் பரந்துபட்டதாக காணப்படுகின்றது. இதனால் உண்மையானதும் பொய்யானதுமான தகவல்களைக் கண்டறிதல் சிரமமாக உள்ளதாக காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை யின் பதிப்பாசிரியரைத் தாக்கியமை மற்றும் சில ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியமை போன்றவற்றையும் காணக்கூடியதாகவுள்ளது. இவை நடக்ககூடாதவைவையாகும்.ஊடகத்தின் செயற்பாடுகளானவை எவ்வளவுக்கெவ்வளவு மாறுபட்டதாக உள்ளதோ

அவர்களுக்கு அவை தொடர்பில் இடமளித்தலும் வேண்டும்.அவ்வாறே வேறு ஊடகவியலாளர்களைத் தடை செய்வதன் மூலம் பொய்யான தகவல்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பமானது கிடைக்கப்பெறுகின்றது.இவ்வாறு ஊடகத்தின் செயற்பாடு தொடர்பில் ஆணைக்குழுவானது நிவாரணங்களை வழங்கும். சில செய்தி வெளியீடுகளின் போது விசேடமாக இன மற்றும் சமய குழுக்களிடையேயான பிரச்சினைகளின் போது மிகவும் உணர்வு பூர்வமான முறையிலான வெளியிடுதலானது மிகவும் பாரதுரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுடன் சமூக உறவுகளைக் குலைக்கும் வகையிலான நிலைமையை ஏற்படுத்தும். அப்போதும் அதன் பொருட்டு நிருவாகம் செய்யாது அவர்களினுடைய ஒழுக்க தர்மங்கள் மூலம் சுயாதீனமான நிருவாகத்துக்கு வழிவகுத்தல் சாலச் சிறந்ததாகும். சில அரச ஊடகங்கள் பகைமையை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு குழுக்களாகச் செயற்படுவது வருத்தத்துக்குரிய விடயமாகும். யுத்தம் முடிவடைந்த 4 ஆண்டுகள் நிறை வடைந்திருக்கும் போது அவசரகாலச் சட்டம் , படுகொலைகள்,மற்றும் பிரச்சினைகளும் முடிவடைந்துள்ளது. யுத்தத்தின் பின்னரான செயற்பாடுகளின் பின்னர் சனநாயக ரீதியிலான சமுகத்தை உருவாக்குதல் முக்கியமான பணியாக இடம்பெறுகின்றது.மக்களினுடைய மனப்பாங்கின் வேறுபாட்டினால் கட்டமைப்பிலான வேலையின் மூலம் அந்நிலையினை பெற்றுக்கொள்ளுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும்.அப்போது சட்டவாட்சியினை உறுதிப்படுத்துவதற்கும், வெளிப்படையான தன்மை, ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல், நீதிமன்றத்தின் சுயாதீனம், சிவில் சமுகத்தை வலுவூட்டுதல்,அவர்களுடைய உதவி மற்றும் செயற்திறன் மிக்க உதவியினைப் பெற்றுக் கொள்ளுதல் சாலச்சிறந்ததாகும். அதற்காக அரசானது மாற்றமடைதல் வேண்டும் என்பதற்கான தேவைப்பாடுள்ளமையானது சுட்டிக்காட்டப்படுகின்றது.

## இணைப்பு 01

### 2013 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மனித உரிமைகள் தினம் பற்றிய உரை
### தேசமானிய பிரட்மன் வீரக்கோன் அவர்களால் 2013, டிசம்பர் 10 ஆம் திகதி ஆற்றப்பட்ட உரை

- நீதியரசர் பிரியந்த பெரேரா அவா்களே,இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்கள், மற்றும் அன்பான பிள்ளைகளே!

- இவ்வாண்டுக்கான மனித உரிமைகள் தினத்தில் என்னை உரையாற்ற அழைத்தமைக்கு கௌரவ தவிசாளருக்கு நன்றி. எனக்கு அளித்த கௌரவத்தினை இட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். நான் சட்டம் பயின்ற கல்விமானோ அல்லது மனித உரிமைகள் என்னும் விடயப்பரப்பிலுள்ள தொழிலரோ அல்லது செயற்பாட்டாளரோ அல்ல. எனக்கு தெரிந்த மனித உரிமைகள் ஆனவை எனது நீண்டகால வேறுபட்ட வாழ்க்கையின் பல்வேறுபட்ட கட்டங்களினூடாக நான் பெற்றுக்கொண்ட அனுபவங்களேயாகும். நான் இது மிகவும் பயனுடையதுஎன எண்ணுகின்றேன். குறிப்பாக இளைஞர்களுக்கு இலங்கை மக்களின் மனித உரிமைகள் பற்றிய விடயங்களுடன் எனது உணர்வுகளையும் நான் பெற்றுக் கொண்ட அனுபவங்களையும் எனது உரையில் உள்ளடக்குதலானது பயனுள்ளதாகும் என எண்ணுகின்றேன்.

- மனித உரிமைகள் பற்றி எனது உரையில் தன்னம்பிக்கையின்மைக்கான காரணமானது இன்று விசேடமான மனித உரிமைகள் என்னும் விடயமானது முற்றாக அரசியல் சார்ந்ததுள்ளமையேயாகும். நாம் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் திருமதி நவின் அவர்களின் அண்மைக்கால வருகையின் போது ஏற்பட்ட குழப்பநிலையையும் நினைவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் CHOGM இன்போது எமது யுத்த முரண்பாட்டின் முடிவு தொடர்பில் பிரித்தானிய பிரதம மந்திரிக்கு எதிரான கலகத்தையும் நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இங்கு மனித உரிமைகளானவை தேவதைகள் கூட இறங்கப்பயப்படும்" நிலையில் உள்ளது என்று தெரிவித்தார். ஆனால் எப்போதும் நாம் ஆபத்தை ஏற்றுத் தயாராகுதல் வேண்டுமென்பதுடன் இது போன்ற முக்கியமான ஒன்றுகூடுகைளில் உரையாற்றுவதற்கு அதிகநேரம் இல்லை என்பதனாலும் இச்சந்தர்ப்பத்தில் பேராவலுடன் இது தொடர்பில் ஈடுபடுதல் வேண்டும்.

- **எமது உரிமைகளுக்காக தொழிற்படுதல்.**

- இவ்வருடத்துக்கான சர்வதேச மனித உரிமைகள் தினத்தின் கருப்பொருளான எமது உரிமைகளுக்காக தொழிற்படுவதில் நம் ஒவ்வொருவரினதும் முக்கியத்துவத்தை கோடிட்டுக்காட்டுகின்றதை நான் விளங்கிக் கொள்கின்றேன். அவ்வாறு செய்தல் எனது தனிப்பட்ட பொறுப்புடைமையாகும்.

- ஆனால் அவ்வாறு செய்யும் பொருட்டு நாம் எமது உரிமைகள் எவையென்பது பற்றி தெரிந்து கொள்ளுதல் கட்டாயமானதாகும்.

- அத்துடன் பல உரிமைகளானவை கடந்த ஆண்டில் அபிவிருத்தியடைந்துள்ளன. இவற்றின் தோற்றுவாய்களானவை எமது சமய பாரம்பரியங்கள், எமது கலாச்சார ஒழுக்க விழுமியங்களில் காணப்படுகின்றதுடன்,அவை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தேசிய சமூகம் - ஐக்கிய நாடுகள் முறைமையினால் அபிவிருத்தியடைந்துள்ளன. நாம் இணங்கியுள்ள பொருத்திணைகள் மற்றும் சமவாயங்களின் பயனைக்கொண்டு அவை எமது அடிப்படை உரிமைகளின் பகுதியாக வந்துள்ளதை உணர முடிகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய உறுப்பினராக நாம் இம்மனித உரிமைகளுடன் இணங்கியொழுகவேண்டியுள்ளது. அவற்றில் சிலவற்றை நோக்குவதை விரும்புகின்றேன்.இவற்றை ' எனது தனிப்பட்ட அனுபவத்திலும் எனது வாழ்நாள் அனுபவத்திலும் இவற்றில் சிலவற்றை நோக்க விரும்புகின்றேன்.

- **அரச மற்றும் அரச சார்பற்ற சேவைகள்.**

- உரிமைகள் பற்றி பேசமுன்பு இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய கருத்து ஒன்று உள்ளது. அதாவது நீங்கள் நான் அவ்வாண்டுகளில் ஆற்றிய பல்வேறுபட்ட குழப்பகரமான தொழில்களிலிருந்து வேறுபாட்டை அறிந்தி ருப்பீர்கள். நான் அரச மற்றும் அரச சார்பற்ற ஆகிய இரு சேவைகளிலும் நியாயமான பங்களிப்பை ஆற்றினேன். நான் ஒருவகையில் உருண்டோடும் கல்லில் ஒட்டாத பாசி போன்றாவேன். கடுமையாக 18 வருடங்கள் செயற்பாட்டு நிலையத்தில் இருந்ததுடன் 7 வருடங்கள் எல்லையிலும் பணியாற்றினேன். (ஒருவர் விபரிக்கும் போது பாராளுமன்றத்திலுள்ள எதிர்கட்சி என விபரிக்கலாம். அத்துடன் 25 வருடங்கள் அரச சேவையாலும் எஞ்சிய 25 வருடங்கள் அரச சார்பற்ற சேவையிலும் பணியாற்றினேன்.

- மனித உரிமைகள் மற்றும் மீறல்கள் என்பன பற்றிய எனது தனிப்பட்ட பார்வையில் அதில் உள்ள முக்கியத்துவத்தை கருதுகின்றேன். அவ்வேறுபாட்டில் நான் சில முக்கியத்துவத்தினை இங்கு கூறுகின்றேன்.

- அரசசேவையில் உள்ள ஒருவர் மனித உரிமைகளின் வெளிப்பாட்டை ஒருவித்தில் நோக்கும் போது அரச சார்பற்ற சேவையாளன் அவருக்குள்ள அனுபவத்தின் அடிப்படையில் இன்னொரு வித்ததிலும் நோக்குகின்றாரகள். நீங்கள் அப்போது எங்கு உள்ளீர்கள் என்பதன் அடிப்படையிலேயே அது அமையும். என்னுடைய வாழ்க்கையில் இது போன்ற சிக்கல்களை பல தடவை எதிர்நோக்கவேண்டியிருந்தது. சில சமயம் இந்த எல்லைகளைக் கடக்க வேண்டியிருக்கும் உங்களில் சிலருக்கு இதனையொத்த சிந்தனைகளேயிருக்கும். எப்பக்கத்தினை நீங்கள் சார்ந்திருப்பீர்கள் நீங்கள் சேவையாற்றும் அரசாங்கத்துக்கா அல்லது நீங்கள் சேவையாற்றும் மக்களுக்கா?நல்லதோ தீயதோ, நியாயமானதோ அல்லது நியாயமற்றதோ அவர்களின் பார்வையிலே இவையாயவும் தங்கி யுள்ளது.

### வேறுபடும் நோக்குகள்

- அரச சேவையாளர் பெறுகின்ற சிரேஸ்ட நன்மை என்பன அவருடைய செயலால் பாதிக்கும். இது தேசிய அக்கறையில் உள்ளது.

- இறைமை அல்லது சட்டம் பற்றிய கேள்வியொன்றும் மற்றும் கட்டளை போன்றவையும் அரச சார்பற்ற ஆளொருவர் அது நியாயமானதா ? உண்மையில் என்ன நடந்தது போன்ற கேள்விகளை கேட்கலாம். வினாக்களானவை மகிழ்ச்சிகரமற்றவை என்பதுடன் பெரும்பாலும் கேள்வி கேட்பவர் சிக்கலுக்குள்ளாவதுடன் வினாக் கேட்பவர் குறிப்பாக பிரச்சினைக்கு முகம் கொடுக்கிறார்.

### வாழ்க்கை அனுபவங்களை வரையறுப்பவை.

- எனது நிலையில் தீர்மானிக்கும் எனது வாழ்க்கை அனுபவங்களின் செல்வாக்கு செலுத்துவதற்கு முன்னரே அல்லது மனித உரிமைகளின் மீதான நிலைமைகளை தீர்மானிக்கும் எனது வாழ்க்கை அனுபவங்களில் செல்வாக்கு செலுத்துகின்றவை மற்றும் நான் முக்கியத்துவம் அளிக்கும் உரிமைகள் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளேன்.
- நான் அத்தகைய 3 அனுபவங்களை அடையாளம் கண்டுள்ளதுடன் அவை மிக முக்கியமானவையாகும் என்பதனை கருதுகின்றேன்.

- முதலாவது அனுபவமானது எனக்கு 18 வயதாக இருக்கும் போது -1948 இல் நாடு சுதந்திரமடைந்தது. அது பெப்ருவரி 4 ஆம் திகதி என்பதுடன் சபையின் தலைவரான SWRD பண்டாரநாயக்கா அவா்கள் பல ஆண்டுகளாக காலணித்துவ ஆட்சியின் பின்னா் சுதந்திர நாடாக்கப்பட்டமை தொடா்பில் அவருடைய உரை மூலம் பதிலளித்தாா். சிறந்ததொரு பேச்சாளரான பண்டாராநாயக்கா குறிப்பிட்டதாவது மக்கள்உண்மையாகவே சுதந்திரத்தை உணர வேண்டியிருப்பின் புதிய அரசினால் 4 சுதந்திரங்கள் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அவை சாதரணமாக தென்பட்டாலும் மிக ஆழமான கருத்துக்களைக் கொண்டுள்ளன கல்வியறிவின்மையிலிருந்தான விடுதலை, வறுமையிலிருந்து விடுதலை சுகவீனத்திலிருந்து விடுதலை, மற்றும் பயத்திலிருந்து விடுதலை என்பயவாகும்.

- விரைவாக அரசாங்கத்துக்காக பணியாற்ற தொடங்கினேன். அத்துடன் இவை நான்கும் மக்களிடையேயுள்ள தேவைகளையும் சரியாக உள்வாங்கியுள்ளது.

### கல்வியறிவின்மையிலிருந்தான விடுதலை

- நீங்கள் அறிவுள்ளவராகவும் படிப்பறிவின்மையிலிருந்து விடுதலைபெறுவதற்குமான அடிப்படைத் தேவையானது கல்வியாகும். அதுவே கல்விக்கான பிள்ளைகளின் அடிப்படை உரிமையாகும். இலங்கையானது இலவசமான கட்டாயக் கல்வி முறைமையையே சுதந்திரத்தின் முன்னரிருந்து கொண்டுள்ளது. நாங்கள் நாடென்றவகையில் இவ்வுரிமை தொடர்பில் போதுமான அளவு செயற்பட்டுள்ளோம் என்பதனை நாடெங்கும் பரந்த காணப்படும் பாடசாலைகள் மற்றும் கல்வியறிவு வீதத்தின்மூலம் புலனாகின்றது என்று நான் நினைக்கின்றேன. நாடெங்கிலும் 9000 பாடசாலைகளில் 4 மில்லியன் பிள்ளைகள் உள்ளனர். ஆனால் NGO ஆனது இத்தகைய விடயங்களை கல்வியின் தரம், அதன் செலவுகள் அதன் சமமற்ற தன்மைகள் தொடர்பில் கேள்வி கேட்கும். உரிமைக் கோரிக்கையாளர்கள் மற்றும் கடமை தாங்குநர்களின் கோட்பாடானது பெறுமதியானது என்பதுடன் ஒவ்வொருவரது உரிமைகளிலும் இவை உரித்தாக்கப்பட்டுள்ளது என்பது கோட்பாடாகும். மாணவர்கள் உரிமைக் கோரிக்கையாளர்களாவர். ஆசிரியர்கள் கடமை தாங்குநர்- இவர்கள் உரிமையை பூரணமாகவும் சிறப்பாகவும் வழங்குவதற்கு அரசினால் கொடுப்பனவு செலுத்தப்படுகின்றார்கள்.

- சில வேளை அறிவுக்கான மற்றும் கல்வியறிவின்மையிருந்தான விடுதலைக்கான உரிமைத் தொகுதியினுள் நாங்கள் ஊடக சுதந்தித்துக்கான உரிமை மற்றும் தகவல் பெறுவதற்கான உரிமையை உள்ளடக்குதல் வேண்டும். கருத்து வெளியிடுவதற்கான உரிமை பற்றிய நிலை என்ன.

### நோயிலிருந்தான சுதந்திரம்

- இச்சுதந்திரம் தொடர்பில் திரு. பண்டாரநாயக்காவின் கோட்பாட்டில் பெருமளவிலான உரிமைகள் உள்ளது - அவயையாவன சுத்தமான நீர், வளி, சூழல் மற்றும் ஏனையவற்றுக்கான உரிமைகள் ஆகும். அரசானது அடிப்படையான சுகாதார உரிமைகளை உறுதிப்படுத்துதல் வேண்டும். என்பதுடன் அதனால்ஐ பிரசைகள் நல்லாரோக்கியத்தை அனுபவிக்கவும் சமூக நோய்களிலிருந்து விடுதலை பெறவும் முடியும். இங்கு மீண்டும் எமது நாடானது திறனுடைய தடுப்பு வழிமுறைகள் மற்றும் மருத்துவ சேவைகளின் ஏற்பாடுகளின் ஊடாக இவற்றைச் செய்துள்ளது என்று நான் நம்புகின்றேன். உலக நாடுகளின் மத்தியில் இலங்கையானது சுகாதாரம், உயிர்வாழும் எதிர்பார்ப்பு, குழந்தை மற்றும் தாய்மாரின் மரணம், கருவளம் போன்றவை தொடர்பில் சில முக்கியமான சுட்டிக்காட்டிகள் ஆகும். தற்போது அதிகரித்துக் கொண்டிருக்கும் HIV/ AIDS மற்றும் எமது நாட்டின் சில பாகங்களில் உள்ள சிறுநீரகத்துடன் தொடர்புடைய சுகயீனங்களின் அதிகரிப்பு தொடர்பில் பல சவால்கள் உள்ளன.

- மக்களுடைய உரிமைகள் இங்கு மீறப்படுகின்றனவா ? அத்துடன் தவறுகையில் அரச பொறுப்புடைமை உள்ளதா என்பது முக்கியமான விடயமாகும்..

- இச்சுதந்திரமானது சிறந்த சுகாதார நலனை அணுகுதலானது எல்லாருக்கும் கிடைக்கின்றதா அல்லது அணுகுமுறையில் சமமின்மையானது உள்ளதா? அமைவிடம் மற்றும் செல்வமானது சுகாதாரத்துக்கான உரிமையை தீர்மானிக்கின்றதா

### வறுமையிலிருந்தான சுதந்திரம்

- வறுமையிலிருந்தான விடுதலையானது எமது எல்லா மக்களும் ஆகக்குறைந்த தேவைப்பாடுகளான உணவு, உடை மற்றும் உறையுள் ஆகியவற்றுக்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பது உட்கிடையாகவுள்ளது. பல ஆண்டுகளாக நலன்புரி கொள்கைகளானவை பல மக்களுக்கும் ஆனால் பூரண வறுமையில் (அண்ணளவாக 9மூ ) எனும் விகிதத்திலும் சமுர்த்தியின் கீழ் 1 மில்லியன் மக்கள் எள்ளமையானது சில தேவைப்பாடுகளை சுட்டிக்காட்டுகின்றது. இன்று பல குறித்த உரிமைகளானவை தொழிலுக்கான உரிமையைப் கொண்டுள்ளது.(பாதுகாப்பு மற்றும் “கௌரவம்” என்பன அதிகளவில் பயன்படுகின்றன) அத்துடன் வாழ்வாதாரத்துக்கான உரிமைகளைக் கொண்டுள்ளது.

### பயத்திலிருந்தான விடுதலை.

- பலர் இச்சுதந்திரமானது பொக்கிசமாக கருதப்படவேண்டியது என்பதாக ஏற்றுக் கொள்கின்றார்கள். (மற்றய எல்லா உரிமைகளும்) வாழ்வதற்கான அடிப்படை உரிமையானது பல ஆண்டுகளாக எம்மில் பலருக்கு ஆபத்தாக உள்ளது. பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் இந்நேரத்தில் எம்மில் பலருக்காக இவ்வடிப்படை உரிமையைப் பாதுகாத்தலானது வீரக் கடமையாகும். அந்நியப் படையெடுப்பு அல்லது உள்நாட்டுக் கலகம் என்பவற்றிலிருந்து திறம்பட பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கு ஏனைய விடயங்கள் தொடர்பில் உண்மையான பயங்கள் காணப்படுகின்றன என்பதுடன் அவை பற்றி குறிப்பிடவும் வேண்டும். சட்டமுரணான கைதிலிருந்தான விடுதலைக்கான உரிமை, சித்திரவதை, மனிதாபிமானமற்ற நடத்துகை தொர்பில் இன்னும் எமது நீதிமன்றங்களில் வழக்குகள் காணப்படுகின்றன என்பதுடன் இது எமது ஊடகங்களில் பொதுவான செய்தியுமாகும்.வீட்டுவன்முறை மற்றும் துஸ்பிரயோகம் பற்றிய கேள்வியுள்ளது. (ஒருவர் அளவையை ஏற்பின்) பல குடும்பங்களிலுள்ள பெண்களின் பெரும்பான்மையானோர் ஏதாவது ஒரு அச்சமான சூழ்நிலையில் விழுகின்றனர்.

### மனித உரிமைகளில் எமது வாழ்க்கை அனுபவத்தை மற்றும் எனது இரண்டாவது அனுபவம் பால்ரீதியான சமத்துவம்

- 1984 ஆம் ஆண்டின் லண்டனில் உள்ள தலைமையலுவகம் அமைந்துள்ள பெரிய அரசார்பற்ற நிறுவனத்துக்கு தெரிவு செய்யப்பட்டதன் மீது பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றேன். ஆங்கு 5 ஆண்டுகள் பணியாற்றினேன் அங்கு வேலையானது குடும்பத்திட்டமிடலை ஊக்குவித்தல் மற்றும் உலகம் முழுவதிலுள்ள இனப்பெருக்க

உரிமைகள் பற்றியதாக அமைந்ததது. அது குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றி மிகவும் என்னை சிந்திக்க வைத்தது. அப்போது பெண் உரிமைகளை ஆண்களுக்கு நிகரான சம அந்தஸ்தினை ஏற்படுத்துவது தொடர்பில் வேலை இருந்தது இது என்னை உலகத்தில் பல பாகங்களிலுமுள்ள பெண்களுக்கு எதிராக தொழில்முறையிலிருக்கு பாரட்சத்துக்கெதிராக உணர்வு பூர்வமாக செயற்பட வைத்தது குடும்பத்தில் அவர்களுக்கான தாம் நிலைமையானது இதற்கானகாரணங்களில் ஒன்றாகும் அவர்களுடைய பிரதான பங்கே ஆண்டுதோறும் பிள்ளை பெறுதல் என்பவற்றால் உடல் நிலையானது கீழ் நிலைக்கு தள்ளப்பட்டது.இது சமூகத்தில் பெண்களுக்கான இடம் பற்றி என்னை சிந்திக்க வைத்தது. அத்துடன், குறித்த பெண்கள் எதிரானவன்முறை மற்றும் வீட்டு வன்முறைக்கு எதிரான CEDAW ஆனது மனித உரிமை விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

**எனது இறுதியான வாழ்கால அனுபவமாற்றங்கள் சர்வதேச மனிதாபிமானச் சட்டம்.**

- 1995 இல் ஐந்து ஆண்டுகளுக்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு தடைவை GENEVA வில் சந்திக்கும் ICRC இன் சர்வதேச மதியுரை சமைக்கும் சேவையாற்ற அழைக்கப்பட்டேன் நாடுகளுக்கிடையிலும் நாடுகளினுள்ளும் இடம்பெறும் ஆயுத மோதல்களை ஆளுவதற்கான கடுமையான விதிகள் உள்ளன. இவை சமவாயங்கள் என அழைக்கப்படுவதுடன் பல ஆண்டுகளுக்கு இலங்கையினால் இணங்கிக்கொள்ளப்பட்டது. அவை சிவில்கைதிகளின் பாதுகாப்பு, யுத்தக்கைதிகளின் நலன், நோயுற்ற மற்றும் யுத்தகாலங்களில் உள்ளவர்களக்கான வைத்தியசாலைக்கான பாதுகாப்பு போன்றபல விடயங்களை மேவியுள்ளது. இவை யுத்தகாலத்தின் போது யுத்த நிறுத்தத்தின் போதும்காலத்துக்குக் காலம் மிகவும் எனது சேவை தொடர்பில் பயனுள்ளதாக அமைந்தது.

**உள்ளூரில் எமக்குள்ள பிரதான சவால்.**

- யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது உறப்பட்ட காயமுற்ற சிவிலியன்களுக்கான பொறுப்புடைமை மனித உரிமை மீறல்களுக்கான குற்றச்சாட்டுகள்
- நாம் பெரியளவில் செயற்பட்டுள்ளோம்.
- LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.
- யுத்தகாலத்தின் பின்னரான புனர்வாழ்வு
- அபிவிருத்தி
- உண்மை மற்றம் இணக்கத்துக்கான செயற்திட்டம்
- ஆனால் இன்னும் சர்வதேச சுயாதீன விசாரணைக்கீழான அழைப்புகள் உள்ளன.
- மேலே உருவரைகாட்டப்பட்டவை நீதித்துறை நிறுவனங்களின் அடிப்டையின் மீத உரிமைகளானவை அமைந்துள்ளது. அதன் நிறுவனங்கள் சட்ட ஆட்சியை உறுதி செய்கின்றன. இது சட்ட ஆட்சிக்கான கௌரவமான சூழலில் தங்கியுள்ளது.
- எமக்கு உள்ளூரில் உள்ள பிரதான சவால்
- துரதிஸ்டவசமாக எனது நம்பிக்கையில் பெரும்பாலான மக்கள் சட்டவாட்சியின் பொதுவான செயன்முறையான கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற குறுக்கு வழியையே விரும்புகின்றனர் -
- ஒருவர் எவ்வாறு இதனை மாற்ற முடியும். இங்கும் வேறெங்கிலுமுள்ள எல்லா தொழிற்படும் மனித உரிமைகளுடன் முரண்படுகின்றமையானது பாரிய சவாலாகும்.

நன்றி

இணைப்பு 02

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
## அரச சிறுவர் இல்லங்கள் மற்றும் இளம்பராய நிறுவனங்களுக்கான அறிக்கையிடும் பொறிமுறைக்கான வடிவூட்டம்

**1. அறிமுகம்**
- தாபனத்தின் பின்னனி

**2. தங்கியுள்ளவர்களை வகைப்படுத்தல்**
- வயதின் அடிப்படையில்
- தடுத்து வைத்துள்ள கால அடிப்படையில்
- ஆண் / பெண் தடுத்து வைத்துள்ள காரணத்தின் அடிப்படையில்
- பாதிக்கப்பட்ட சிறுவர் மற்றும் சந்தேக நபர்கள்
- ஏதேனும் பிறகாரணங்களினால் தடுத்துவைத்தல்

**3. ஆவணப்படுத்தல்**
- பிரத்தியேக கோவை
- பதிவேடுகள்
- சமூக விசாரணை அறிக்கைகள்
- வைத்திய அறிக்கை
- புனர்வாழ்வு திட்டம்

**4. வதிவிடம்**
- கூட்டறைகள் / அறைகள்
- தங்கியுள்ளவர்களின் கௌரவம்
- சுற்றயல் சூழ்நிலை / சுற்றாடல்

**5. பிரத்தியேக சுகாதாரம்**
- மலசலகூடங்கள்
- குளியல் வசதிகள்
- வசதிகளின் பொதுத்தரம்

**6. அனுமதி முறைமை**
- பொதுவான அனுமதி
- அனுமதிக்கான ஏதேனும் மாற்று முறைமை

**7. முகாமைத்துவம்**
- அதிகாரவமைப்பு
- ஆணை

**8. நிறுவன ஊழியர்கள்**
- இருக்கும் எண்ணிக்கை
- அனுமதிக்கப்பட்ட ஆளணி
- தேவை இருக்கும் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட ஆளணி
- தேவைப்பாடுகளும் மனத்தாங்கல்களும்

**9. ஒழுக்காற்று நடவடிக்கை**
- ஒழுக்காற்று நடவடிக்கைகளின் தன்மை
- சித்திரவதை மனிதாபிமானமற்ற மற்றும் இழிவாக நடத்துகை தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள்

**10. தங்கியிருப்போருக்கிடையிலான வன்முறைகள்**
- தங்கியுள்ளவர்களுக்கிடையிலான குழுக்கள்
- குழுக்களும் அவர்களுக்கிடையேயான வன்முறையும்
- ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகள் தொடர்பிலான தடுப்பு பொறிமுறை

**11. பால்நிலை மற்றும் தடுப்பு**
- பால்நிலை கருத்தில் கொள்ளப்பட்ட கட்டடவமைப்பு
- பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள்
- உத்தியோகத்தர் மற்றும் தங்கியுள்ளோர்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு

**12. நாள்தோறும் இடம்பெறும் நடவடிக்கைகள்**

- புனர்வாழ்வு நடவடிக்கைகள்

**13. சுகாதார வசதிகள்**

- முதலுதவி
- வைத்தியசாலை வசதிகள்
- ஊழியர் ஆற்றல்கள் மற்றும் பயிற்சி
- தேவையான உபகரணங்கள் / வாகன வசதிகள்
- சமுதாய நோய்களுக்கான தடுப்பு பொறிமுறை

**14. நீர் விநியோகம்**

- தரம்
- கிடைக்கக்கூடியமை
- அளவு
- அனுகக்கூடியமை

**15. உணவு**

- தரம்
- கிடைக்கக்கூடியமை
- அளவு
- போசனை
- மேற்பார்வைகள்

**16. கல்வி**

- முன்பள்ளி / பாடசாலை
- எழுத்தறிவுக் கல்வி
- பணியாட்டுத் தொகுதியின் இயலுமை மற்றும் பயிற்சி

**17. தொழில் பயிற்சி**

- இருப்பது மற்றும் பொருத்தமான துறை
- அனுகக்கூடியமை
- ஊழியர்களின் ஆற்றல் மற்றும் பயிற்சி
- வழங்கப்பட்ட சான்றிதழின் தன்மை
- தொழில் பயிற்சியின் தரம் மற்றும் தொழிற்சந்தை
- தகவல் தொழில்நுட்பம்

**18. வாசிப்பதற்கான வசதிகள்**

- புத்தகங்கள்
- பத்திரிகைகள்
- தகவலைப் பெற்றக்கொள்ளளும் அனுகுதலும்

**19. ஆண்மீக நிகழ்வுகள்**

- சமய நிகழ்வுகள்
- தியானம்ஃயோகாசனம்
- மேற்போந்த நிகழ்வுகளின் மதிப்பீடு
  - மாதம்
  - காலாண்டு
  - ஆண்டு
- ஏனைய மாற்று பொறிமுறை

**20. உளவியல் புனர்வாழ்வு**

- உளவளஆலோசனை
- உளவியல் சிகிச்சை
- மேற்போந்த நிகழ்வுகளின் மதிப்பீடு
  - மாதம்
  - காலாண்டு
  - ஆண்டு
- ஏனைய பொறிமுறைகள்
- ஊழியரின் ஆற்றலும் பயிற்சியும்

| |
|---|
| 21. **மீளொருங்கிணைத்தல்**<br>• முன் ஆயத்தங்கள்<br>• குடும்ப ஆதரவு<br>• நிறுவன ஆதரவு |
| 22. **தரிசிப்பாளர்கள்**<br>• பெற்றோர்.ஃசகோதர சகோதரிகள் ஃபாதுகாவலர்கள்<br>• சுற்றத்தாரும் நண்பர்களும்<br>• மதத்தலைவர்கள் சமூகப்பணியாளர்கள் |
| 23. **தொடர்பாடல்களும் தொடர்புகளும்**<br>• எழுதுதல்<br>• பெற்றுக்கொள்ளல்<br>• வசதிகள்<br>• தொலைபேசி மற்றும் தொடர்பாடல் வசதிகள் |
| 24. **சட்ட உதவிகள்**<br>• இலவச சட்ட உதவிகள் மற்றும் சட்ட உதவிகளை அனுகக்கூடிய தன்மை |
| 25. **பொழுதுபோக்கு மற்றும் ஓய்வுநேர செயற்பாடுகள்**<br>• கிடைக்கக்கூடியவை<br>• அனுகக்கூடியவை<br>• ஊழியரின் ஆற்றல் மற்றும் பயிற்சி |
| 26. **தோட்டம் செய்தல் மற்றும் சூழல் நட்புறவு செயற்பாடுகள்**<br>• கிடைக்கக்கூடியவை<br>• அனுகக்கூடியவை<br>• ஈடுபாடு<br>• ஊழியர் ஆற்றல் மற்றும் பயிற்சி |
| 27. **கழிவு முகாமைத்தவம்**<br>• கழிவு முகாமைத்துவத்தின் தன்மை<br>• சூழல் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள்<br>• எடுக்கப்பட்ட நடவடிக்கை |
| 28. **ஆபத்துக்களிலிலுந்து தடுத்தல்**<br>• ஆபத்தில்லாத இடவமைவு<br>• அனர்த்த முகாமைக்துவம் பற்றிய அறிவு |
| 29. **தொடர்புடைய நிறுவனங்களும் ஒருங்கிணைப்பும்**<br>• சிறைச்சாலை அதிகாரவமைப்பு<br>• நன்னடத்தை திணைக்களம் மற்றும் நன்னடத்தை காரியாலயம்<br>• பொலிஸ்<br>• அரச / அரச சார்பற்ற நிறுவனங்கள் |
| 30. **விளையாட்டு**<br>• விளையாட்டு வசதிகள்<br>• விளையாட்டு வசதிகளை மேன்படுத்துவதற்கான கருத்துரைகள் |
| 31. **பங்குபற்றல்**<br>• நாளாந்த செயற்பாடுகளில் தங்கியுள்ளோரின் பங்குபற்றுகை<br>• நிறுவன செயற்பாடுகளை திட்டமிடலில் தங்கியுள்ளோரின் பங்குபற்றுகை<br>• தலைமைத்துவ வாய்ப்புக்கள் |
| 32. **ஏனையவை**<br>• உள்ளடக்குவதற்கான ஏனைய கருத்துரைகள் |

## இணைப்பு 03

## வெலிவேரியா றத்துபஸ்வெல நீர்ப் பிரச்சினை மற்றும் அது தொடர்பில் 2013.08.01 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தினை கலைக்கும் போது ஏற்பட்ட பிரச்சினையுடன் தொடர்புபட்ட உள்ளக விசாரணை

| | |
|---|---|
| தினம் | 2013.08.02 |
| நேரம் | பி.ப 2.00 – 8.30 |
| இடம் | வெலிவேரியா மற்றும் அதனை அண்மித்துள்ள பிரதேசம் |
| பங்குபற்றுநர்கள் | சட்ட மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர்கள் |

மேலே உள்ள சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைவாக 2013.08.02 அன்று விசாரணைக் குழுவொன்று வெலிவேரியா றத்துபஸ்வல பிரதேசத்துக்கு சென்று விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

### வெலிவேரியா பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பொலிஸ் உத்தியோகத்தர்களைச் சந்தித்தல்.

முதலில் வெலிவேரியா பொலிசு நிலையத்துக்கு பி.ப 3.00 மணியளவில் சென்றபோது அங்கு பிரதி பொலிசுமா அதிபர் குலரத்ன, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கொடித்துவக்கு மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜயலத் பலகல்ல போன்ற சிரேஷ்ட பொலிசு உத்தியோகத்தர்கள் பொலிசு நிலையத்தில் இருந்தனர். இதன்பின்னர் அவ் உத்தியோகத்தர்களையும் அந்நிலையத்தில் பதிற்கடைமை ஆற்றும் பொறுப்பதிகாரியான பொலிஸ் பரிசோதகர் திசாநாயக்க என்பவரையும் சந்தித்தனர். இச்சம்பவத்தின் நிகழ்வுகள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டபோது அவர்கள் தெரிவித்ததாவது, 2013.08.01ஆம் தேதி வெலிவேரியா நகரம் மற்றும் பலும்மகர மற்றும் நதும்கமுவ வென்கோ தனியார் நிறுவனத்தின் அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது எனவும் இதற்கான அடிப்படைக் காரணமாக அமைந்தது வென்கோ தனியார் நிறுவனத்திலிருந்து நச்சுக்கழிவுகள் பிரதேசத்தின் நீர்நிலைகளுடன் கலப்பதனால் அப்பிரதேச மக்களின் நீர்த்தேவைக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினை காரணமாகவே இவ்வார்ப்பாட்டம் ஆரம்பித்தது என்பதாகும். தொழிற்சாலைக்கு அருகில் சில தினங்களாக எதிர்ப்பு ஏற்பட்டிருந்ததாக மேற்படி உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். 2013.08.02 அன்று மேற்கூறப்பட்ட 3 இடங்களிலும் 5000பேர் வரையிலான மக்களின் பங்களிப்புடன் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக கண்டி வீதியில் போக்குவரத்திற்கு தடையேற்பட்டதுடன் அங்குள்ள மக்கள் கலவரமடைந்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இராணுவத்தினருக்கும் கற்களால் வீசியும் பொல்லுகளினால் தாக்கியதனாலும் அச்சந்தர்ப்பத்தில் அம்மக்களைக் கலைப்பதற்காக முதலில் தண்ணீர் வீச்சு மூலமான தாக்குதலும் அதன்பின்னர் கண்ணீர் புகை குண்டு தாக்குதலும் நடாத்தி மக்களை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென்றும் கலைப்பதற்கு இயலாத காரணத்தினால் ஏனைய உத்தியோகத்தர்களின் தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிச்சூடு நடாத்த வேண்டியேற்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தனர். அங்கு ஒருவர் இறந்ததுடன் 17 பேர் வரையில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### வென்கோ தனியார் நிறுவனத்தை சோதனையிடுதல்

விசாரணைக் குழுவானது பி.ப 5.00 மணியளவில் நதுன்கமுவவில் அமைந்துள்ள மேற்படி தொழிற்சாலை அமைந்திருக்கும் இடத்திற்கு விஜயம் மேற்கொண்டபோது அதிகளவு இராணுவத்தினர் மற்றும் பொலிசு உத்தியோகத்தர்கள் அத்தொழிற்சாலையினை சுற்றியும் அதனை அண்மித்தும் பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அப்போது தொழிற்சாலை மூடப்பட்டிருந்ததுடன் பூகோளவியல் மற்றும் கனிப்பொருட்கள் அகழ்தல் பிரிவு, நீர்வழங்கல் சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, அனர்த்தமுகாமைத்துவ திணைக்களம் போன்ற அரசநிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததனையும் அவதானிக்க முடிந்தது.

### தொழிற்சாலைக்கு அருகில் உள்ள பிரதேச மக்களின் விபரங்களை விசாரித்தல்

தொழிற்சாலையை சுற்றியுள்ள பிரதேச மக்களிடமிருந்து இச் சம்பவம் தொடர்பாக விபரங்களை விசாரித்தபோது அவர்கள் கூறியதாவது இத்தொழிற்சாலையை முடும்படி இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் மக்களால் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது எனவும் அதன்போது அவ்விடயம் தொடர்பாக எந்த பொறுப்புடைய நிறுவனமும் அதில் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதாகும். இதுவரை பிரதேச மக்களுடைய குடி நீர் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வது கிணற்று நீரிலிருந்து எனவும் அப்பிரதேசத்திலுள்ள சகல கிணறுகளும் பி.எச். பெறுமானமானது மிகவும்

குறைந்த மட்டத்தில் உள்ளது என பரிசோதனையின்போது வெளிப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பி.எச். பெறுமானமானது குறைந்த மட்டத்தில் உள்ளமையானது நீரின் அமிலத் தன்மை அதிகரித்தலினால் ஆகும் என்பதுடன் அவ் அமிலங்களின் தன்மையானது ஏனைய உலோகப் பொருட்களில் கரைந்துள்ளதாலும்அதிகரித்துள்ளது என்பதாகும். அத்துடன் மக்களுக்கு இனம் காண முடியாத நோய்கள் பீடிப்பதற்கு ஆரம்பித்துள்ளது என்றும் பிரதேச வாசிகள் கூறுகின்றனர். சிறு பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் அந்நிலைமையானது அதிகமாக தாக்கம் செலுத்துகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து பிரதேச மக்களுடைய கவனத்தில் இத்தொழிற்சாலையானது இறப்பர் கையுறைகளை உற்பத்தி செய்கின்ற நிறுவனம் எனவும் அதற்காக அதிகூடியளவிலான இரசாயன நச்சுப்பொருட்கள் சேர்க்கப்படுவதுடன் அவ் இரசாயன நச்சுக் கழிவுகள் ஒழுங்கற்ற முறையில் சூழலுக்கு வெளியேற்றப்படுகின்ற காரணத்தினால் இந்நிலைமையானது ஏற்பட்டிருக்கின்றது என்பதாகும். இதற்கான தீர்வொன்றாக மக்கள் இத்தொழிற்சாலையை மூடிவிடும்படி மக்கள் கோரி இத்தொழிற்சாலையை சுற்றி சில நாட்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இறுதியாக 2013.08.01 ஆம் தேதியன்று தொழிற்சாலையை சுற்றி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது எனவும் அவ் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாக பலும்மகர மற்றும் வெலிவேரியா நகரத்தில் கடைகளை மூடி மக்கள் ஒன்றிணைந்து ஆர்பாட்டத்தை நடத்தினர் எனவும் அப்போது இராணுவத்தினரால் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்களைக் கலைப்பதற்காக தாக்குதல்களும் துப்பாக்கி சூடுகளும் நடாத்தப்பட்டதால் ஒருவர் இறந்தார் எனவும் மேலும் பலருக்கு காயங்கள் ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்து பார்த்து பொருத்தமான சட்ட ஒழுங்கினை மேற்கொள்ளும்படி அம்மக்கள் நடவடிக்கை எடுக்கும்படி மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தியோகத்தர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

## வெலிவேரியா கின்பன்வில சிறி பூர்வாராம விகாரையின் கடதொர ஆனந்த தேரரைச் சந்தித்தல்

அவ்விகாரையின் தலைவரான வெலிவேரியா அனோமதிஸ்ஸ தேரர் அவர்களை சந்திப்பதற்காக விசாரணைக்குழு சென்றபோது அவர் கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்கு சென்றிருப்பதாக அவ்விகாரையில் பணியாற்றும் தேரர் ஒருவர் கூறினார். அவ்விகாரையில் உள்ள தேரர்கள் அருந்தும் நீர் கிணற்று நீர் எனவும் அந்நீரைச் சோதித்தபோது பி.எச் பெறுமானம் 3 இனை விட குறைந்துள்ளமையால் அது குடிப்பதற்கு பொருத்தமானது அல்ல என்பதால் வேறு இடத்திலிருந்து நீரை கொண்டுவந்து பாவிப்பதாகவும் தெரிவித்திருந்தார். இந்நீர்ப்பிரச்சினை தொடர்பில் விரைவாக மக்களுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும்படி தேரர் கேட்டுக்கொண்டார்.

## புனித அந்தோனியார் தேவாலயத்தில் லக்பிரிய நோனிஸ் பாதிரியாரைச் சந்தித்தல்

நீர் பிரச்சினைக்கு மேலதிகமாக 2013.08.01ஆம் தேதி வெலிவேரியா நகரத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தினைக் கலைத்தல் தொடர்பில் மேலே சொல்லப்பட்ட பாதிரியாருடன் விசாரணைக்குழுவானது கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டது. அப்பாதிரியார் கூறியதாவது நீர்பிரச்சினை சம்பந்தமாக பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராசபக்சவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றது எனவும் அப்பேச்சுவார்த்தையின் போது கேட்டுக்கொண்ட அனைத்து உதவிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு அவர் இணங்கி கொண்டார் என்பதாகும். ஆனால் பொதுமக்களை கலைத்தமை தொடர்பில் இராணுவத்தினர் மேற்கொண்ட செயற்பாட்டு முறைமையானது கேள்விக்குரியதாகும் என்பதுடன் வீதியில் கூடியிருந்த மக்களைக் கலைத்ததன் பின்னர் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கு சென்றிருந்ததுடன் அதற்கமைவாக தேவாலயத்திலற்கு அருகில் பெரும்பாலானோர் ஒன்று திரண்டிருப்பதாகவும் தேவாலயத்துக்குள் ஒன்று திரண்டிருந்த பொது மக்களுக்கு இராணுவத்தினரால் தாக்குதல் நடாத்துவதற்கு அனுமதித்த முறைமையானது சரியான முறையில் அமையவில்லை எனவும் தெரிவித்தார்.அவ்வாறே தேவாலயத்தில் குருமார்களுக்கு தாக்குதல் நடாத்தியமையானது பிரதேசத்தில் பரவியிருந்த வதந்திகள் உண்மையற்றவையெனவும் தேவாலயத்துக்கு பாரியளவிலான சேதம் ஏற்படவில்லை எனவும் மின்சார குமிழ்கள் வீழ்ந்து சிறியளவிலான சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பிரதேசத்தில் துப்பாக்கி சூட்டினால் இறந்த அகில தினேஸ் என்னும் பாடசாலை மாணவனின் வீட்டிற்கு விஜயம் மேற்கொண்டமை

பி.ப 7.30 மணியளவில் விசாரணைக்குழுவானது மேற்படி சம்பவத்தில் இறந்த நபரின் வீட்டிற்கு சென்றவேளை அவரது இறந்த உடலம் அவ்விடத்திற்கு கொண்டுவரும் முறையினைப் பற்றி அவதானித்தது.இறந்த மாணவன் அடுத்த வருடம் உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்ததுடன் தனியார் வகுப்புக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு வரும்போது இத்துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானதாக அவ்வீட்டில் உள்ளோர் தெரிவித்தனர்.

## உள்ளக விசாரணை அறிக்கையினூடாக விசாரணைக்குழுவானது கீழேயுள்ள பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தது.

மீளாய்வு குழுவானது வெலிவேரியா நகரத்தினை அண்மித்தபோது நகரம் முழுவதும் செங்கற் துண்டுகள், தடி பொல்லுகள் போன்றன வீசப்பட்டிருந்தமையை காணக்கூடியதாக இருந்ததுடன் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. கடைகளில் மரக்கறி மற்றும் பொருட்கள் இடப்பட்டிருக்கும் மரப் பெட்டிகள் ஆங்காங்கே விழுந்து சிதறியிருந்ததுடன் இராணுவம்

மற்றும் பொலிசார் அதிகளவில் நகரின் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டிருந்ததனையும் காணக்கூடியதாக இருந்தது. மேலும் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பிரதேசத்தின் வீதியின் இருமருங்கிலும் அமைந்துள்ள வீடுகளுக்கு முன்னால் நீா் தாங்கிகள் வைக்கப்பட்டிருந்ததுடன் பவுசர்கள் மூலம் அவற்றிற்கு நீர் விநியோகிக்கப்பட்டிருந்ததனையும் காணக்கூடியதாக இருந்தது.

பிரதேசத்தின் வீதிகளில் மக்களின் நடமாட்டம் மிகவும் குறைந்தளவில் காணக்கூடியதாகவிருந்ததுடன் பிரதேசத்தில் இடம்பெற்ற நிலைமையினால் பிரதேச மக்கள் வீடுகளிலேயே இருந்தமையினையும் அவதானிக்கமுடிந்தது. அத்துடன் தொழிற்சாலை மூடப்பட்டு அங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அரச திணைக்களங்களிலிருந்து வருகைதந்திருந்த உத்தியோகத்தர்கள் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## ஆலோசனைகள்

- பிரதேச மக்களின் குடிநீா் பிரச்சினைக்கு குறுகிய காலத்தீர்வாக போதுமானளவு நீா் விநியோகத்திற்காக அதிகளவு நீாப்பவுசா்களை பெற்றுக்கொள்வதற்கு உரிய பொறுப்பு வாய்ந்த திறத்தவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

- நீண்ட காலத்தீர்வொன்றாக பிரதேசத்திற்கு குழாய் நீர் விநியோகமானது விரைவாக பெற்றுக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுத்தல்.

- மேற்படி தொழிற்சாலையிலிருந்து இரசாயன நச்சுப்பொருட்கள் சுகாதாரமற்ற முறையில் வெளியேற்றுதல் தொடர்பில் உடனடியான விசாரணை நடவடிக்கையினை மேற்கொண்டு அதற்கான சட்டநடவடிக்கை எடுக்கும்படி உரிய அதிகாரிகளுக்கு ( மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பிரதேச செயலாளர், பிரதேச சபை) ஆலோசனை வழங்குதல்

- 2013.08.02 ஆம் திகதியன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்களை கலைப்பதற்காக மிகக்குறைந்தளவிலான அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு பதிலாக தேவையற்ற முறையில் அதிகாரத்தை பாவித்தமையினால் உயிர்சசேதம் மற்றும் ஆட்களுக்கு காயம் ஏற்பட்டமை போன்றவை தொடர்பில் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு அவ்வாறு இடம்பெற்றுள்ளமை தொடர்பில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நட்டஈடு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல்

- தற்போது இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினா் நடாத்தும் விசாரணை நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் ஆணைக்குழு அறிக்கையினைப் பெற்று தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

இவ் உள்ளக விசாரணை அறிக்கையானது முழுமையான அறிக்கையாக ஆணைக்குழுவிற்கு சமா்பிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

நீதிச் செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

இணைப்பு 04

## மாகாணசபைத் தேர்தல் - 2013
## இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் தேர்தல் உத்தியோகத்தர்கள்/பாதுகாப்புப் பிரிவு/பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான வழிகாட்டல்கள்

இலங்கையின் 1978 அம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழாகவுள்ள ஒவ்வொரு பிரஜையும் வாக்களிக்கும் உரிமை, அரசியல் நடவடிக்கையில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கும் மற்றும் நீதியும் சுதந்திரமான தேர்தலுக்கான உரிமைமற்றும் சா்வதேச மனித உரிமைகள் விழுமியங்களை இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுஅங்கீகரிக்கின்றது. சகல தேர்தல் உத்தியோகத்தர்கள்/பாதுகாப்புப் பிரிவு/பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோா் தேர்தலுக்கு முன்னரானகாலப்பகுதி, தேர்தல் தினம் மற்றும் தேர்தலுக்குபின்னரானகாலப்பகுதியின் போதுகீழ்வரும் வழிகாட்டல்களை கவனத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(அ) அரசியல் அமைப்பின் உறுப்புரை 12 இன் படி“சகலஆட்களும் சட்டத்தின் முன் சமனானவா்கள் மற்றும் சட்டத்தினால் சமனானபாதுகாப்பிற்கும் உரித்துடையவா்களாவா்” இதனடிப்படையில் தேர்தலுக்குமுன்னரான, தேர்தல் தினம் மற்றும் தேர்தலுக்குபின்னரானகாலப்பகுதியில் இடம்பெறும் தேர்தல் வன்முறை முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதுடன் புலனாய்வு செய்யப்படலும் வேண்டும். மேற்படிமுறைப்பாடுகள் தொடா்பில் நடவடிக்கை எடுக்காதுவிடல் அல்லது தவிா்த்தல் அடிப்படை உரிமை மீறலுக்குதேர்தல் உத்தியோகத்தர்கள்/பாதுகாப்புப் பிரிவு/பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோா் பொறுப்பு- -டைமையுடையவராவாா்.

(ஆ) முறைப்பாடு தொடா்பான புலனாய்வானது பக்கச்சாா்பற்றமுறையில் நடாத்தப்படல் வேண்டும். அரசியல் தலையீட்டினால் அல்லது ஏதேனும் ஏற்றுக்கொள்ளமுடியாதகாரணங்களால் நடவடிக்கை எடுக்காமல்விடல் அரசியலமைப்பின் உறுப்புரை 12 இனைமீறியதாகவே கருத்திற்கொள்ளப்படும்.

(இ) தேர்தல் பிரச்சாரத்துடன் தொடா்புடையசட்டம் சமமாகபிரயோகிக்கப்படல்வேண்டும். அரசியலமைப்பின் உறுப்புரை 12(2) இல் குறிப்பிடப்பட்டவாறு“எந்தபிரஜையும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம் மற்றும் பிறப்பிடம் அல்லது ஏதேனும் அவ்வாரானதொன்றிற்கு எதிராகபாரபட்சம் காட்டலாகாது) இதற்கமையசகலஅரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் சமமாக நடாத்தப்படல் வேண்டும். குறிப்பாக ஏதேனும் அரசியல் அபிப்பிராயம் தொடா்பில் சமமற்ற நடாத்துகை அல்லதுபாரபட்சம் காட்டப்படல் அரசியலமைப்பின் உறுப்புரை 12 இனை மீறியதாக வெளிப்படுத்தப்படும்.

(ஈ) மாகாணசபைத் தேர்தல் சட்டத்திற்கு அமைய ஒலிபெருக்கிபாவனை மற்றும் தேர்தல் கூட்டங்களுக்குரிய அனுமதிவழங்கப்படல் வேண்டும். இக்கடப்பாட்டினை பூரணப்படுத்தாவிட்டதன் விளைவானது அரசியலமைப்பின் உறுப்புரை 12 மீறப்படலாக இருக்கும்.

(உ) தேர்தல் காலத்தின் போது அணிவகுப்பு தேர்தல் கூட்டத்திற்குஅமைவாகஅனுமதிக்கப்படல் வேண்டும். அணிவகுப்பிற்கான அனுமதியானது உறுப்புரை 12 மற்றும் 14, உறுப்புரை 14(1) ஏனையோருடைய, பேச்சுசுதந்திரம், ஒன்றுகூடல், ஒருங்குசேரல்,தொழில் மற்றும் நடமாடல் என்பவை உத்தரவாதப்படுத்தி விநியோகிக்கவேண்டும்.

(ஊ) துண்டுப்பிரசுரம், சுவரொட்டி மற்றும் வேட்பாளா்களின் புகைப்படம், குறியீடுகள், கொடிகள் மற்றும் பதாதைகளை காட்சிப்படுத்தல் தேர்தல் சட்டத்திற்கு அமைய அனுமதிக்கப்படல் வேண்டும். ஏதேனும் கட்சி அல்லது குழுவிற்குசிறப்புரிமையடிப்படையில் செயற்பட்டால் அதுஅரசியமைப்பின் உறுப்புரை 12 இனை மீறியதாகக் கொள்ளப்படும்.

(எ) ஏனையோரின் வாக்களிக்கும் உரிமையை மீறும் நபா் தொடா்பான சட்டத்தினை தேர்தல் உத்தியோகத்தர்கள்/ பாதுகாப்புப் பிரிவு/ பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோா் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தவேண்டும். இது அமுல்படுத்தப்படாவிட்டால் அதுஅரசியலமைப்பின் உறுப்புரை 12 மற்றும் 14(1) இனை மீறியதாகஅமையும்.

(ஏ) தேர்தல் உத்தியோகத்தர்கள் / பாதுகாப்புப் பிரிவு / பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோா் போதுமானபாதுகாப்பினைவாக்களிப்பு நிலையங்கள்மற்றும் ஏனைய ஸ்தானங்களிற்கு வழங்குவதுடன்,நாட்டின் சட்டத்திற்கு அமைய நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைமுறையை வழிப்படுத்துவதற்குஒவ் வொருமுயற்சியும் எடுக்கவேண்டும்.

(ஐ) தேர்தல் சட்டங்கள் மீறும்போதுஅரசியல் கட்சிகள் அல்லதுநபர்களின் தரம் அல்லது அதிகாரங்களுக்குஎதிராகசமமாகசட்டங்கள் நடைமுறைப்படுத்தல்வேண்டும். அரசஉடைமைகளைசேதமாக்கள் அல்லது துஷ்பிரயோகம் செய்யும் நபர்களிற்குஎதிராககண்டிப்பான - சட்டங்களை அமுல்படுத்துவது தேர்தல் உத்தியோகத்தர்கள்/பாதுகாப்புப் பிரிவு/பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கடமையாகும். உதாரணம்: அரசாங்க வாகனங்கள்,கட்டிடங்கள் மற்றும் வளாகங்கள்.

(ஒ) தேர்தலுக்கு பின்னரான வன்முறைகள் உள்ளடங்களாக தேர்தல் தொடர்பான வன்முறையை தடுப்பதற்கு தேர்தல் உத்தியோகத்தர்கள்/ பாதுகாப்புப் பிரிவு / பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பொறுப்பினை கொண்டுள்ளனர். கடந்தகால அனுபவங்களிற்கு அமைய அரசியல் அதிகாரங்கள் அவ்வாறான நடவடிக்கைகளின் போது பிரயோகிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவு அடிப்படை உரிமை மீறல்களாகும். அடிப்படை உரிமை மிறல்களை தடுப்பதற்கு சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடபடிமுறைகளிற்கு - அமைய சகல பொறுப்பான படிமுறைகளையும் பொலிஸார் எடுக்கவேண்டும்.

(ஓ) தேர்தல் உத்தியோகத்தர்கள்/பாதுகாப்புப் பிரிவு/பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் சுயமாக தொடக்கல் அல்லது ஏனைய கட்சிகளின் உத்தரவுக்கமைய நபரினை சித்திரவதை கொடூரமான,மனிதாபிமானமற்ற மற்றும் இழிவாகநடாத்துதல் அல்லது தண்டனை உள்ளடங்களாக நபர்கள் அல்லது உடைமைகளிற்கு- எதிராக எந்தவகையான மீறல்களிலும் தேர்தல் உத்தியோகத்தர்கள்/பாதுகாப்புப் பிரிவு/பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குகொள்ளக்கூடாது.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பிரியன்தஆர். பீ. பெரேரா.
தவிசாளர்,
இலங்கை மனித --உரிமைகள் ஆணைக்குழு.

**4 (ii)**



மாகாண சபைத் தேர்தல் - 2013

வாக்களித்தல் மக்களின் உரிமை ஆகும்

"வாக்களிக்க அச்சமடைய வேண்டாம். உங்கள் வாக்குகள் யாருக்கு அளிக்கப்படுகின்றது என்பதை எச்சந்தர்ப்பத்திலும் எவரும் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை என்பதை தேர்தல் ஆணையாளர் உறுதிப்படுத்தியுள்ளார்"

தற்போது இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் மக்களிற்கு சுதந்திரமும் நீதியானதுமான தேர்தலை நிலைநிறுத்துவதற்கு தேர்தல் சட்டம் மற்றும் ஏனைய நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளிற்கேற்ப அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் காணப்படுகின்றதா என்பதை கண்காணித்து தேவையான தலையீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவினர் மூலம் அரச சொத்துக்கள்/வளங்கள் ஆகியன தான்தோன்றித்தனமாக அல்லது பக்கச்சார்பாக பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை கண்காணித்தல் இதன் கீழ் இடம்பெறும்.

அதற்கமைய தேர்தல் கடமைகளில் ஈடுபடும் சகல உத்தியோகத்தர்கள் / சகல பாதுகாப்புப் பிரிவினர்/ பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலிற்கான அவசியமான அடிப்படை வழிகாட்டல்கள் ஆணைக்குழுவினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

தேர்தல் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் சகல தேர்தல் சட்ட மீறல் நடவடிக்கைகள் தொடர்பாக முறைப்பாட்டினை செய்ய மக்களை அக்கறை கொள்ள செய்யவேண்டும்.

அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக அவதானத்துடன் இருந்து கண்காணிப்பு/மீளாய்வு நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தேர்தல் நடைபெறும் மாகாணங்களில் எங்களுடைய குழுக்கள் கண்கானிப்பு நடவடிக்கைளிற்காக நியமிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளை செய்வதற்கு

**அவசர அழைப்பு : 1996**

தொலைபேசி: 011-2689064
தொலைநகல் இல. 011-2694924
பிராந்திய நிலையங்கள் : யாழ்ப்பாணம் (021-2222021)
கண்டி : (081-2228009), வவுனியா (024-2222029)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
165, கின்சி வீதி, கொழும்பு - 08.

## இணைப்பு 05

எனது இலக்கம்:- ப.கொ.ஜெ /மனிதஉரிமைகள்/ 2013
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம்
சிறைச்சாலைகள் தலைமையலுவலகம்
கொழும்பு 09
2013.07.26

அனைத்து சிறைச்சாலைஉத்தியோகத்தர்கள / உதவிசிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும்
1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுச்சட்டத்தின் பிரகாரம் எச்சந்தர்ப்பத்திலும் எவ்விடத்திற்குள்ளும் நுழைந்து நபர்களிடமிருந்து வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அல்லது விசாரணைசெகய்வதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தத்துவம் உண்டு.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கு முவுக்குகிடைக்கப்பெற்ற தத்துவங்களின் பிரகாரம் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் உள்ளவர்களின் தடுப்புநிலையங்களுக்குள் நுழைவதற்கும்,வாக்குமூலத்தைப் பெற்றுக் கொளவதற்கும் விசாரணைசெய்வதற்கும் ஆணைக்குழுவின் அனைத்துஉத்தியோகத்தர்களுக்கும் தத்துவம் உள்ளதுடன் அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஆட்கள் உள்ள இடங்களுக்குள் நுழைவதற்கும் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் விசாரணை செய்வதற்கும் உடனடியாக போதியளவு. இடத்தினையும் வசதிகளையும் பெற்றுக் கொடுத்தலும் வேண்டும்.

மேற்பார்வை நிலையிலுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் இவ்விடயம் தொடர்பில் அறிந்திருக்காதுவிடின் உடனடியாக அவ்வுத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்காகநடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கிணங்க தமது உரியநிறுவனத்தின் அலுவலர் குழாமானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தத்துவம் தொடர்பில் பூரணவிளக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது.

இக்கட்டளையை மீறும் வகையில் செயற்படுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும் என்பதுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சட்டத்தின் 24 (4) ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறுதடையேற்படுத்துகின்ற அல்லது இடமளிக்காத உத்தியோகத்தர்கள் குற்றமிழைத்தவர்களாககருதப்படுவதற்கும் ஏற்பாடுள்ளது எனவும் அறிவிக்கப்படுகின்றது.

அதனால் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இவ்விடயத்தை மேற்கொள்ளும் போதுவிழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும் எனஅறிவிப்பதுடன் இக்கட்டளை கிடைக்கப்பெற்று அதற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்வதாக உடனடியாக எனக்கு அறியத்தரவேண்டும் எனதெரிவிக்கின்றேன்.

அவ்வாறே 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் III ஆம் அத்தியாயத்திலுள்ளஅடிப்படை உரிமைகளின் கீழுள்ள 10 தொடக்கம் 17 வரையிலுள்ள உறுப்புரைகள் தொடர்பில் தங்களுடையகவனத்துக்கு அறியத்தருகின்றேன்.

பள்ளேகம
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்

Human Rights Commission of Sri Lanka.

No.165, Kynsey Road, Colombo - 08.
Tele : +94 - 11 2694925, 2685980,2685981
Fax : +94 11 2694924
sechrc@sltnet.lk www.hrcsl.lk